விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
Satstech Engineers
28, Stanley Road,
Jaffna. 021 222 8812
(C-2862)

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆனி 04 திங்கட்கிழமை (18.06.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 181

துப்பாக்கிச் சூடு தொடர்பில்


## மல்லாகம் நீதிபதி நேரில் விசாரணை



23

## குழு மோதல் ஒன்றின் போது

# பொலிஸாரின் சூட்டில் இளைஞர் ஒருவர் பலி



## மல்லாகத்தில் நேற்று இரவு சம்பவம்

**(யாழ்ப்பாணம்)** யாழ்.மல்லாகம் பகுதியில் இடம்பெற்ற குழு மோதல் ஒன்றின் போது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அப்பகுதியில் நின்றிருந்த இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டதால் நேற்று இரவு அப்பகுதியில் பெரும் பதற்றநிலை காணப்பட்டது. (23-ம் பக்.)





## விஷக்கடிக்கு இலக்கான மூவர் வைத்தியசாலையில்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியில் பாம்பு மற்றும் இனந்தெரியாத விஷக் கடிக்கு இலக்கான நிலையில் மூவர் சாவகச்சேரி ஆதார வைத் 24

## தீக்காயங்களுக்கு இலக்கான நபர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

நுளம்பு வலைக்குள் பீடி புகைக்க முற்பட்ட போது தீ பற்றிக்கொண்டதில் படுகாயமடைந்த 24

## மோதலுக்கு வாள்களுடன் தயாரான குழு மடக்கிப்பிடிப்பு

### கொடிகாம பேருந்து நிலையத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்) - கொடிகாமம் பேருந்து நிலையத்தில் வாள்களுடன் மோதலுக்கு தயாரான குழுவொன்றை கொடிகாமம் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர் இதற்கு கொடிகாமம் பொலிஸ் நிலையத்தின் புலனாய்வுப் பிரிவு உதவியுள்ளது.

நேற்று மாலை 5 மணியளவில் மோட்டார் சைக்கிள்களில் பலர் வாள்களுடன் மோதல் ஒன்றுக்குத் தயாராகி வருவதாக கொடிகாமம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த ரகசியத் தகவலின் அடிப்படையில் அங்கு வந்த புலனாய்வுப் பொலிஸார் வாள்களுடன் 23

## பொலிஸாரை தாக்கியதால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது

### பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்) இரண்டு குழுக்களுக்கு இடையே மோதல் இடம்பெற்றது. அதனைத் தடுக்க பொலிஸார் முயன்ற 23

## துப்பாக்கிச் சூடு நடத்திய பொலிஸாரை கைது செய்ய நீதவான் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மல்லாகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் உத்தி 23

## குற்றத்தை கட்டுப்படுத்த அரசு தவறிவிட்டது

### மகிந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் குற்றங்கள் தலைவிரித்தாடுகின்றன. ஆனால் அரசாங்கம் அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு துடித்துக்கொண்டிருப்பதாக முன்னாள் ஜனா 23

ஞானசாரருக்கு ஆதரவாக

## கொழும்பில் இன்று சத்தியாக்கிரகப் போராட்டம்

(கொழும்பு)

பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை விடுதலை செய்யக்கோரி இன்று கொழும்பில் பாரிய சத்தியாக்கிரகப் போராட்டமொன்றை நடத்தவுள்ளதாக அவ்வமைப்பு தெரிவித்துள்ளது. 24

## பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டை கண்டித்து பொது மக்கள் வீதி மறியல் போராட்டம்



### மல்லாகம் பகுதியில் நேற்றிரவு பதற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மல்லாகம் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் தேவாலயத்துக்கு வந்த இளைஞர் ஒருவரே கொல்லப்பட்டார் என குறித்த சம்பவத்தை கண்டித்து பொதுமக்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந் 23

## ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளருக்கு இடமில்லை - மகிந்த

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவருக்கு ஆதரவளிக்காது என ஐக்கிய 23

## கூட்டமைப்பு தமிழ் மக்களை துன்பத்தில் தள்ள முயல்கிறது

### டிலான் பெரேரா குற்றச்சாட்டு



(வவுனியா)

வன்னி மாவட்டத்தில் மைத்திரி - ரணில் கூட்டரசாங்கம் எந்தவொரு அபிவிருத்தி செயற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா குற்றம் 24

## ராஜபக்ஷவினர் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பொருளாதாரத் தடை!

(யாழ்ப்பாணம்)

ராஜபக்ஷவினர் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் நாடு பாரிய பொருளாதார நெருக்கடிகளை சந்திக்க நேரிடும் என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க எச்சரித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சுயாதீன அணியினரது நகர்வுகள் மற்றும் கூட்டு எதிர்க்கட்சியின் அரசியல் நடவடிக்கைகள் 23

## அரசியல் அமைப்பு விடயத்தில் தொடர்ந்து இழுபட முடியாது

### கூட்டமைப்பின் நிலைப்பாட்டினை தெளிவுபடுத்தினார் சுமந்திரன் எம்.பி

(கரணவாய்)

அரசியல் அமைப்பு விடயத்தில் திரையை மூடுவதற்கான சந்தர்ப்பம் இன்னும் வரவில்லை. இந்த அரசாங்கத்தால் அதை செய்ய வேண்டும் என்பதற்காக அரசாங்கத்திற்கு முண்டு கொடுத்தோம். ஆனால் தொடர்ந்தும் இழுபட்டுக் கொண்டு போகமுடியாது என த.தே.கூட்டமைப்பின் நிலைப்பாட்டினை தெளிவுபடுத்தினார் த.தே. கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், அக் கட்சியின் ஊடகப் பேச்சாளருமான 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**மஹஜன சம்பத**
திகதி 2018/06/17
சீட்டிழுப்பு இலக்கம் 3681
ஆங்கில எழுத்து: Q — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 1 9 6 8 2 9

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் 11 — திகதி 2018-06-17
ஆங்கில எழுத்து: D — வெற்றி இலக்கங்கள்: 22 35 54 73

**கொவிசெத**
திகதி 2018.06.17
சீட்டிழுப்பு இலக்கம் 1793
ஆங்கில எழுத்து: S — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 41 61 67 76

**நீரோகா**
திகதி 2018/06/17
சீட்டிழுப்பு இலக்கம் 408
லக்கினம்: மகரம் — வெற்றி இலக்கங்கள்: 26 32 42 52 38

### பொகவந்தலாவ கிலானிதோட்ட பகுதியில்
# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது

பொகவந்தலாவ கிலானிதோட்டபகுதியில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இரண்டு பேரை பொகவந்தலாவ பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

பொகவந்தலாவ பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற் கொண்ட சுற்றிவளைப்பின்போதே இந்த கைது இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து மாணிக்கக்கல் அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் மீட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்களும் கிலானிதோட்டபகுதியை சேர்ந்தவர்கள் எனவும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இன்று திங்கட்கிழமை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட உள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை பொகவந்தலாவ கெம்பியன தோட்டபகுதியில் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டுவந்த சந்தேக நபர்களிடம் இருந்து பொதிசெய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த மாணிக்கக்கல் வகைகளை கொண்ட 09 பைகளையும் பொலிஸார் மீட்டுள்ளதோடு சந்தேக நபர்கள் தப்பிச்சென்றுள்ளதாகவும் தப்பிச்சென்ற சந்தேக நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொகவந்தலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)


**தேவை**

தச்சு வேலைக்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு: 0777130872

(கி-2949)


## மனித உரிமைகள் ஆணைக்குழுவிலிருந்து அமெரிக்கா விலகுவதாக அறிவிப்பு

(கொழும்பு)

டிரம்புடைய அமெரிக்க அரசாங்கம் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவிலிருந்து தனது உறுப்புரிமையை நீக்கிக் கொள்வதற்கு தீர்மானம் எடுத்துள்ளது.

அமெரிக்காவின் இந்த தீர்மானத்தையடுத்து இன்று ஜுன் 18ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 38 ஆவது கூட்டத்தொடர் நடைபெறவுள்ளது.

தான் விலகிக் கொள்வதாக அமெரிக்க அதிகாரி, மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு உத்தியோகபூர்வமாக அதன் ஆணையாளர் செயிட் ராத் ஹுசைனிடம் அறிவித்தல் விடுத்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

அமெரிக்கா விலகிக் கொண்டதனால், மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அந்நாட்டிலிருந்து வழங்கப்பட்டு வந்த மில்லியன் கணக்கான நிதி உதவியும் நிறுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

தனது கோரிக்கையை நிறைவேற்ற மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்காததனால் அமெரிக்கா இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

# பெற்றோலிய கூட்டுத்தாபனம் ரயில்வே திணைக்களத்திற்கு 32 கோடி ரூபாயிற்கு அதிகமான பணம் செலுத்தவேண்டும்
### ரயில்வே தொழிற் சங்கங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

பெற்றோலிய கூட்டுத்தாபனம் ரயில்வே திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய 32 கோடி ரூபாயிற்கும் அதிக பணத்தை செலுத்த வில்லையென ரயில்வே தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

ரயில்வே திணைக்களத்திடம் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட காணிக்கு இந்த பணத்தை செலுத்தவேண்டியிருந்ததாக ரயில்வே தொழிற்சங்க ஒன்றியத்தின் இணை ஏற்பாட்டாளர் எஸ்.பி.விதானகே குறிப்பிட்டார்.

நாடளாவிய ரீதியில் ரயில்வே திணைக்களத்துக்கு சொந்தமான 49 காணிகளை பெற்றோலிய திணைக்களம் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்டுள்ளது.

குத்தகை பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு பல சந்தர்ப்பங்களில் ரயில்வே திணைக்கள அதிகாரிகள் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு எழுத்து மூலம் அறிவித்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லையென குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ஜீ.எஸ்.விதானகேவிடம் வினவிய போது,

குத்தகை பணத்தை செலுத்துமாறு பல தடவைகள் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு அறிவித்தல் விடுத்துள்ளதாக அவர் கூறினார்.

எனினும் இதுவரையில் அதற்கான எவ்வித பதிலையும் கூட்டுத்தாபனம் வழங்கவில்லையெனவும் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு பொறுப்பான அமைச்சர், அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த துறையினரை தொடர்புகொள்ள நாம் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை என தெரிவித்தார். (ம)


# வாழ்த்தி மகிழ்கின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 08.06.2018 அன்று இடம்பெற்ற 33ஆவது பட்டமளிப்பு விழாவில் கல்வியியல் முதுமாணிப்பட்டம் [ME.d (Hons)] பெற்ற

**திரு.பேரம்பலம் பரந்தாமன்**

B.A (Hons), Eco.spl,
P.G.D.E, ME.d (Hons)

(ஆசிரியர்-கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்)

அவர்கள் மேலும் பல பட்டங்களைப் பெற்று வாழ்வில் உயர்வடைய இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.




(4558)

வாழ்த்துவோர்:சத்தியேந்திரா சுகந்தினி குடும்பத்தினர்
சகானா, சிகான், சுவித்தா (சுவிஸ்)


## மேலும் 33 பிரதேச செயலகங்கள் 2020ஆம் ஆண்டில் நிறுவப்படும்
### உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

2020 ஆகின்ற போது நாட்டில் மேலும் 33 பிரதேச செயலகங்கள் நிறுவப்படும் என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. நாடு முழுவதிலும் தற்போது 332 பிரதேச செயலகங்கள் உள்ளன.

அவற்றின் கட்டுமான நடவடிக்கைகளும் எதிர்வரும் 2020ஆம் ஆண்டு ஆகின்றபோது நிறைவு செய்யப்படும் என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன குறிப்பிட்டார்.

குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் தற்போது உள்ள 5 பிரதேச செயலகங்களுடன், மேலும் ஐந்து பிரதேச செயலகங்கள் இணைக்கப்படவுள்ளது. அத்துடன், காலி மாவட்டத்தின் பிரதேச செயலகங்கள் 22 ஆக அதிகரிக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## ஞானசார தேரர் சிறைச்சாலை சட்டத்திற்கு அமையவே செயற்பட வேண்டும்
### சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர்

தற்போது விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொது பல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தொடர்பில் சிறைச்சாலை சட்ட ஆணைகளுக்கு அமையவே செயற்பட வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரல இதனை தெரிவித்தார்.

இதேவேளை, கலகொடஅத்தே ஞானசார தேரர் வயிற்று வலியினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளிவந்திருந்த நிலையில், இது தொடர்பில் சிறைச்சாலை ஊடக பேச்சாளர் துஷார உபுல் தெனியவிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் ஞானசார தேரரை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய போதும், அவ்வாறான எந்த பாதிப்பும் அவருக்கு ஏற்பட்டிருக்கவில்லையென துஷார உபுல்தெனிய குறிப்பிட்டார். (ம)

## பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் மடிக் கணனிகளை பயன்படுத்துவதில்லை

நாடாளுமன்ற அவையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆசனத்திற்கு அருகில் வைக்கப்பட்டிருக்கும் மடிக்கணனிகளை பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்துவதில்லை என நாடாளுமன்றத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் தகவல்கள் அந்த மடிக்கணனிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவற்றை திறந்து கூட பார்ப்பதில்லை எனவும் அவர் கூறியுள்ளார். இந்த மடிக்கணனிகளுக்கு பல கோடி ரூபாய் பணம் செலவிடப்பட்டுள்ளதாகவும் அவை பயன்படுத்தப்படாததால் அது வீண் செலவாக மாறியுள்ளதாகவும் நாடாளுமன்றத்தின் அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

# இலங்கையில் இறுதிப் போரில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரில் 500பேரின் பெயர் விபரங்கள் வெளியீடு

(ஜெனிவா)

இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரில் விரைந்து விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டியவர்களின் பட்டியலை, ஐக்கிய நாடுகள் சபையின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான குழு வெளியிட்டுள்ளது.

இந்தக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள பட்டியலில் விரைந்து விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையிலுள்ள வலிந்து காணாமலாக்கப்பட்ட 500 பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்தப் பட்டியலிலுள்ள வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் விரைவான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர்களை கண்டுபிடித்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவற்றை உறுதிசெய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான குழுவின் தலைவர் சுயெலா ஜனினா தெரிவித்துள்ளார்.

"வலிந்து காணாமலாக்கப்பட்டவரின் குடும்பம், உறவுகள், நண்பர்கள் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்டவரின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஒவ்வொரு நொடியும் கலக்கத்துடனேயே உள்ளனர்.

அவர்களைக் கருத்திற்கொண்டே, விரைந்து நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டிய நிலையிலுள்ள வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் பெயர்ப் பட்டியலை நாம் வெளியிட்டுள்ளோம்" என்றார்.

அத்தோடு, வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களால் தமக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான ஐக்கிய நாடுகள் சபைக் குழுவின் உபதலைவர் ரெய்னர் ஹுஹில் இந்த விடயம் தொடர்பில் தெரிவிக்கையில்,

"காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்டோர் தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்படுகையில் விரைந்து தலையீடு செய்வதே ஒரேயொரு வழியாகும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் எவ்வித விசாரணை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் தீர்வுக்காக உறவினர்களைக் காத்திருக்கச் சொல்வது நியாயமற்ற செயலாகும்.

தற்போது வெளியிடப்பட்டுள்ள பட்டியல் மற்றும் அதன் மீதான கோரிக்கை என்பன அவசர நடவடிக்கை என அடையாளப்படுத்தப்படுவதுடன், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் முன்னெடுக்கப்படும் முன்னேற்றகரமான செயற்பாடு எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், வலிந்து காணாமலாக்கப்பட்டவரின் உறவினர் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான ஐக்கிய நாடுகள் சபையின் குழுவின் இணைந்த முயற்சியே இந்தச் செயற்பாடு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் இந்தப் பெயர்ப்பட்டியல் இன்னும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. (இ-7)

# ராஜபக்ஷ குடும்பத்திற்குள் ஜனாதிபதி வேட்பாளரால் நெருக்கடியான சூழ்நிலை

## நளின் எம்.பி தகவல்




(குருநாகல்)

கூட்டு எதிர்க்கட்சிக்குள் 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இப்போதே ஒரு நெருக்கடியான சூழ்நிலை உருவாகி இருப்பதாக அரச நிர்வாகம், முகாமைத்துவ மற்றும் சட்டம், ஒழுங்கு தொடர்பான பிரதி அமைச்சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

குருநாகலையில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, பிரதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதி வேட்பாளராகும் எண்ணத்தில் உள்ளனர்.

ஆனால் இவர்கள் இருவரையும் ஜனாதிபதி வேட்பாளராக்குவதற்கு "மகிந்தவின் மகன் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்குவிருப்பம் இல்லை.

இதனால் ராஜபக்ஷ குடும்பம் மற்றும் கூட்டு எதிர்க்கட்சி ஆகியவற்றுக்குள் நெருக்கடியான சூழ்நிலை உருவாகி இருப்பதாகவும் பிரதி அமைச்சர் நளின் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# ஜனாதிபதி வேட்பாளரால் கூட்டு எதிரணிக்குள் குழப்பங்கள் இல்லை!

## பேரா. திஸ்ஸ தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலின் பொது வேட்பாளர் குறித்து கூட்டு எதிரணிக்குள் எவ்வித முரண்பாடுகளும் இல்லை. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றிணைந்து செயற்படவே கட்சியின் உறுப்பினர்கள் தயாராக உள்ளனர் என முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸவிதாரண தெரிவித்தார்.

2020 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கூட்டு எதிரணியில் பாரிய கருத்து வேறுபாடுகள் மற்றும் முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளதாக அரசாங்க தரப்பில் பொய்யான பிரசாரங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதுவரை காலமும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கட்சி ரீதியில் எவ்வித பேச்சுவார்த்தைகளும் இடம்பெறவில்லை. ஆனால் கட்சியின் உறுப்பினர்கள் அவர்களது தனிப்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் செயற்படும் கூட்டு எதிரணி ஒருபோதும் தனித்து தீர்மானங்களை மேற்கொள்ளாது நாட்டு நலன் மற்றும் எதிர்கால அரசியல் மையப்பாடு போன்ற நிலைகளில் இருந்தே தீர்மானங்களை மேற்கொள்ளும்.

எனவே தற்போது ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் எவ்வித தீர்மானங்களையும் மேற்கொள்வதற்கு அவசியமும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# திட்டமிட்டு விபத்து

## ஆட்டோ சாரதி உயிரிழப்பு! பௌசர் சாரதி தலைமறைவு

(பாணந்துறை)

திட்டமிட்டு ஒரு விபத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் ஒருவரை கொன்ற சந்தேக நபரான சாரதியை கைது செய்யும் நடவடிக்கைகளை பாணந்துறை வடக்கு பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

பாணந்துறை, வடக்கு கொரகபல பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்டோ மீது, பௌசர் வாகனம் ஒன்றால் மோதி இந்த விபத்து மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த ஆட்டோ சாரதி பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பாணந்துறை, மீரியவத்த பிரதேசத்தை சேர்ந்த 37 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஒரே அலுவலகத்தில் வேலை செய்யும் ஆட்டோ சாரதி மற்றும் பௌசர் வாகன சாரதி இடையே நேற்று முன்தினம் காலை அலுவலகத்தில் வாய்த்தர்க்கம் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பௌசர் வாகன சாரதி, திட்டமிட்டு விபத்தை ஏற்படுத்தி ஆட்டோ சாரதியை கொலை செய்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

விபத்தை ஏற்படுத்திய பௌசர் வாகன சாரதி தலைமறைவாகி உள்ளதாகவும் சந்தேக நபரை கைது செய்ய நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாகவும் பாணந்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# நாம் கிழக்கை ஒருபோதும் தாரைவார்க்க மாட்டோம்

## துரைராஜசிங்கம் கூறுகிறார்



(திருக்கோவில்)

தமிழரசு கட்சியானது கிழக்கை ஒரு போதும் தாரை வார்த்துக் கொடுக்காது என தமிழரசுக்கட்சியின் செயலாளர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார். அத்துடன் தமிழரசுக் கட்சியானது உறுதியுள்ள காணி போன்றது எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மறுசீராய்வும் கலந்தாய்வுக் கூட்டமும் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் தமிழரசுக் கட்சியின் பொத்துவில் தொகுதி தலைவர் கலாநேசன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, கடந்தகால நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் மக்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தமிழரசுக் கட்சியானது உறுதியுள்ள காணி போன்றது. அமைச்சும் பதவியும் காணியற்றவனுக்கு கட்டிக் கொடுக்கப்படும் வீடு போன்றது.

நாம் தற்காலிக சலுகைகளுக்காக இங்கு போராடவில்லை. எமது மக்களுக்கான ஒரு நிரந்தரத் தீர்வையே கேட்கின்றோம். அதற்கான நகர்வையே நாங்கள் பங்காளிக் கட்சிகளுடன் மேற்கொண்டு வருகின்றோம். அந்த வகையில் தமிழரசுக் கட்சியானது நிரந்தரத் தீர்வை நோக்கியே நகரும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேரர் மீது துப்பாக்கிச் சூடு நடத்த 30 இலட்சம் ரூபாய் ஒப்பந்தம்

(கொழும்பு)

கதிர்காமம் -கிரிவெஹெர விகாரையின் விகாராதிபதி கொப்வக தம்மின்த தேரர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரால் செய்து கொள்ளப்பட்ட 30 இலட் சம் ரூபாய் ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே தம்மின்த தேரர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட பொலிஸ் ஊடக பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர இதனை தெரிவித்தார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேக நபர் உட்பட இதுவரை 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த 12ஆம் திகதி குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

இதன்போது, காயமடைந்த கதிர்காமம் கிரிவெஹெர ரஜமஹா விகாராதிபதி கொழும்பில் தனியார் வைத்திய சாலை ஒன்றில் தொடர்ந்தும் சிகிச்சைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இரத்தினபுரி நீதிமன்றத்தின் களஞ்சிய அறையில் கொள்ளை

(இரத்தினபுரி)

இரத்தினபுரி நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடர்பான பொருட்கள் வைக்கப்பட்டிருந்த களஞ்சிய அறை உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ள சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

குறித்த நீதிமன்ற பாதுகாப்புக்கு இருந்த அதிகாரியொருவர் தெரிவித்த தகவலுக்கமைய, மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே, அங்கு பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

மேலும் குறித்த அறையில் வைக்கப்பட்டிருந்த 4 கிலோகிராம் கஞ்சாவானது நீதிமன்றத்துக்கு அருகில் இருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பொலிஸ் மோப்ப நாயின் உதவியுடன் நீதிமன்ற வளாகத்தை சூழவுள்ள பகுதிகளில் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ-7)

# உலக கால்பந்தில் முதல் அதிர்ச்சி
# நடப்புச் சம்பியன் ஜேர்மனிக்கு அல்வா கொடுத்தது மெக்சிக்கோ



பரபரப்பான உலக கிண்ண கால்பந்து லீக் போட்டியில் அசத்திய மெக்சிகோ அணி, 1-0 என்ற கோல் கணக்கில் உலகின் 'நம்பர் 1' ஜேர்மனியை வீழ்த்தி அதிர்ச்சி அளித்தது.

ரஷ்யாவில், 21வது உலக கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது.

நேற்று, மொஸ்கோவில் நடந்த 'எப்' பிரிவு லீக் போட்டியில் 'நடப்பு சம்பியன்' ஜேர்மனி, மெக்சிகோ அணியை சந்தித்தது.

ஆட்டத்தின் 9ஆவது நிமிடத்தில் கிடைத்த 'பிரீ கிக்' வாய்ப்பில் மெக்சிகோவின் மிகுயல் லாயுன், 'கோல் போஸ்ட்டிற்கு' மேலே தூக்கி அடித்தார். பின், 20வது நிமிடத்தில் ஜேர்மனியின் வெர்னர் அடித்த பந்தை மெக்சிகோ கோல்காப்பாளர் கில்லர்மோ ஒச்சோ சாமர்த்தியமாக பிடித்தார். ஆட்டத்தின் 35ஆவது நிமிடத்தில் சேவியர் ஹெர்ணான்டஸ் 'பாஸ்' செய்த பந்தை பெற்ற மெக்சிகோ வீரர் ஹிர்விங் லோசானோ கோலாக மாற்றினார். அப்போது மைதானத்தில் இருந்த ஜேர்மனி ரசிகர்கள் அதிர்ச்சியடைந்தனர். பின், 39ஆவது நிமிடத்தில் குரூஸ் அடித்த பந்து 'கோல்போஸ்ட்டில்' பட்டுத் திரும்பியது. முதல் பாதி முடிவில் மெக்சிகோ 1-0 என முன்னிலையில் இருந்தது.

**பலமான தற்காப்பு**

இரண்டாவது பாதியில் 83வது நிமிடத்தில் மெக்சிகோ வீரர் ஹெக்டர் ஹெரேராவை 'பவுல்' செய்த ஜேர்மனியின் தோமஸ் முல்லர் 'மஞ்சள் அட்டை' பெற்றார். மெக்சிகோ அணியின் தற்காப்பு பலமாக இருந்ததால், ஜெர்மனி அணியினரின் கோலடிக்கும் முயற்சி எடுபடவில்லை.

ஆட்டநேர முடிவில் ஜெர்மனி அணி, 0-1 என்ற கணக்கில் அதிர்ச்சி தோல்வியடைந்தது. கடந்த 7 உலக கிண்ண தொடரில் ஜேர்மனி அணி விளையாடிய முதல் லீக் போட்டியில் வெற்றி பெற்றிருந்தது. ஆனால் இம்முறை, முதல் போட்டியில் தோல்வியை சந்தித்தது.

# செர்பியா அசத்தல் வெற்றி



கொஸ்டா ரிகாவுக்கு எதிரான உலக கிண்ண கால்பந்து லீக் போட்டியில் அணித தலைவர் கோலாரோவ் ஒரு கோலடித்து கைகொடுக்க, செர்பிய அணி 1-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

ரஷ்யாவில், 21ஆவது 'பிபா' உலக கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது.

நேற்று, சமரா நகரில் நடந்த 'இ' பிரிவு லீக் போட்டியில் உலகின் 'நம்பர் 23' கொஸ்டா ரிகா அணி, 34 ஆவது இடத்தில் உள்ள செர்பியாவை சந்தித்தது.

ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் கொஸ்டா ரிகா அணிகு 'கோர்னர்' வாய்ப்பு கிடைத்தது. இதில் கோலடிக்க கிடைத்த வாய்ப்பை ஜியான்கார்லோ கான்சலேஸ் வீணடித்தார்.

இரு அணிகளும் துடிப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த, கோல் அடிக்க முடியாமல் திணறின. முதல் பாதி முடிவு கோல் எதுவுமின்றி சமநிலை வகித்திருந்தது.

இரண்டாவது பாதியில், 56ஆவது நிமிடத்தில்கொஸ்டா ரிகாவின் குஜ்மன், மிட்ரோவிச்சை 'பவுல்' செய்ய செர்பிய அணிக்கு 'பிரீ கிக்' வாய்ப்பு கிடைத்தது. இதில் செர்பிய அணித் தலைவர் அலெக்சாண்டர் கோலாரோவ் தூக்கி அடித்த பந்து, கொஸ்டா ரிகா கோல்காப்பாளர் நவாஸை ஏமாற்றி வலைக்குள் செல்ல கோலானது. ஆட்டத்தின் 86 ஆவது நிமிடத்தில் செர்பிய அணிக்கு 'பெனால்டி' வாய்ப்பு மறுக்கப்பட்டது.

செர்பியாவின் தற்காப்பு பலமாக இருந்ததால், கடைசி நிமிடம் வரை போராடிய கொஸ்டா ரிகா அணியினரால் கோலடிக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் செர்பிய அணி, 1-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

# குஷியில் குரோஷியா



நைஜீரியாவுக்கு எதிரான உலக கிண்ண கால்பந்து லீக் போட்டியில் குரோஷியா அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ரஷ்யாவில், 21ஆவது 'பிபா' உலக கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது.


காலினின்கிராடில் நடந்த 'டி' பிரிவு லீக் போட்டியில் தர வரிசையில் 20ஆவது இடத்திலுள்ள குரோஷியா, 48ஆவது இடத்திலுள்ள நைஜீரியா அணியை சந்தித்தது.

போட்டியின் 32ஆவது நிமிடத்தில், குரோஷியா அணிக்கு 'கோர்னர் கிக்' வாய்ப்பு கிடைத்தது. இதில் லூகா அடித்த பந்தை, மரியோ தலையால் முட்டி வலைக்குள் அனுப்ப முயற்சித்தார். இதை நைஜீரியா வீரர் எடிபோ, தனது இடது காலால் தடுக்க முயற்சித்தார். ஆனால், எதிர்பாராத விதமாக இவரது காலில் உரசி சென்ற பந்து, வலைக்குள் செல்ல 'சேம் சைட்' கோலாக மாறியது. முதல் பாதியில் குரோஷியா 1-0 என முன் னிலை வகித்திருந்தது.

போட்டியின் 71வது நிமிடத்தில் குரோ ஷியாவின் மரியோவை, நைஜீரிய வீரர் டோரஸ்ட் 'பவுல்' செய்ய, குரோஷியா வுக்கு 'பெனால்டி' வாய்ப்பு கிடைத்தது. இதில் லூகா மாட்ரிக் துல்லியமாக செயல்பட குரோஷியாவின் கோல் எண்ணிக்கை இரண்டாக மாறியது.

கடைசி வரை போராடிய நைஜீரிய அணியினரால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில், குரோஷியா 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சாரானஸ்க்கில் நடந்த 'சி' பிரிவு லீக் போட்டியில டென்மார்க் அணி 1-0 என, பெருவை வீழ்த்தியது.

# சிக்கலில் சண்டிமல்



மே.தீவுகளுக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் பந்தின் தன்மையை மாற்றியதாக இலங்கை அணித் தலைவர் சண்டிமல்மீது ஐ.சி.சி, குற்றசாட்டு பதிவு செய்துள்ளது.

மே.தீவுகளுக்கு எதிரான 2ஆவது போட்டி கிராஸ் ஐலெட்டில் நடக்கிறது. முதல் இன்னிங்சில் இலங்கை 253 ஓட்டங்கள் எடுத்தது. 2ஆம் நாள் ஆட்டத்தில் மே. தீவுகள் அணி முதல் இன்னிங்சில் விளையாடியது.

ஆட்ட நேர முடிவில், இலங்கை அணி பந்தின் தன்மையை மாற்றி உள்ளதாக நடுவர்கள் அலீம் டார் (பாக்.,), இயான் கோல்ட் (இங்கிலாந்து) சந்தேகம் வெளியிட்டனர்.

இது குறித்து, இலங்கை அணித் தலைவர் சண்டிமலிடம் விவாதித்தனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த, இலங்கை அணியினர் 3ம் நாள் ஆட்டத்தில் விளையாட மறுத்தனர். பின், நடுவர்கள் மற்றும் போட்டி மத்தியஸ்தர் ஶ்ரீநாத் வீரர்களிடம் பேசினர். பந்தின தன்மையை மாற்றியதற்காக, மே. தீவுகளுக்கு முதல் இன்னிங்சில் 5 ஓட், கூடுதலாக வழங்கப் பட்டது. புதிய பந்தை தேர்வு செய்ய இலங்கை அணி சம்மதித்தது. ஒருவழியாக, 2 மணி நேரம் கழிதது ஆட்டம் தொடங்கியது.

இந்நிலையில், சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்ட 'டுவிட்டர்' செய்தியில், சண்டிமல் மீது பந்தின் தன்மையை மாற்றியதாக புகார் கூறப்பட்டுள்ளது. விதிமுறையை மீறியது கண்டறியப்பட்டால், நடவடிக்கை எடுக்கப்படும்,' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரோய் சதம்: இங்கிலாந்து வாகை



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி, 38 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி, அங்கு 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டியில் இங்கிலாந்து வென்றிருந்த நிலையில், 2ஆவது போட்டி கார்டிப் நகரில் நேற்று முன்தினம் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி, முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

**ரோய் சதம்**

முதலில் துடுப்பாட்டம் செய்த இங்கிலாந்து அணிக்கு பேர்ஸ்டோவ் (42) நல்ல ஆரம்பம் கொடுத்தார். அலெக்ஸ் ஹேல்ஸ் (26), ஜோ ரூட் (22) நிலைக்கவில்லை. மழையால் போட்டி 2 முறை தடைப்பட்டது.

பின் அபாரமாக ஆடிய ஜேசன் ரோய் (120) சதம் கடந்தார். பில்லிங்ஸ் (11), மொயீன் அலி (8), வில்லே (11) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். பொறுப்பாக ஆடிய பட்லர், அரைச்சதம் கடந்து கைகொடுத்தார்.

50 ஓவர்களில் இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 342 ஓட்டங்கள் எடுத்தது. பட்லர் (91) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**மார்ஷ் அபாரம்**

சவாலான இலக்கை விரட்டிய அவுஸ்திரேலிய அணிக்கு டிராவிஸ் ஹெட் (19), ஷோர்ட் (21) ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது. ஸ்டாய்னிஸ் (9), ஆரோன் பின்ச் (0) ஏமாற்றினர். மக்ஸ்வெல் (31), அஷ்டன் ஏகார் (46) ஓரளவு கைகொடுத்தனர். அணித் தலைவர் ரிம் பெய்ன் (15), ஆன்ட்ரூ ரை (10) சோபிக்கவில்லை.

அபாரமாக ஆடிய ஷோன் மார்ஷ் (131) சதம் கடந்து நம்பிக்கை கொடுத்தார். அவுஸ்திரேலிய அணி, 47.1 ஓவரில், 304 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 38 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

போட்டியின் ஆட்டநாயகனாக இங்கிலாந்தின் ரோய் தெரிவானார். இதனையடுத்து 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இங்கிலாந்து அணி, 2-0 என முன்னிலை பெற்றது. 3ஆவது போட்டி நாளை நொட்டிங்காமில் நடக்கிறது.









## யானைகள் இடமாற்றம் நிறுத்தம்

(கொழும்பு)

சிங்கராஜா வனத்திலுள்ள யானைகள் இரண்டையும் அப்பகுதியிலிருந்து வெளியேற்றம் செய்யும் நடவடிக்கை இடை நிறுத்தப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் பாலித தெவரப் பெரும தெரிவித்துள்ளார்.

யானைகள் இரண்டையும் அப்பகுதியில் இருந்து வெளியேற்றம் செய்ய வேண்டாம் என ஜனாதிபதி, உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சிங்கராஜ வனத்திலுள்ள யானைகள் இரண்டையும் அப்பகுதியில் இருந்து வெளியேற்றினால், சிங்கராஜ வனம் உலக பாரம்பரிய தளம் எனும் அந்தஸ்தை இழந்து விடும் என யுனெஸ்கோ அமைப்பு மின்னஞ்சல் ஊடாக ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தது.

வன விலங்குத் திணைக்களத்தின் அதிகாரிகள் நேற்று முன்தினம் பெய்த கடும் மழையையும் பொருட்படுத்தாது இரண்டு யானைகளும் அதிகம் வசிக்கும் சைப்பிரஸ் வத்த பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் நேற்றுக் காலை ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய வன விலங்குத் திணைக்களத்தின் அதிகாரிகள் யானைகளை தேடும் பணியை இடைநிறுத்தியுள்ளனர். (இ-7)

# பொலிஸ்மா அதிபர் தியானத்தில் ஞானசாரரை வேண்டுமென்றே சிறையில் அடைத்துள்ளது அரசு!

## மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

(அநுராதபுரம்)

நாட்டில் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் தொடர்ந்தும் அதிகரித்து வருவதாகவும் இதற்கு அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



பொலிஸார் ஊடாக இவற்றை அடக்க வேண்டும் எனவும் பொலிஸ்மா அதிபர் தியானத்தில் இருப்பதாகவும் பாதாள உலகக்குழுக்களை அடக்கும் நடவடிக்கைகளை புறந்தள்ளி விட்டு, அரசாங்கம் தன்னை விரட்டி வருவதாகவும் மகிந்த கூறியுள்ளார்.

அநுராதபுரம் ஸ்ரீமஹா போதி மற்றும் ருவான் வெலிசே அருகில் நேற்று நடைபெற்ற வழிபாடுகளின்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்துள்ள மகிந்த ராஜபக்ஷ, இந்த 'அரசாங்கம் வேண்டுமென்றே ஞானசார தேரரை சிறையில் அடைத்துள்ளது எனவும், இது சம்பந்தமாக மெதகொட தேரர் கூறியது உண்மையானது எனவும் தெரிவித்தார். (இ-7)

# கலைஞர்களை ஊக்குவிப்பதற்கு நாம் என்றும் துணைநிற்போம்

## வேலணை பிரதேச தவிசாளர் தெரிவிப்பு

வேலணை பிரதேசத்தில் வாழும் கலைஞர்களின் ஆற்றல்களை ஊக்குவிப்பதுடன் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை கண்டுகொடுத்து எமது பிரதேச கலைஞர்களை ஊக்குவிப்பதற்கு நாம் என்றும் துணை நிற்போம் என வேலணை பிரதேச சபை தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை பிரதேச நிர்வாக செயலாளருமான நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வேலணையூர் நடாசிவராசாவின் "சின்னச்சின்ன தூறல்கள்" எனும் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது இனத்தின் வரலாற்று பொக்கிசங்கள் மற்றும் கலை இலக்கியங்களை வளர்ப்பதில் எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கடந்த காலத்தில் அமைச்சராக இருந்தபோது பல்வேறு வகையான நலத்திட்டங்களை முன்னெடுத்திருந்ததுடன் உதவிகளைப் பெற்றுக் கொடுத்து கலைஞர்களுக்கு கௌரவங்களையும் வழங்கியிருந்தார்.

ஆனாலும் எமது மக்களிடையே கலைப் படைப்புக்களை வளர்ப்பது தொடர்பில் ஆர்வம் குறைவாகவே காணப்படுகின்றது. இதற்கு காரணம் நடந்துமுடிந்த யுத்தமாக இருந்தாலும் எமது இளைஞர்கள் அந்த துறையில் அதிகளவு கவனம் செலுத்துவதில்லை என்றே கருத முடிகின்றது.

ஆனால் நாம் எமது இனத்தின் கலை கலாசார படைப்புக்களை அடுத்த சந்ததியினருக்கு எடுத்துச் செல்வதற்கு கடமைப்பட்டுள்ளோம். அந்தவகையில் கலைப்படைப்பாற்றல் மிக்க அனைவரும் ஒன்றுபட்டு அதற்காக உழைக்கவேண்டும். இதனூடாகவே எமது இனத்தின் மொழியை கலை கலாசார விழுமியங்களை மேலும் வளர்த்துச் செல்லமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மாடு திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையில் மாட்டிறைச்சிக் கடையை குத்தகை எடுத்தவரின் இறைச்சிக்காக வெட்டப்படவிருந்த மாடு ஒன்று திருட்டு போயுள்ளது. இறைச்சியாக்குவதற்காக சாவகச்சேரி பிரதேச சபையின் அனுமதியினைப் பெற்று காட்சிப்படுத்தலுக்காக மீன் சந்தை வளாகத்தில் கட்டப்பட்டிருந்த காளை மாடே இவ்வாறு திருட்டுப்போயுள்ளது. இது தொடர்பாக மாட்டிறைச்சி கடை உரிமம் பெற்றநபர் சாவகச்சேரி பிரதேச சபையிலும், பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளார். (இ-30)


## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 1945 02 17

இறப்பு 2015 06 21

அமரர் சலசாதேவி அரியபுத்திரன்

(திதி-பஞ்சமி)

எம்முளிருந்து எம்மை இயக்கிடும்
இதயக் கோயிலின் நினைவு நாள் இன்று.
அவளே எம் உயிர் மூச்சு
சிறப்பான வாழ்வின் திறப்பானாய்
குறைவின்றி வாழவைத்த துறையானாய்
இறைவன் திருவடியில் உறைகின்றாய்
நிறைவான நின்னையே நினைக்கின்றோம்.

(4477)

விழிசிட்டி, தெல்லிப்பழை. குடும்பத்தினர்.


# ஊவா மாகாண முதலமைச்சர் ஐ.தே.கவில் இணைய முடிவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையப் போவதாக அமைச்சர், ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

மொனராகலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## இராசி பலன்

**மீனம்:** கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்த முற்படுவீர்கள், தேசநலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள்.

**மேடம்:** பிள்ளைகள் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**இடபம்:** பெற்றோரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வழிபாடு காரிய வெற்றி தரும்.

**மிதுனம்:** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், இடையறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்:** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**கடகம்:** உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், தொழிலில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், காலை நேரத்திலேயே கல கலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதிக்கலாம், சுவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள்.

**சிம்மம்:** விருப்பங்கள் நிறைவேற கந்தனை வழிபட வேண்டிய நாள், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, போசனசுகமுண்டு.

**தனுசு:** குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாட்டால் ஆரோக்கியம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பொது வழியில் மதிப்பும் மரியாதையும் உயரும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பிறர் உதவியுண்டு.

**துலாம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவமுன்வரலாம், முன்னேறப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

**கன்னி:** சுபவிரயங்கள் அதிகரிக்கும் நாள், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், சயன சுகக்குறைவுகள் ஏற்படலாம்.

**இராசி பலன் - கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி, புத |
| | | | சுக், ராகு, சந் |
| கேது, செவ் | | | |
| சனி | | குரு | |

சந்திராஷ்டமம்
உத்தராடம்
காலை 9.41 மணிக்கு
சிங்-சந்

18.06.2018
ஆனி 04, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
பஞ்சமி பிற்பகல் 2.30 மணிவரை
ஆயில்யம் முற்பகல் 9.43 மணிவரை
சுபநேரம் 11.53-1.23 மணிவரை
இராகுகாலம் 7.23-8.53 மணிவரை
சஷ்டி விரதம்

வளவன்

# ஈழத்தமிழர் வரலாற்று ஆவணங்கள் காப்பகம் சாவகச்சேரி நூலகத்தில் அமைக்கப்பட வேண்டும்

## உறுப்பினர் கஜிதன் வலியுறுத்து

(சாவகச்சேரி)

ஈழத்தமிழர் போராட்ட வரலாறு எமது சந்ததியினர் ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்க வேண்டும். இனிமேலும் நாமும் நமது சந்ததியினரும் ஏமாற்றப்படக்கூடாது என்ற நோக்கத்திற்காக சாவகச்சேரி நகராட்சி மன்றம் தனது நூலகத்தில் ஈழத்தமிழர் வரலாற்று ஆவணங்கள் காப்பகம் என்ற பிரிவினை ஆரம்பிக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.கஜிதன் வலியுறுத்தியுள்ளார்.

அங்கத்தவர்கள், நலன்விரும்பிகள், பொதுமக்கள், புலம்பெயர்ந்தோர் போன்றோர் ஊடாகவும், உள்ளூராட்சி நிதியூடாகவும் ஆவணங்களைச் சேகரிக்கும் முகமாக நகரசபை உறுப்பினர்கள் யாவரும் இந்த யோசனை முன்மொழிவை ஆதரிக்குமாறும் நகரசபை உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அண்மைக் காலங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியாக தமிழ் மக்களின் அடையாளங்கள், சமூக கலாசார விழுமியங்கள், சமூக கட்டமைப்பு, இனப் பரம்பல் மற்றும் அரச நிர்வாகத்தில் தமிழரின் வகிபாகம் போன்றவற்றினை திட்டமிட்டு மாற்றியமைக்கும் நோக்குடன் பல செயற்பாடுகள் திரை மறைவிலும் நேரடியாகவும் அரங்கேறி வருகின்றன.

தமிழர்கள் எதற்காகப் போராடினார்கள், தொடர்ந்து வரும் அரசுகள் பல்வேறு ஒப்பந்தங்களையும் பேச்சுவார்த்தைகளையும் காலத்திற்கு காலம் எம்முன் தாமாகவும் சர்வதேசத்தினூடாகவும் நடைமுறைப்படுத்தும் முகமாக முன்வைத்து காலத்தைக் கடத்தியும் சந்தர்ப்பங்களை தட்டிக் கழித்தும் வந்தன் என்பது தான் வரலாறு.

அத்துடன் ஒவ்வொரு இனத்தின் போராட்ட வரலாறுகளை நாம் எடுத்து நோக்கின் அவை தொடர்பான ஆவணங்கள் யாவும் குறிப்பாக பிரசுரங்கள், வெளியீடுகள், நூல்கள், கட்டுரைகள், கவிதைகள், புகைப்படங்கள் யாவும் ஆய்வு நோக்கத்திற்காகவும், எதிர்கால சந்ததியினருக்கு வரலாற்று ஆவணங்களை காட்சிப் படுத்தும் நோக்குடனும் அவ் இன மக்களில் தொலைநோக்கு உடையவர்களினால் சேகரிக்கப்பட்டும் பேணப்பட்டும் போராட்டச் சரித்திரம் பாதுகாக்கப்படுகிறது.

நமது நாட்டில் சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியை நாம் எடுத்து நோக்கின் கடந்த 40ஆண்டு போராட்ட வரலாற்றில் எத்தனையோ பேர் இரத்தம் சிந்தி உடைமைகளையும் உறவுகளையும் இழந்துள்ளனர். எத்தனையோ இளைஞர்கள் தமது கல்வியைத் தியாகம் செய்தனர். சமாதானம், பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள் என்ற கண்துடைப்புகளால் பல தடவைகள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வந்துள்ளோம்.

இந்த வரலாறுகள் இன்று எமக்குத் தெரியும். ஆனால் எமது சந்ததியினர்களில் எத்தனை பேருக்கு தெரியவரப்போகிறது? அவ்வாறாயின் அவர்களும் வரலாறு தெரியாது மறுபடியும் மறுபடியும் ஏமாற்றப்படப் போகின்றார்களா? அவ்வாறான நிலை ஏற்படக்கூடாது. அதற்கு இடம் வைக்கக்கூடாது. எமது சந்ததியினர் ஒவ்வொருவருக்கும் எமது போராட்ட வரலாறு தெரிந்திருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-30)

# 'அமைதி கல்வித் திட்டம்' சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

பிரேம் ராவத் நிறுவனத்தின் ஏற்பாட்டில் "அமைதி கல்வித்திட்டம்" அறிமுக நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் கடந்த வெள்ளிக்கிழமை காலை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் கலந்து கொண்டதுடன், அமைதி கல்வித் திட்டத்தின் செயற்பாடுகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்களையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள். ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் மேற்குறித்த நிறுவனத்தின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)




# மஹோற்சவ விஞ்ஞாபனம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஸ்ரீஇலஞ்சியாரணியம்மண்டுவில்சோலை அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாட்கள் நடைபெறும். எதிர்வரும் 26ஆம் திகதி காலை 9 மணிக்கு இரதோற்சவமும் 27 ஆம்திகதி காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். (இ-29)

(யாழ்ப்பாணம்)

கொற்றாவத்தை செட்டித்துறை சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் இடம்பெறும். எதிர்வரும் 25ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும். இடம்பெறும். (இ)

# அங்கஜனுக்கு பிரதி சபாநாயகர் பதவி கிடைப்பதை தடுத்து தவறிழைத்துவிட்டது தமிழ்க் கூட்டமைப்பு



## டக்ளஸ் எம்.பி. சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

அங்கஜன் இராமநாதனுக்கு பிரதி சபாநாயகர் பதவி கிடைப்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தடுத்திருக்கக் கூடாது. தடுத்து தவறிழைத்து விட்டனர் என ஈ.பி.டி.பி யின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அவரது அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இவ்வாறு தொடர்ந்து முட்டுக்கட்டை போடும் செயற்பாடுகளில் தான் ஈடுபட்டு வருகின்றது. பாராளுமன்றத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு 16 ஆசனங்களும் ஈ.பி.டி.பிக்கு ஒரு ஆசனமும் தான் உள்ளது. பதினாறு ஆசனங்களையும் பயன்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு நிறைய செய்திருக்க முடியும்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றுமே செய்யவில்லை, மாறாக மற்றவர்களுக்கு முட்டுக்கட்டை போடும் முயற்சிகளில் தான் இறங்கியுள்ளது. அங்கஜனுக்கு கிடைக்க இருந்த பதவியை கூட்டமைப்பினர் தடுத்தது தவறாகும்.

மேலும் இந்து விவகார இராஜாங்க அமைச்சராக மஸ்தான் நியமிக்கப்பட்டது ஒரு பிரச்சினை அல்ல. ஆனால் மதங்களுக்கிடையில் பிளவு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மேலும் இரா.சம்பந்தனை எதிர்க்கட்சித்தலைவர் என்று சொல்வதற்கு விருப்பமில்லை. அவர் அவ்வாறு செயற்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கட்சித்தலைவர்களின் கூட்டம் ஒன்றின் போது தாங்கள் பிரச்சினைப்பட்டு பிரிந்தால் டக்ளஸ் தான் முதலமைச்சராக வருவார் என்று சுமந்திரன் கூறியதாக டக்ளஸ் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-4)

# "பூச்சிய கழிவுத் திட்டம்" குறித்து நல்லூர் பிரதேச சபையில் பிரேரணை

(யாழ்ப்பாணம்)

கழிவுகளை சிறந்த முறையில் முகாமை செய்யும் சபையாக நல்லூர் பிரதேச சபையை மாற்ற "பூச்சிய கழிவுத் திட்டம்" நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என நல்லூர் பிரதேச சபையில் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் மூன்றாவது அமர்வு கடந்த வாரம் இடம்பெற்றது. அதன் போது குறித்த பிரேரணையை சபை உறுப்பினர் கு.மதுசுதன் சமர்ப்பித்தார்.

அந்தப் பிரேரணையில் எமதுபிரதேசமானது அனைத்து விதமான கழிவுகளாலும் நிரம்பிக் குப்பைக்காடாக மாறி வருகிறது, அதற்கு பிரதான காரணங்களாக எமது பிரதேச சபையானது மாநகர சபை எல்லையில் அமைந்திருப்பதாலும், குடித் தொகை பரம்பல் கூடியதாகவும், பல்கலைக்கழகத்தையும் அதன் மாணவர் விடுதிகள் அமையப் பெற்றிருப்பதாலும் கழிவுகளின் வெளியேற்றம் அதிகமாகவுள்ளது.

முன்னர் எமது மக்கள் தமது வீட்டுக் கழிவுகளை வீதிக்கு கொண்டு வருவது கிடையாது. அவர்கள் வீட்டுக் கழிவுகளை வீட்டு வளவுகளிலேயே குழிமுறையில் கூட்டமைப்பு முறையில் சிறந்த கூட்டுப்பசளையாக மேற்கொண்டு மண்ணையும் தம்மையும் சூழலினையும் சிறப்பாக பேணி முகாமை செய்து வந்தார்கள். இன்றைய காலத்தை விட யாழ்ப்பாணத்தின் சனத்தொகை அன்று உயர்வாகவே காணப்பட்டது அப்போது கூட அவர்கள் கழிவு முகாமையை வீடுதோறும், சமூகம் தோறும் சிறப்பாக மேற்கொண்டு வந்துள்ளார்கள், இப்போது மட்டும் ஏன் மக்கள் சமூக பொறுப்பற்றவர்களாக , தமது வீட்டின் கழிவுகளை ஏன் வீதிக்கு கொண்டுவருகிறார்கள் என தெரியவில்லை, போதிய இடவசதி இல்லாதவர்கள் குப்பைகள் சேகரிக்கும் இடங்களில் குப்பைகளை போட வேண்டும். மாறாக பொது இடங்கள், வீதியோரங்கள், வாய்க்கால்கள், தனியார் காணிகளில் கண்மூடித்தனமாக குப்பைகளை வீசி விட்டு நகருகிறார்கள்.

எனவே நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் சிறந்த கழிவு முகாமையை ஏற்படுத்தி, கழிவு வெளியேற்றப்படும் வீதத்தினை குறைப்பதற்காக நவீன தொழில்நுட்பங்களை "கழிவு முகாமைத்துவத்தில்" புகுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதாவது கழிவுகள் வெளியேற்றப்படும் பொருட்களை நுகர்வதைக் குறைத்தல், திரும்ப திரும்ப பயன்படுத்தல், மீள்சுழற்சிக்கு உட்படுத்தல் போன்றவற்றாலும், மற்றும் மக்களிடையே சிறந்த விழிப்பூட்டல்களினை ஏற்படுத்தியும், கொழும்பு , கண்டி மாநகரசபை போன்ற முன்மாதிரியாக கழிவு முகாமை செய்யும் சபைகளினூடாக அனுபவத்தினை மற்றும் தொழில்நுட்பங்களை பகிர்ந்தும் வரும் காலத்தில் குறிப்பாக 2020 க்குள் எமது சபை கழிவுகளை வெளியேற்றும் வீதத்தில் குறைந்த சபையாக மாற்ற, கழிவுகளை சிறந்த முறையில் முகாமை செய்யும் சபையாக மாற்ற இந்த "பூச்சிய கழிவு திட்டம் " என்ற திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார். (இ-9)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைகள்

13. 1. உயர்ந்தது
    2. சென்றான்
    3. பறந்தன.
14. 1. மாநிலம்
    2.இராச்சியம்
15. 1. நிறையச் சம்பாதித்தல்
    2. போருக்கு வருமாறு அழைத்தல்
16. 79090
17. XVII
18. 9059
19. 5115
20. 145
21. 175
22. 103 ரூபா
23. 3/8 5/8
24. 32m
25. 2/8, 1/4
26. 200 ரூபா
27. 66
28. கனவுரு
29. 1. 360
    2.72
30. 14.40 h
31. நான்காம் படிமுறை
32. தேள்
33. கொழும்பில்
34. அஞ்சல் அதிபர்
35. நெற்கதிர்
36. அபயவாவி, பண்டுகாபயன்
37. வனைசில்லு
38. சித்திரை
39. அல்பனா
40. சதைகரைச்சான்
41. நத்தை
42. நீலம், மஞ்சள்
43. கம்பளித் தையல்
44. மாப்பொருள்
45. கிராம அலுவலர் காரியாலயம்
46. இலைகளின்கீழ்ப்புறத்தில்
47. பருகுவதற்குப் பானம் கொடுத்தல்
48. வெந்நீரில்
49. செண்பகம்
50. மா
51. வெள்ளி
52. தாயம்
53. காற்றுத்திசைகாட்டி
54. சிவப்பு
55. எருது
56. துருத்தி
57. தேங்காய் எண்ணெய்.
58. பாதுகாப்பான பகையிரதக் கடவை முன்னால்
59. காலாவதித் திகதி
60. 1972



வரலாற்று சிறப்புமிக்க யாத்திரைத் திருத்தலமான மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய திருநாள் திருப்பலி நேற்றுக் காலை மன்னார் மறை மாவட்ட ஆயர் கலாநிதி மேதகு இம்மானு வேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் யாழ். மறைமாவட்ட ஆயர் கலாநிதி மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது. திருப்பலிக்கு முன்னதாக இரு ஆயர் களும் மங்கள வாத்தியம் முழங்க வரவேற்கப்பட்டனர். திருப்பலியைத் தொடர்ந்து சுற்றுப் பிரகாரமும் திருச்சொரூப ஆசீர்வாதமும் இடம்பெற்றது. (படங்கள்:- ஈச்சமோட்டை செய்தியாளர்)


# கிருஷ்ணா அடகு சேவை

மேற்குறிப்பிடப்பட்ட எமது ஸ்தாபனத்தில் 2017 ஆம் ஆண்டு 31.11.2017 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2018 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதி (15.07.2018) இற்கு முன்னர் மீட்கவும். மீட்கமுடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத்தவறின் 15.07.2018 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (2017 ஆம் ஆண்டு 9 ஆம் மாதம் 01 ஆம் திகதி முதல் 11 ஆம் மாதம் 31 ஆம் திகதிக்கு இடைப்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்)


உரிமையாளர் A.S.Surendran

இல.370, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.இல:-021 490 0311

இல 09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்
தொ.இல:-021 222 5046

(சி-2949)


# ஞானசாரரை சிறையிலிருந்து மீட்க பொதுபல சேனா தீவிர முயற்சி!



(கொழும்பு)

வெலிக்கடை சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு இவ்வாரம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

ஞானசார தேரரை அனைத்து குற்றங்களிலிருந்தும் குற்றமற்றவராகக் கருதி அவரை விடுதலை செய்யுமாறு கடந்த 14ஆம் திகதி குறித்த மேன்முறையீடு தாக்கல் செய்யப்பட்டதாக பொதுபல சேனாவின் பிரதான நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், குறித்த மேன்முறையீடு எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

இந்த நிலையில், குறித்த வழக்கை முன்கூட்டியே விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை தேரரின் சட்டத்தரணிகள் மேற்கொண்டு வருவதாகவும் டிலந்த விதானகே தெரிவித்துள்ளார். (இ-7)



வடமாகாணசபை உறுப்பினர் அகிலதாஸ் சிவக்கொழுந்து பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் திருமதி ச.ஜெயமோகனா குடும்பத்தினருக்கு வீடு திருத்த வேலை செய்வதற்காக 25 ஆயிரம் ரூபா பெறுமதியான சீமெந்து பைக்கற்றுக்களை நகரசபை அலுவலகத்தில் தவிசாளர், செயலாளர் ஊடாக வழங்கினார்.

(படம்:- மகாலிங்கம்)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4ஆம் பாதம்<br>கி.பா:35 செவ் 2 இல்<br>தகைமை/தொழில்:A/L இத்தாலி PR<br>தொ.இ: B/8687 | பிறப்பு: 1989 கிறிஸ்தவம் RC<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BSC<br>பொறியியலாளர் அரச தொழில்<br>தொ.இ: G/8000 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3ம்பாதம்<br>கி.பா: 16 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'3'<br>தகைமை/தொழில்:B.COM HNDA<br>அரசதொழில்<br>தொ.இ: B/8688 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 3ம்<br>பாதம் கி.பா: 22 செவ் 12 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L தனியார்<br>தொழில்<br>தொ.இ: G/8105 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 2ம்பாதம்<br>கி.பா: 54 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/Lதனியார்<br>தொழிலல்<br>தொ.இ: B/8689 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 26<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/8112 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4ம்பாதம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:ACCA<br>கணக்காளர் லண்டன் குடியுரிமை<br>தொ.இ: B/8690 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் சூரிசெவ் 3இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:MBBS வைத்தியர்<br>தொ.இ: G/8113 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி
க.அன்பழகன்

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும் திருமதி க.அன்பழகன் அவர்கள் 12.06.2018 செவ்வாய்க்கிழமை அன்று கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தினை பெற்றமைக்காக வாழ்த்துவதோடு அவர் மேலும் பல பட்டங்களை பெற வாழ்த்துகின்றோம்.




வாழ்த்துவோர்
பாடசாலைச் சமூகம்
கிளி/ வேம்போடுகேணி சி.சி.த.க.பாடசாலை

(4557)

# "பாலைவனத்திற்கு எதிரான போராட்டம்" 2 ஆயிரம் பலாக்கன்றுகள் நாட்டல்







(கண்டாவளை)

"பாலைவனத்திற்கு எதிரான போராட்டம்" எனும் தேசிய நிகழ்வு கிளிநொச்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய நாட்டில் நிலவுகின்ற வரட்சி மற்றும் நீர் முகாமைத்துவத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விசேட வேலைத்திட்டமாக குறித்த தேசிய வேலைத்திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சந்ரட்ண பல்லேகமவின் தலைமையில் கிளிநொச்சியில் குறித்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் 2 ஆயிரம் பலாக்கன்றுகள் நேற்று முற்பகல் 10 மணிக்கு ஒரே நேரத்தில் நாட்டி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் நாட்டின் சுற்றாடல் மற்றும் நீர் முகாமைத்துவம் ஆகியவற்றை பாதுகாப்பதனால் வரட்சிக்கு எதிராக அனைவரும் கரம் கோர்க்க முடியும் என்பதே நோக்கம் என சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் தெரிவித்தார்.(2-315)




# முகமாலை, இத்தாவிலில் மீள்குடியேறிய குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகள்

(மல்லாவி)



இலங்கை இராணுவத்தின் 23,ஆவது கெமுனு படைப் படைப்பிரிவின் ஏற்பாட்டில் முகமாலை, இத்தாவில் ஆகிய பகுதிகளில் யுத்த சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் முகமாலை மக்கள் குடியிருப்புப் பகுதியில் நடை பெற்றுள்ளது.

இதன் போது, இத்தாவில் பகுதியில் 20 குடும்பங்களுக்கு 100 தென்னங்கன்றுகளும் முகமாலைப் பகுதியில் 20 குடும்பங்களுக்கு 20 தென்னங் கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பயனாளிகளுக்கு தென்னங் கன்றுகளை இராணுவத்தின் 23 ஆவது கெமுனு படைப் பிரிவின் முகமாலை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி லெப்ரினன்ட் கேணல் கே.எம்.என். நிக்குவுர கலந்து கொண்டு பயனாளிகளுக்கு தென்னங் கன்றுகளை வழங்கி வைத்துள்ளனர்.

இந் நிகழ்வின் போது கிராமட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், இராணுவ அதிகாரிகள் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்துள்ளனர்.(2-15)

# இலவங்குடாவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இந்திய இழுவைப் படகுகளுக்கு விரைவில் தீர்வு

## பூநகரி பிரதேச செயலாளர் கிருஷ்னேந்திரன் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கிராஞ்சி இலவங்குடாப்பகுதியில் சுமார் 35 இற்கும் மேற்பட்ட இந்திய இழுவைப்படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்ற பிரச்சினைக்கு விரைவில் தீர்வொன்றைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பூநகரி பிரதேச செயலாளர் எஸ்.கிருஷ்னேந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டபோது, கைப்பற்றப்பட்ட சுமார் 35 இற்கும் மேற்பட்ட இந்திய இழுவைப்படகுகள் மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் நீதிமன்றங்களின் கட்டளைக்கு அமைவாக கிளிநொச்சி கிராஞ்சிப்பகுதியில் அமைந்துள்ள கடற்படையினரின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளன.

குறித்த படகுகள் கிராஞ்சி சிறிமுருகன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க எல்லைக்குட்பட்ட இலவங்குடா வெள்ளக்கரைப்பகுதியில் கைப்பற்றப்பட்ட படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதனால் அவற்றிலிருந்து வெளியேறும் எண்ணெய் கசிவுகளால் கடல்வாழ் உயிரினங்கள் இறப்பதுடன், அந்தப் பகுதியில் தொழில் செய்த 45 இற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் தொழில் செய்ய முடியாது தடுக்கப்பட்டுள்ளனர்.

இந்தப்பிரதேசத்தில் சிறகு வலை, நண்டு வலை போன்ற தொழில்களைச் செய்து வந்த தொழிலாளர்கள்வேறு தொழில்களைச் செய்யவேண்டியிருப்பதாகவும் குறித்த இந்திய இழுவைப்படகுகளை அகற்றி தருமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்திருந்த நிலையில் கடந்த வாரம் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் குறித்த விடயம் வலியுறுத்தப்பட்டது.

இதனையடுத்து தற்போதைய நிலைப்பாடு தொடர்பில் பூநகரிப் பிரதேச செயலாளர் எஸ்.கிருஸ்னேந்திரனுடன் தொடர்பு கொண்டு வினவிய போது, இந்த விடயம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு அது தொடர்பில் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

படகுகள் தொடர்பான வழக்குகள் மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் நீதிமன்றங்களில் இருப்பதனால் அந்த நீதிமன்றத் தீர்ப்புக்களின் பிரகாரமே நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

குறித்த படகுகள் சட்டநடவடிக்கைகளின் கீழ் உள்ளமையினால் நீதிமன்ற உத்தரவிற்கு அமையவே செயற்படமுடியும். மாவட்ட அரசாங்க அதிபருக்கும் இது தொடர்பான அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வொன்றைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பூநகரிப் பிரதேச செயலாளர் எஸ்.கிருஸ்னேந்திரன் தெரிவித்துள்ளார். (2-315)

# வடக்கு மாகாணசபை முல்லைத்தீவிற்கு என்ன செய்துள்ளது; செய்திருக்கின்றது

## பதில் கூற முடியவில்லை-புவனேஸ்வரன்

(முல்லைத்தீவு)

நாட்டில் இடம்பெற்று முடிந்த போர் காரணமாக முல்லைத்தீவு மாவட்டம் அழிவடைந்து இன்று மீண்டெழுந்து கொண்டிருக்கின்றது. இந்நிலையில் மக்கள் எங்களிடம் கேட்கும் கேள்விகள் "வடக்கு மாகாண சபை முல்லைத்தீவு மாவட்டத்திற்கு என்ன செய்துள்ளது, என்ன செய்திருக்கின்றது" என்று கேட்கின்றபோது எங்களால் பதில் கூற முடியாத நிலையில் இருக்கின்றோம் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட விஸ்வமடு பகுதியில் அட்டைக்குளம் சுற்றுலா மையம் நேற்று முன்தினம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனினால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறு கையில்,

இதில் பிரதேச சபை உறுப்பினர்களும் சரி மாகாண சபை உறுப்பினர்களும் சரி மக்களுக்கு பொருத்தமான பதில்களை சொல்லமுடியாமல் இருக்கின்றோம். இவற்றை சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்கின்றபோது போதுமான நிதி இல்லை. நிதி விடுவிக்கப்படவில்லை என அதிகாரிகள் ஊடாக எங்களுக்கு தெரிவிக்கப்படுகின்றது.

எங்களின் காலங்களை நாங்கள் எல்லோரும் கடத்திக்கொண்டிருக்கின்றோம். மக்கள் எதிர்பார்க்கும் சிறிய அபிவிருத்திகளை நாங்கள் செய்யமுடியாது இருக்கின்றோம். இன்று மக்களின் பிரச்சினைகளை தீர்க்கமுடியாமல் எங்களின் அரசியல் ரீதியான உள்ளார்ந்த பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்றுதான் சிந்தித்துக்கொண்டிருக்கின்றோம்.

அடுத்த தேர்தல் வரப்போகின்றது. மக்களுக்கான அரசியல் தீர்வினை பெற்றுக்கொடுப்பதற்கு நாங்கள் எவ்வாறு எதிர்வரும் காலங்களில் செயற்படபோகின்றோம் என்ற திட்டங்கள் எங்களிடம் இல்லை.

இந்நிலையில் மக்களின் அபிவிருத்திக்கான பணத்தை விகிதாசார ரீதியில் ஒதுக்காது மேலதிகமாக ஒதுக்க வேண்டும். வருகின்ற நிதிகள் யாழ்ப்பாணத்திற்கு அதிகமான நிதிகளும் ஏனைய மாவட்டங்களுக்கு மீதியையும்தான் ஒதுக்குகின்றார்கள்.

நாங்கள் எல்லாம் வடக்கு மாகாணம் என்று சொல்கின்றோம் அபிவிருத்தி என்ற போர்வையில் நிதிப்பங்கீடு என்று வரும்போது பாகுபாடுகள் காட்டப்படுகின்றன.

நிர் வாக ரீதியான விடயங் களின் அமைச்சுக்கள் அக்கறை காட்டவில்லை.

முல்லைத்தீவு மாவட்டம் போரால் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்று ஏற்றுக்கொண்டு கரிசனைகளை காட்ட வேண்டும். அவ்வாறு இல்லாமல் யாரும் கரிசனை காட்டவில்லை. ஒதுக்கப்பட்ட மாவட்டமாகவே முல்லைத்தீவு மாவட்டம் தொடர்ந்து இருக்கின்றது. கடந்தகால நடவடிக்கைகள் அவ்வாறுதான் இருக்கின்றது.

இவ்வாறான நிலையில் இனிவரும் காலங்களில் வடக்கு மாகாணசபை இருப்பது வெறும் நான்கு மாத காலம் தான். அவ்வாறான நிலையில் எங்களின் கருத்துக்களையும் கேட்க வேண்டும்.

போரால் பாதிக்கப்பட்ட மாவட்டம் புனரமைக்கப்பட வேண்டும். சாதாரணமக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப் பட வேண்டும் என்றும் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார். (2-281)

# தேசிய இந்து சமய அறநெறி கல்வி விழிப்புணர்வு நிகழ்வு

இந்து சமய அறநெறி கல்வியின் முக்கியத்துவத்தை இந்துமக்கள் மத்தியில் வலுப்படுத்தும் வகையிலான விழிப்புணர்வு பேரணி நிகழ்வும் நேற்று மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், இந்து சமய அறநெறி கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் முகமாக தேசிய இந்து சமய அறநெறிகல்வி விழிப்புணர்வு மாதம் மற்றும் இந்து சமய அறநெறி கல்வி - கொடி தினம் என்பன திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரது குரு பூஜை தினமாகிய மே மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகிறது.

அந்த வகையில் மடு பிரதேச சைவ பேரவையின் தலைமையிலும், இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆ.ஜீவிதாவின் ஒழுங்கமைப்பிலும் "இளம் சிறார்களின் சுபீட்சமான எதிர்காலத்துக்கு அறநெறி கல்வி தேவையென உணர்வீர்" என்ற தொனிப்பொருளில் நேற்று குறித்த விழிப்புணர்வு பேரணி மற்றும் நிகழ்வு மன்னார் பிரதேச செயலக பிரிவில் உள்ள இரணை இலுப்பைக் குளம் சிவன் கோவிலில் நடைபெற்றது.

இதில் இந்துசமய குருக்கள், விளாத்தி குளம், இலுப்பங்குளம், பரசங்குளம், முள்ளிகுளம் ஆகிய பகுதிகளிலுள்ள ஆலயங்கள், அறநெறி பாடசாலை மாணவர்கள், பாடசாலை அதிபர்கள், சைவ பேரவையின் உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டிருந்தனர். (2-9)



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட விஸ்வமடு பகுதியில் அட்டைக்குளம் சுற்றுலா மையமானது வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை நிதி 4.54 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டது. இந்த அட்டைக்குளம் சுற்றுலா மையத்தை வடக்கு மாகாண முதலமைச்சர் சி. வி விக்னேஸ்வரன் நேற்று முன்தினம் திறந்து வைத்தார். நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க சிவநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ புவனேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ .பிரேமகாந்த் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் அதிகாரிகள், பொதுமக்களென பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

## பொருளாதார மத்திய நிலைய வர்த்தகர்களால்

# கிளிநொச்சிக்கு இன்று வருகைதரும் ஜனாதிபதிக்கு மகஜர் கையளிக்கப்படும்

(கண்டாவளை)

கிளிநொச்சியில் பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த ஆண்டு திறந்து வைக்கப்பட்ட விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு நட்டமடைந்த வர்த்தகர்களுக்கு நட்டஈடு வழங்குமாறு கோரி மத்திய நிலைய வர்த்தகர்கள் ஜனாதிபதியிடம் மகஜர் ஒன்றைக் கையளிக்கவுள்ளனர்.

கிளிநொச்சிக்கு இன்று திங்கட்கிழமை விஜயம் செய்யும் ஜனாதிபதியிடம் மேற்படி மகஜர் கையளிக்கவுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த விசேட பொருளாதார மத்திய நிலையமானது கடந்த 2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் திகதி மகிந்தசிந்தனையின் தேசிய புத்துயிர் அளிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அடிக்கல் நாட்டப்பட்டு 2017ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் திறந்து வைக்கப்பட்ட இப் பொருளாதார மத்திய நிலையத்தின் மொத்த விற்பனையில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு ஏற்றவகையில் நாற்பது கடைகள் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டன.

தற்போது இர ண்டு கடைகள் மட்டுமே இயங்கிய நிலையில் ஏனைய கடைகள் மூடிய நிலையில் காணப்படுவதுடன், பொருளாதார மத்திய நிலையம் பற்றைக்காடுகள் சூழும் நிலையிலும் காணப்படு கின்றன.



இவ்வாறு இந்த மத்திய நிலையத்தின் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு நட்டமடைந்த வர்த்தகர்கள் இன்று கிளிநொச்சி வருகை தருகின்ற ஜனாதிபதிக்கு தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் களை கையளிக்கவுள்ளனர்.

குறித்த மகஜரில் கடந்த காலங்களில் சரியான திட்டமிடல் இன்றி அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையத்தினை சரியாகத் திட்டமிட ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

உள்ளூர் உற்பத்தி பொருட்களை பொருளாதார மத்திய சந்தை ஊடாக சந்தைப்படுத்தவும் மொத்த வியாபார நடவடிக்கைகளையும் பொருளாதார மத்திய நிலையத்தில் முன்னெடுக்க வழிவகை செய்ய வேண்டும்.

பொருளாதார மத்திய நிலையம் வினைதிறனாகச் செயற்பட உறுதிப்படுத்தவேண்டும்.

அத்துடன் பொருளாதார மத்திய நிலையத்தில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு நட்டமடைந்த மொத்த வியாபாரிகளுக்கு நட்ட ஈடு அல்லது குறைந்த வட்டியில் கடன் அல்லது மானிய வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை தாம் முன்வைக்கவிருப்பதாக பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தெரவித்துள்ளனர்.

போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் அபிவிருத்திகள் தொடர்பில் கடந்த காலங்களில் சரியான திட்டமிடல் இன்றி அப்போதைய ஒருங்கிணைப்புக் குழுவின் திட்டமிடப்படாத செயற்பாட்டினால் பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள குறித்த பொருளாதார மத்திய நிலையம் பயனற்றுப்போயிருப்பதாகவும் வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதாவது, கிளிநொச்சி புகையிரத நிலையம், ஏ-9 வீதி, ஆகியவற்றிலிருந்து மூன்று கிலோமீற்றர் தொலைவில் ஒதுக்குப்புறமான ஒரு பிரதேசத்தில் இதனை அமைத்திருப்பது இதற்குப்பின்னடைவாக அமைந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளனர். (2-315)



## உடற்பயிற்சியில் ஈடுபட்ட இராணுவ சிப்பாய் மரணம்

(மன்னார்)

இலங்கை இராணுவத்தின் 25 ஆவது கெமுனு ஹேவா படைப் பிரிவின் மன்னார் - சிறிநாதகுளம் இராணுவ முகாமில் கடமையாற்றி வந்த சிப்பாய் ஒருவர் நேற்றுக் காலை உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளை திடீரென உயிரிழந்துள்ளார்.

காலி, ஹசலக பிரதேசத்தை சேர்ந்த சிப்பாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

உடற்பயிற்சியின் போது ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக இராணுவ சிப்பாய் உயிரிழந்துள்ளதாக பிரேத பரிசோதனையின் தெரியவந்துள்ளது. (2-7)



வவுனியா பூந்தோட்டம் அருள்மிகு நரசிங்கர் ஆலய வருடாந்த பொங்கல் விழா நேற்று நடைபெற்றது. பகல் நிகழ்வுகளாக பறவைக் காவடிகள், செடில் காவடிகள், பால்காவடிகள், பால் செம்பு, தீச்சட்டி, கரகாட்டம் என்பன காலை 9 மணியளவில் வவுனியா சிந்தாமணி பிள்ளையார் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி வவுனியா நகர வீதி வழியாக நகர்ந்து பூந்தோட்டம் நர சிங்கர் ஆலயத்தை சென் றடைந்தது. அத்தோடு இரவு வேளை கலை நிகழ்ச்சிகள், கரகாட்டம், வாண வேடிக்கைகள்மற்றும்இன்னிசை நிகழ்வும் இடம் பெற்றது. (படங்கள்: பனிக்கன் குளம் செய்தியாளர்)

## யோகாப் பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(முல்லைத்தீவு)

இலங்கை யோகாப் பயிற்சிக் கல்லூரி நடப்பாண்டிற்கான ஒரு வருடகால யோகாப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. இக் கல்லூரி மூன்றாவது அணியினர் யோகாப் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்து வெளியேறிய நிலையில் நான்காவது அணியினரை உள்வாங்கும் முகமாக ஆர்வமுள்ள ஆண்-பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த ஒரு வருட யோகாப் பயிற்சி நெறியால் யோகாக் கலையின் வரலாறு யோகாமுறைகள் ஆசனங்கள் செய்பவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் யோகாசனத்தின் பயன்கள், சூரிய நமஸ்காரம் நின்ற நிலையில் செய்யும் ஆசனங்கள், உட்கார்ந்த நிலையில் செய்யும் ஆசனங்கள், குப்புறபடுத்தல் நிலையில் செய்யும் ஆசனங்கள், மல்லாந்து படுத்த நிலையில் செய்யும் ஆசனங்கள், ஓய்வு கொண்டு அமைதி பெறச் செய்யும் ஆசனங்கள், நோய் தீர்க்கும் ஆசனங்கள், பிரணாயாமம், பிராணா யாமத்தின் சுவாச நிலைகள், 15 வகையான முத்திரைகள் 7 சக்கரராங்கள் அமைதியான தியானம் ஒலித் தியானம், ஒளித்தியானம், பொருளைப்பார்த்து தியானம், உச்சத் தியானம் போன்ற தியான முறைகள் உள்ளடங்கலான விடயங்கள் கற்பிக்கப்படும்.

வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் மாலை 4 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை யோகாப் பயிற்சிகள் இலவசமாக கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.

இப் பயிற்சிகளில் பங்கேற்க விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர், யோகாசிரியர், ஜெயம் ஜெகன், இயக்குநர், இலங்கை யோகாப் பயிற்சி கல்லூரி, மல்லிகைதீவு, முல்லைத்தீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக தகவல் பெற விரும்புவோர் 077 518 5713 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2)

## கிளிநொச்சிக்கு வருகை தரும் ஜனாதிபதி எமக்கு நல்ல பதில் தருவார்

### ஆனந்த சுதாகரனின் பிள்ளைகள் எதிர்பார்ப்பு

(கண்டாவளை)

தாயை இழந்து தந்தையின் அரவணைப்பிற்காக ஏங்கித் தவிக்கும் ஆனந்தசுதாகரனின் பிள்ளைகளுக்கு இன்று தீர்வுகிடைக்கவேண்டுமென பல்வேறு தரப்புக்களும் கோரியுள்ளன.

ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் ஆனந்தசுதாகரனின் மனைவி சுகயீனம் காரணமாக உயிரிழந்த நிலையில் அவரது இரண்டு குழந்தைகளும் தாய் தந்தையரின் அரவணைப்பின்றி உறவினர்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இருபிள்ளைகளுக்கும் தந்தையின் அரவணைப்புக்கிடைக்க ஆயுள்கைதியாகவுள்ள ஆனந்த சுதாகரன் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்பட வேண்டும் என்று நாடளாவிய ரீதியில் கையெழுத்துப்போராட்டங்களும் கவனயீர்ப்புப் போராட்டங்களும் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் இன்று கிளிநொச்சிக்கு வருகை தருகின்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எமக்கு நல்ல பதில் ஒன்றைத்தருவார் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் தெரிவித்துள்ள ஆனந்த சுதாகரனின் இரு பிள்ளைகளும் அவரைப் பராமரித்து வரும் அம்மம்மாவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஜனாதிபதியிடம் தாங்கள் கடிதம் ஒன்றை வழங்க இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

மே தினத்தன்று நாங்கள் அப்பாவைச்சென்று பாரத்தோம், கவலைப்படாமல் இருங்கள் கடவுள் போல ஜனாதிபதி கருணை காட்டுவார் என்று அப்பா எங்களைச்சொல்லி அனுப்பினார் என ஆனந்தசுதாகரனின் மகள் சங்கீதா தெரிவித்துள்ளார்.

இன்று கிளிநொச்சி வரும் ஜனாதிபதி ஆயுள் கைதியாக சிறையில் இருக்கின்ற ஆனந்த சுதாகரனின் குடும்பத்தாருக்கு கருணை காட்ட வேண்டுமென்று பல்வேறு தரப்புக்களும் கோரியுள்ளன. (2-315)

## அதிக கடனால் வந்தவினை; அம்பாந்தோட்டையில்

# செயற்கைத் தீவுக்கு சீனா உரிமை கோரல்

## இலங்கை அதிருப்தியில் ஆராய குழுஅமைப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்ட செயற்கைத் தீவுக்கு சீனா உரிமை கோரியுள்ள நிலையில் இலங்கை அரசாங்கம் கடும் அதிருப்தியடைந்துள்ளது.

இந்த விடயம் குறித்து ஆராய்வதற்கு அரசாங்கம் விசேட குழு அமைத்துள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை அமைப்பதற்காக நிலப்பரப்பில் இருந்து வெட்டியெடுக்கப்பட்ட மண்ணைக் கொண்டு. துறைமுகத்துக்கு வெளியே செயற்கைத் தீவு ஒன்று அமைக்கப்பட்டது.

50 மில்லியன் டொலர் செலவில் அமைக்கப்பட்ட இந்த தீவு 110 ஹெக்டெயர் பரப்பளவைக் கொண்டுள்ளது.


இதனை சுற்றுலாத் துறை அபிவிருத்திக்காக பயன்படுத்த அரசாங்கம் உத்தேசித்திருந்தது.

ஆனால் அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தத்தின் பிரகாரம் குறித்த செயற்கை தீவு தனக்கே உரித்துடையது என சீனா தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தத்திற்குள் செயற்கை தீவும் உள்ளடங்குவதால் அதனைத் ஒப்படைக்குமாறும் சீனா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறது.

இதனால் அரசாங்கம் பெரும் அசௌகரியங்களை எதிர் கொண்டுள்ளது.

தீவை ஒப் படைப்பதாயின் தென் மாகாணசபையின் ஒப்புதலை அரசாங்கம் பெற வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த போரினால் பாதிக்கப்பட்ட பெண்தலைமைத்துவ குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவியாக மின்னியங்கி தையல் இயந்திரம் ஒன்றும் முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளையில் அமைந்துள்ள பாரதி சிறுவர் இல்லத்திற்கு ஒரு தொகை சமையல் பாத்திரங்கள் என்பன வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

# நுவரெலியாவில் திடீர் மாற்றம் படையெடுக்கும் ஐரோப்பியர்கள்



(ஹற்றன்)

ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்துள்ள இலங்கைத் தமிழர்கள் தற்போது விடுமுறையை கழிப்பதற்காக தாயகம் நோக்கிப் படையெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் இலங்கையைச் சூழவுள்ள சுற்றுலாத்தளங்களில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

லிட்டில் லண்டன் என பெருமையாக சொல்லப்படும் நுவரெலியாவில் தற்போது நிலவும் மாறுபட்ட கால நிலை, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை மிகவும் கவர்ந்துள்ளது.

சில மணி நேரங்களில் மாறி மாறி வரும் காலநிலையினால் புதுவித உணர்வினை அனுபவிப்பதாக பல சுற்றுலா பயணிகள் தமது முகப்புத்தங்களில் பதிவிட்டுள்ளனர்.

நுவரெலியாவில் தற்போது பகல் வேளையிலும் மிகவும் குளிராகவும் இருளாகவும் இருக்கும் அதே வேளை, அடுத்த சில மணி நேரங்களில் முற்றாக மாற்றமடைந்து வெப்பமும் வெயிலுமாக காட்சியளிக்கிறது.

இந்த மாறுபட்ட கால நிலையை உணர்ந்து கொள்ள பெருமளவு சுற்றுலாப் பயணிகள் நுவரெலியா நோக்கி படையெடுத்து வருகின்றனர். (இ-7)

# வளர்ப்புத் தாயிற்காக நாடு விட்டு நாடு வந்து கண்ணீருடன் அஞ்சலி



(கொழும்பு)

டுபாய் நாட்டில் வீட்டுப் பணிப் பெண்ணாக தொழில் புரிந்துவந்த இலங்கை ஜா-எல கப்புவத்தை பகுதியை சேர்ந்த பெண்ணொருவர் சுகவீனமடைந்து உயிரிழந்துள்ளார். அவரது இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்த, டுபாயில் குறித்த பெண் தொழில் புரிந்த வீட்டின் உரிமையாளர் உட்பட ஆறு பேர் இலங்கை வந்திருந்தனர்.

டுபாயில் இருந்து வந்தவர்கள் அம்மா, அம்மா எனக் கதறி அழுதபடி இலங்கைப் பெண்ணின் சவப்பெட்டியை தோளில் சுமந்து சென்ற காட்சி அனைவரையும் மனம் நெகிழ வைத்துள்ளது.

கப்புவத்தை பிரதேசத்தை சேர்ந்த சாந்தி பெரேரா என்ற இந்த பெண் நான்கு பிள்ளைகளைப் பராமரிக்கும் சேவைக்காக கடந்த 1981 ஆம் ஆண்டு டுபாய்க்கு சென்றுள்ளார். அங்கு சென்ற பின்னர் மேலும் நான்கு பிள்ளைகள் என எட்டு பிள்ளைகளை பராமரிக்கும் பொறுப்பு சாந்திக்கு வழங்கப்பட்டுள்ளது.

சாந்தி திருமணமாகாதவர். தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பை சாந்தி நல்ல முறையில் நிறைவேற்றி வந்துள்ளார். 38 ஆண்டுகளாக சாந்தி, டுபாய் நாட்டில் ஒரே வீட்டில் தொழில் புரிந்து வந்துள்ளார். கடந்த 2009 ஆம் ஆண்டு சாந்திக்கு சுகவீனம் ஏற்பட்டுள்ளது. டுபாய் வீட்டின் உரிமையாளர்கள் அவரை அங்கு வைத்தே சிகிச்சையளித்து வந்துள்ளனர். சாந்தி சிகிச்சை பெற்று வந்த நேரத்தில் அவரது சகோதரர் டுபாய் வந்து செல்ல பயண ஏற்பாடுகளையும் அவர்கள் இலவசமாக செய்து கொடுத்துள்ளனர்.

இருந்தபோதும், உடல் நிலை குணமாகாத காரணத்தால் சாந்தியின் கோரிக்கைக்கு அமைய இலங்கையில் ஆயுர்வேத மருத்துவ சிகிச்சை பெற கடந்த 2012 ஆம் ஆண்டு இலங்கைக்கு அழைத்து வந்துள்ளனர். குணமடைந்ததும் மீண்டும் தமது வீட்டுக்கு வர வேண்டும் என்ற உறுதி மொழியுடன் சாந்தியை இலங்கைக்கு அழைத்து வந்துள்ளனர். சாந்திக்கு அவரது சகோதரர் முடிந்த அனைத்து சிகிச்சைகளையும் செய்துள்ளார். எனினும் நாளுக்கு நாள் உடல்நிலை மோசமடைந்து வந்துள்ளது. அதனால், அவர் இறக்கும் வரை வருடந்தோறும் டுபாய் நாட்டில் இருந்து வந்து சாந்தியை பார்த்து விட்டு சென்றுள்ளனர். இந்த நிலையில், அண்மையில் சாந்தி இறந்த செய்தி அறிந்ததும் சாந்தி வளர்த்த பிள்ளைகள் மற்றும் வீட்டின் உரிமையாளர் என 6 பேர் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இவர்கள் சாந்தியின் உடல் வைக்கப்பட்டிருந்த பெட்டியை தோளில் சுமந்தவாறு அம்மா, அம்மா என அழுது புலம்பியவாறே சடலத்தை அடக்கம் செய்துள்ளனர். பின்னர், புதை குழிக்கு அருகில் 6 பேரும் தம்மை வளர்த்த வளர்ப்பு தாயின் ஆத்மா சாந்தியடைய குர் ஆனை ஓதியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பெற்ற தாயையே முதியோர் இல்லங்களிலும், வீதிகளிலும் விடும் இன்றைய காலகட்டத்தில், தம்மை வளர்த்த தாயிற்காக இவர்கள் செய்த காரியங்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. (இ-7)

# மகிந்தவைப் பிரதமர் பதவியில் அமர்த்த 16 பேர் அணியின் ஆதரவு அவசியமில்லை

## குமார வெல்கம சுட்டிக்காட்டு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியில் அமர்த்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 16 பேர் அணியின் உதவி தேவையில்லை என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்க வேண்டுமாயின் அதனை உடனடியாக செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். சுதந்திரக்கட்சியின் 16 பேர் அணி எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தாலும் அவர்கள் சுதந்திரக்கட்சியின் பதவிகளை வகித்து வருகின்றனர்.

16 பேர் அணியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று விரும்புகின்றனர்.

அவர்களின் இந்த விருப்பம் வெற்றியளிக்காது. 16 பேரும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவில் இணைந்துக் கொண்டால், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வேட்பாளராக நிறுத்தும் நபருக்கு ஆதரவளிக்கலாம்.

அந்த நபர் ஜனாதிபதியாக தெரிவான பின்னர், நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமராக நியமிப்பர். அதற்கு மைத்திரிபால சிறிசேன தேவையில்லை.

மைத்திரிபால சிறிசேன தற்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருக்கின்றார். மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்க வேண்டுமாயின், ரணில் விக்கிரமசிங்கவை தூக்கி எறிந்து விட்டு, மகிந்தவை பிரதமராக நியமிக்க முடியும்.

அப்படி செய்வதாக இருந்தால், தேர்தலுக்கு முன்னர் மைத்திரிபால சிறிசேன, மகிந்தவை பிரதமராக நியமிக்கப்பட்டார். வேண்டும். அவ்வாறு செய்தால், நாங்கள் ஆதரவு வழங்குவோம் என குமார வெல்கம தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# தகுதியற்ற சைட்டம் மாணவர்களை கொத்தலாவல மருத்துவ பீடத்திற்கு உள்வாங்க அனுமதிக்க வேண்டாம்

## விரிவுரையாளர்கள் எதிர்ப்பு

மருத்துவ பீடங்களுக்கு அனுமதிப்பதற்கு குறைந்த தகைமையைக் கூட பெறாத மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களை, கொத்தலாவல அரச மருத்துவ பீடத்துக்கு உள் வாங்க வேண்டாம் என அழுத்தம் கொடுக்கும் வகையில் கொத்தலாவல மருத்துவ பீட விரிவுரையாளர்கள் தமது பணி நடவடிக்கைகளிலிருந்து விலகியிருப்பதற்கு தீர்மானித்துள்ளனர்.

மூன்று "S" தகைமைகளைப் பெற்ற மாணவர்களை அனுமதிப்பதற்கு பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த் தகைமைகளைக் கூட பெறாதவர்களை அனுமதிக்கக்கூடாது என வைத்தியர் மனோஜ் சீ. வீரசிங்க தெரிவித்துள்ளார். (இ-7)

# அரசு அரசியல் அமைப்பை மாற்றி அதிகாரத்தை தக்கவைக்க முயற்சி

## மகிந்த குற்றச்சாட்டு



(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் அரசியல் அமைப்பை மாற்றி, தமது அதிகாரத்தை உறுதிப்படுத்த முயற்சிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த தற்போதைய அரசாங்கம் தவறிவிட்டதாகவும் மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

வரகாபொல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சமய நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வரகாபொல, தல்லியத்த பகுதியில் அமைந்துள்ள ஆனந்த போதி விவேக சௌசுனவின் புதிய 3 மாடி கட்டடத்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் திறந்து வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஞானசார தேரருக்கு பொது மன்னிப்பு வழங்க ஜனாதிபதி முஸ்தீபு- பேச்சுவார்த்தை வெற்றி



(கொழும்பு)

நாட்டிலுள்ள பிக்குகள் பலரின் வேண்டுகோளுக்கு ஏற்ப, சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஞானசார தேரருக்கு ஜனாதிபதிக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி பொது மன்னிப்பு வழங்குவதற்கு ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிங்கள ஊடகமொன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது. ஞானசார தேரருக்கு எதிராக நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு குறித்து ஜனாதிபதியை சந்தித்த தேரர்கள் பலர் இது குறித்து எடுத்துக் கூறிய போது, தான் இந்த நிலைமை குறித்து கவலையடைவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இது தொடர்பில் மிக விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார். (இ-7)

# தபால்துறை ஊழியர்களின் புறக்கணிப்பால் நாளாந்தம் 15கோடி ரூபாய் நட்டம்

(கொழும்பு)

தமது பிரச்சினைக்கு அதிகாரிகள் உரிய தீர்வு பெற்றுக் கொடுக்காததன் காரணத்தால் இன்று கொழும்பில் கூடி பாரிய எதிர்ப்பு போராட்டத்தை மேற்கொள்ளப் போவதாக, பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வரும் ஒன்றிணைந்த அஞ்சல் தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது. தமது போராட்டம் நேற்று 7ஆவது நாளாக தொடர்வதாக அதன் இணைப்பாளர் சிந்தக்க பண்டார தெரிவித்தார்.

பல கோரிக்கைகளை முன்வைத்து ஒன்றிணைந்த அஞ்சல் தொழிற்சங்க முன்னணி கடந்த 11ஆம் திகதி முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றது.

எவ்வாறாயினும், இயன்றளவு விரைவாக சேவைக்கு திரும்புமாறு போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு அஞ்சல்மா அதிபர் ரோஹண அபேரத்ன நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், அஞ்சல் தொழிற்சங்க முன்னணியின் பணிப்புறக்கணிப்புக் காரணமாக நாளாந்தம் 15 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# விளையாட்டுத்துறை அமைச்சர் பைஸரின் அழைப்பை நிராகரித்த இலங்கை கிரிக்கெட் பிரபலங்கள்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் சபைக்கு ஆலோசனை வழங்கும் வகையில் உருவாக்கப்படவுள்ள ஆலோசனை சபையில் இணைந்து கொள்ளுமாறு விடுத்த அழைப்பை முன்னாள் கிரிக்கெட் பிரபலங்களான மஹேல ஜெயவர்த்தன, ரொஷான் மஹநாம, முத்தையா முரளிதரன் மற்றும் குமார் சங்கக்கார ஆகியோர் மறுத்துள்ளனர்.

முன்னாள் கிரிக்கெட் பிரபலங்கள் ஐவரை இலங்கை கிரிக்கெட் சபைக்கு ஆலோசர்களாக நியமிக்குமாறு இலங்கை கிரிக்கெட் சபை விளையாட்டுத்துறை அமைச்சரிடம் அண்மையில் கோரிக்கை விடுத்தது.

இதன்படி, குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன, ரொஷான் மஹநாம, அரவிந்த டி. சில்வா மற்றும் முத்தையா முரளிதரன் ஆகியோரை கிரிக்கெட் சபையில் இணைந்து கொள்ளுமாறு விளையாட்டுத்துறை அமைச்சர் பைஸர் முஸ்தபா அழைப்பு விடுத்தார்.



எனினும், குறித்த பொறிமுறையில் தனக்கு நம்பிக்கையில்லை என தெரிவித்து மஹேல ஜெயவர்த்தன அமைச்சரின் அழைப்புக்கு மறுப்பு தெரிவித்திருந்தார். இதனையடுத்து, ரொஷான் மஹநாம மற்றும் முத்தையா முரளிதரன் ஆகியோரும் குறித்த அழைப்பை மறுத்துள்ளனர்.

இதேவேளை, இதேபோன்ற அழைப்பை ஏற்று தான் இதற்கு முன்னர் 6 மாத காலம் இவ்வாறான ஓர் ஆலோசனை சபையில் இருந்ததாகவும், அதன்போது தான் மேற்கொண்ட எந்தவொரு பரிந்துரையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என குறிப்பிட்டு விளையாட்டுத்துறை அமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்து குமார் சங்கக்காரவும் அழைப்பை மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




இராகம் தோடி
தாளம்: சதுர்திரிபுடை

**பல்லவி-எடுப்பு**

கனவிலும் நினைவிலும் கருணை புரிந்தாதரி
கருணாகரி காசி விசாலாட்சி (கனவி..)

**தொடுப்பு**

அனலிடைப்பட்ட மெழுகுபோலடியேன்
அல்லற்படுவதைக் காணக்கண் கூசலையோ (கனவி..)

**முடிப்பு**

உனை மறந்திடுவேனா உள்ளமுள்ளளவும்
திணையளவாகினும் திரு நோக்கம் செய்யாயோ
கணைகடல் சூழ் நயினையில் கற்பக தருவுமாகி
காஞ்சியிலே அம்பா காமாஷியுமாய் (கனவிலும்)

இசைப் பேரறிஞர்
டாக்டர். ந.வி.மு. நவரத்தினம்

**பதில் ஒன்று தாராய்**

நயினையின் அம்மா நயந்துமே வாராய்
நாங்களோ பாவியர் பார்த்திடாய் கண்ணால்
எத்தனை இழப்புக்கள் இழந்தோம் பாராய்
என்றும் நீதான் காத்திடவே வேண்டும்
தாயின்றி பிள்ளைகள் கதறியே அழ
தனையனை இழந்தவள் வாடியே துடிக்க
உடைமைகள் இழந்து கணவனை இழந்து
உடையவரிடம் கையேந்தி நிற்கின்றார்
உயிர் போகும் மறியலில் படும் துயர் காணாய்
உமையவளே உத்தமியே பதில் ஒன்று தாராய்

திருமதி. அ.அஜிதா
கரணவாய் தெற்கு,
கரணவாய்.

**நயினை நாகபூஷணியே**

அலைகடல் ஓரத்தில் வீற்றிருப்பவளே
எங்கள் கஷ்டங்களை தீர்த்து வைப்பவளே
செல்வத்தில் வீற்றிருப்பவளே
அடியவர்களுக்கு அருள் புரிபவளே
தீய சூரர்களை அழித்தவளே
நயினை நாகபூஷணியே
வரம் தருபவளே வணங்குகிறோம் உன்னை
வரம் தாருமம்மா
நயினை நாகபூஷணியே
அருள் தாருமம்மா.

பி.நிலுக்சன், தரம்-4
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.



# பாரதம்

## கேரளாவில் பெய்யும் கனமழைக்கு இதுவரை 53 பேர் உயிரிழப்பு!

### மீட்புப் பணிகளை துரிதப்படுத்த முதல்வர் உத்தரவு

(கோழிக்கோடு)

கேரளாவில் பெய்து வரும் கனமழையால் இதுவரை 53 பேர் பலியாகி உள்ளனர். அங்கு மீட்பு பணிகளை துரிதப் படுத்த முதலமைச்சர் பினராயி விஜயன் உத்தரவிட்டுள்ளார்.

கோழிக்கோடு, வயநாடு பகுதிகளில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் அங்கு போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. கன மழையால் கோழிக்கோடு, வயலூர் பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டது.

நிலச்சரிவில் சிக்கியும், வீடுகள் இடிந்து விழுந்ததிலும், மின்சாரம் தாக்கியும் இதுவரை 53 பேர் பலியாகி உள்ளனர். நிலச்சரிவால் உயிரிழந்தவர்களின் உடல்களை தேடும் பணியில் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் ஈடுபட்டனர்.

நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளை கேரள அமைச்சர்கள் டி.பி. ராமகிருஷ்ணன், ஏ.கே. சசீந்திரன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு மீட்பு பணிகளை துரிதப்படுத்தினர். மேலும், கேரள எதிர்க்கட்சி தலைவரும், காங்கிரஸ் எம்.எல்.ஏ.வுமான ரமேஷ் சென்னிதலாவும் சென்று மீட்பு பணிகளை பார்வையிட்டார்.





இதற்கிடையே கேரள முதலமைச்சர் பினராயி விஜயன், 6 மாவட்ட ஆட்சியர்களுடன் வீடியோ கான்பரன்சிங் மூலம் ஆலோசனை நடத்தினார். மேலும், மழை பாதித்த பகுதிகளில் நிவாரண முகாம்கள் அமைத்து மீட்புப் பணிகளை துரிதப் படுத்தவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்கவும் முதலமைச்சர் உத்தரவிட்டார். (7)

## 7 பேரின் கருணைமனு நிராகரிப்பு

### முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதியிடம் தினகரன் கோரிக்கை



(ஆலந்தூர்)

பேரறிவாளன் உட்பட 7 பேரின் விடுதலையை நிராகரித்த ஜனாதிபதி தனது முடிவை மறுபரிசீலனை செய்து அவர்களை விடுதலை செய்தால் நல்ல முடிவாக இருக்கும் என டி.டி.வி.தினகரன் தெரிவித்தார்.

அம்மா மக்கள் முன்னேற்ற கழக துணை பொதுச் செயலாளரும், எம். எல்.ஏவு மான டி.டி.வி.தினகரன், சென்னை விமான நிலையத்தில் நிருபர்களிடம் கூறியதாவது,



முருகன் பேரறிவாளன் சாந்தன்

நளினி ரவிச்சந்திரன் ராபர்ட் பயாஸ் ஜெயக்குமார்

பேரறிவாளன் உட்பட 7 பேரும் 28 ஆண்டுகளாக தண்டனை அனுபவித்து வருகின்றனர். அவர்களை விடுதலை செய்வதில் தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று சோனியா காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி ஆகியோர் கூறியுள்ளனர். அவர்களை ஜனாதிபதி விடுதலை செய்வார் என தமிழக மக்கள் எதிர்பார்த்தனர். ஜனாதிபதி தனது முடிவை மறுபரிசீலனை செய்து, 7 பேரையும் விடுதலை செய்தால் நல்ல முடிவாக இருக்கும் என மேலும் தெரிவித்தார். (7)

## ஸ்டெர்லைட் கையகப்படுத்திய நிலங்களை விவசாயிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை

### கடம்பூர் ராஜு உறுதி

(தூத்துக்குடி)

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு கையகப்படுத்திய நிலங்கள் மீண்டும் விவசாயிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கடம்பூர் ராஜு தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி, கோவில்பட்டி பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

"ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக மக்கள் 99 நாட்கள் தொடர்ச்சியாக போராட்டங்களை முன்னெடுத்தபோது தமிழக அரசு அதற்கு தடை விதிக்கவில்லை.

மேலும் 43 நாட்களுக்கு முன்னதாகவே குறித்த ஆலைக்கு மாசு கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி வழங்க மறுத்து அதனை மூடுவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொண்டது.

ஸ்டெர்லைட் ஆலை பிரச்சினையின்போது தமிழக அரசு மக்களின் கருத்துக்கு முன்னுரிமை கொடுத்து செயற்பட்டது.

ஆனால் தி.மு.க. ஆட்சி காலத்தில் துணை முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் செயற்பட்டபோது தான் ஸ்டெர்லைட் ஆலை விரிவாக்க பணிக்கு அனுமதி வழங்கப்பட்டது.

மேலும் இந்த ஆலைக்காக விவசாயிகளின் 240 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. இந்த நிலங்கள் மீண்டும் விவசாயிகளிடம் விரைவில் கையளிக்கப்படும்" என கடம்பூர் ராஜு உறுதியளித்துள்ளார். (7)

## அமெரிக்க பொருட்களுக்கு...

(பீஜிங்)

அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பல பொருட்களுக்கு சீனா கூடுதல் வரி விதித்து அமெரிக்காவுக்கு பதிலடி கொடுத்துள்ளது.

உலக நாடுகள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் இரும்பு, அலுமினியம் உள்ளிட்ட உலோகங்களுக்கும் இதர தயாரிப்புகளுக்கான வரியை டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு பன்மடங்காக உயர்த்தியுள்ளது.


இதன் காரணமாக உலக வர்த்தகம் சீர்குலையக் கூடும் என பொருளாதார நிபுணர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். மேலும், வட அமெரிக்காவின் தாராளமய வர்த்தக கொள்கை உடன்பாட்டில் இருந்து வெளியேறப் போவதாகவும் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இதனால், அண்மையில் கனடாவில் நடைபெற்ற ஜி-7 உச்சி மாநாட்டில் இதர நாட்டு தலைவர்களுடன் ட்ரம்புக்கு கருத்து மோதல் ஏற்பட்டு. அந்த மாநாட்டின் பாதியில் ட்ரம்ப் வெளியேறும் நிலை ஏற்பட்டது.

சீனாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் சுமார் 5 ஆயிரம் கோடி டொலர்கள் மதிப்பிலான 800 பொருட்களுக்கு அமெரிக்க அரசு தற்போது கூடுதல் வரி விதித்துள்ளது. சர்வதேச அறிவு சார் சொத்து

## ரமழானை முன்னிட்டு அறிவிக்கப்பட்ட போர் நிறுத்தம் நீடிக்கப்படாது

### ராஜ்நாத் சிங் தெரிவிப்பு



(ஜம்மு)

ரமழான் நோன்பு காலத்தை முன்னிட்டு காஷ்மீரில் பயங்கரவாதிகளை வேட்டையாடும் படையினருக்கு அறிவிக்கப்பட்ட போர் நிறுத்தம் நீடிக்கப்படாது. அவர்களின் பணி தொடரும் என ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

ஜம்மு- காஷ்மீர் மாநிலத்தில் ரமழான் நோன்பு காலத்தை முன்னிட்டு பயங்கரவாதிகளை வேட்டையாடும் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்து உள்துறை அமைச்சகம் அறிவித்திருந்தது.

எனினும், பாதுகாப்பு படையினர் மீது சில இடங்களில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். பாதுகாப்பு படையினரும் பதிலடி கொடுத்தனர்.

நேற்று முன்தினம் ரமழான் பண்டிகை முடிந்துவிட்ட நிலையில், ரமழான் நோன்புக் காலத்தை முன்னிட்டு காஷ்மீரில் பயங்கரவாதிகளை வேட்டையாடும் படையினருக்கு அறிவிக்கப்பட்ட போர்நிறுத்தம் நீடிக்கப் படாது. அவர்களின் பணி தொடரும் என ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

வன்முறைத் தாக்குதல்களை தடுக்கும் வகையில் காஷ்மீரில் அமைதியான சூழல் உருவாவதை உறுதி செய்யும் விதத்திலும் பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை பாதுகாப்புப் படைகள் இன்று முதல் தொடரலாம் என மத்திய உள்துறை அமைச்சகம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (7)

## ஆளுநர் அலுவலகத்தில் போராட்... முதல்வர் கெஜ்ரிவால் மீது பொ...

(டில்லி)

டில்லி ஆளுநர் அலுவலகத்தில் முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையில் துணை முதலமைச்சர் மணீஷ் சிசோடியா மற்றும் 2 அமைச்சர்கள் கடந்த திங்கட்கிழமை முதல் தொடர் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

டில்லியில் நடந்து வரும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் போராட்டத்திற்கு ஆளுநர் தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்தி இந்த போராட்டம் நடந்து வருகிறது.

இந்த நிலையில் கெஜ்ரிவால் மீது வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்று சட்டத்தரணி விபோர் ஆனந்த் என்பவர் நேற்று முன்தினம் படேல் நகர் பொலிஸில் புகார் செய்துள்ளார். அவர் தனது புகார் மனுவில், ஆளுநரைச் சட்டப்படி செயற்பட விடாமல் கெஜ்ரிவால் போராட்டம் நடத்துவதால், அவர் மீதும், அமைச்சர்கள் மீதும் இந்திய தண்டனை சட்டம் 124வது பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே அரவிந்த் கெஜ்ரிவால் தனது டுவிட்டரில், 'நாங்கள் 4 பேரும் ஆளுநர் அலுவலகத்தில் ஒரு சிறிய ஓய்வு அறையில் தான் போராட்டம் நடத்தி வருகிறோம். ஆளுநரின்





# வெளிநாடு

## க்கு கூடுதல் வரிவிதிப்பு

### ட்ரம்பிற்கு சீனா பதிலடி

ரிமை மீறலான சில தயாரிப்புகளின் மீது இந்த கூடுதல் வரி விதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அரசு குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையே, அமெரிக்காவின் இந்த அதிரடி நடவடிக்கைக்கு தகுந்த பதிலடி தருவோம் என சீன வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பல பொருட்களுக்கு சீனா 25 சதவீதம் கூடுதல் வரி விதித்து அமெரிக்காவுக்கு பதிலடி கொடுத்துள்ளது.

இது தொடர்பாக சீன செய்தி நிறுவனங்கள் வெளியிட்டுள்ள செய்தியில், அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய் யப்படும் வேளாண் பொருட்கள், வாகனங்கள், மீன் உணவுகள் உட்பட 545 பொருட்களுக்கும், வேதியியல் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட 114 பொருட்களுக்கும் கூடுதலாக 25 சதவீதம் வரி விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது ஜூலை 6ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

## பப்புவா நியூகினியாவில் தொடரும் பதற்றம்; 9மாதங்களுக்கு அவசரகாலச்சட்டம் அமுல்



பப்புவா நியூ கினியாவில் தொடரும் கலவரம் காரணமாக நேற்று முன்தினம் முதல் 9 மாதங்களுக்கு அவசரகால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சதர்ன் ஹைலேண்ட் மாகாண தேர்தலின் பின்னர் தோல்வியடைந்த வேட்பாளரின் ஆதரவாளர்கள் கடந்த நாட்களாக வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக மெண்டியில் ஒரு விமானத்திற்கு போராட்டக்காரர்கள் தீ வைத்ததுடன் மேலும் சில கட்டடங்களுக்கும் தீயிட்டுள்ளனர். இதன் பின்னர் குறித்த கலவரமானது எல்லை மீறிச் சென்றதால் மாகாணத்தில் அவசரகால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் அப்பகுதிக்கு படையினரும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (7)

## கிம்மிடம் எனது தொலைபேசி எண்ணைக் கொடுத்துள்ளேன்

### டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு

(நியூயோர்க்)

வடகொரிய ஜனாதிபதியிடம் எனது தனிப்பட்ட தொலைபேசி எண்ணை கொடுத்துள்ளேன் என்று டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

உலகமே ஆவலுடன் எதிர்பார்த்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் சந்திப்பு, சிங்கப்பூரில் ஜூன் 12 ஆம் திகதி நடந்தது.

இந்த சந்திப்பு குறித்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நேற்று முன்தினம் வோஷிங்டனில் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்தார்.

அப்போது அவர் கூறுகையில் "கிம் ஜாங் உன்னுடன் நடந்த சந்திப்பு மிக முக்கியமானது. இந்த பேச்சுவார்த்தை திருப்திகரமாக அமைந்தது. கருத்து வேறுபாடுகளை களைய ஏதுவாக இருந்தது.

எனது தனிப்பட்ட மொபைல் எண்ணை கிம்மிடம் தந்துள்ளேன். சர்வதேச பிரச்சினைகள் உட்பட எதுவாக இருந்தாலும் எப்போது வேண்டுமானாலும் தொடர்பு கொள்ளுங்கள் என கூறியுள்ளேன்.

எனவே வட கொரியாவிடம் இருந்து புதிய செயற்பாட்டை எதிர்பார்க்கிறேன். இதன் மூலம் உலக நாடுகளுக்கும் நன்மை பயக்கும்" என ட்ரம்ப் கூறினார். (7)

## சட்டவிரோத எல்லை தாண்டலுக்கு ட்ரம்ப் நிர்வாகம் கடும் நடவடிக்கை

### 2 ஆயிரம் குழந்தைகள் பெற்றோரை விட்டு பிரிப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவுக்கு மெக்சிகோவில் இருந்து சட்டவிரோதமாக எல்லை தாண்டி வருகிறவர்கள் மீது ட்ரம்ப் நிர்வாகம் கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. குறிப்பாக, பெரியவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார்கள். அவர்களுடன் வருகிற குழந்தைகள், பெற்றோரின் பாதுகாப்பில் இருந்து பிரிக்கப்படுகின்றனர். அவர்கள், ஆதரவற்றவர்களாக வகைப்படுத்தப்படுகின்றனர்.

இந்த குழந்தைகள் அமெரிக்க அரசின் சுகாதாரத் துறை மற்றும் மனிதாபிமான சேவைகள் துறையின் பராமரிப்புக்கு மாற்றப்பட்டு, அரசு தடுப்பு முகாம்களுக்கும், குழந்தை வளர்ப்பு மையங்களுக்கும் மாற்றப்படுகின்றனர்.

அந்த வகையில் ஏப்ரல் 19 ஆம் திகதி தொடங்கி, மே 31 ஆம் திகதி வரையிலான 6 வார காலத்தில் 1,995 குழந்தைகள் இப்படி பெற்றோரிடம் இருந்து பிரித்து தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர்.

இந்த நடவடிக்கையை அமெரிக்கா உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று ஐ.நா. சபை கேட்டுக் கொண்டுள்ளது.

ஆனால் அமெரிக்க அட்டர்னி ஜெனரல் ஜெப் செசன்ஸ், இதற்கு கிறிஸ்தவர்களின் புனித நூலான பைபிளில் புனித பவுலடியார் ரோமாபுரியாருக்கு எழுதிய நிருபத்தில் (கடிதத்தில்), அரசின் சட்டத்துக்கு அனைவரும் கீழ்ப்படிய வேண்டும் என்று கூறி இருப்பதை சுட்டிக்காட்டி இருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (7)

## ஆப்கானில் குண்டுவெடிப்பு 36 பேர் உடல் சிதறிப் பலி!



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள், இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் குழுமியிருந்த பகுதியில் நேற்று முன்தினம் நிகழ்ந்த கார் குண்டுவெடிப்பில் 36 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர் மற்றும் 16 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இஸ்லாமிய நாடுகளில் ஒன்றான ஆப்கானிஸ்தானில் அரசு படைக்கும், தலிபான் அமைப்புக்கும் இடையே பல ஆண்டுகளாக போர் நடைபெற்று வருகிறது.

ஆனால், ரமழானை முன்னிட்டு, அதற்கு முந்திய 5 நாட்கள் தற்காலிக போர் நிறுத்த அறிவிப்பு ஒன்றை ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கனி அறிவித்திருந்தார். இதனை ஏற்றுக் கொண்டு தலிபான்களும் கடந்த 15 ஆம்திகதி முதல் 3 நாட்கள் போர் நிறுத்தத்தை அறிவித்திருந்தனர்.

இந்நிலையில், அந்நாட்டின் ரோடாட் மாவட்டத்தில் உள்ள நானகராகர் பகுதியில் தலிபான்கள், இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் குழுமியிருந்த பகுதியில் திடீர் என காரில் இருந்து பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்தது.

இந்த வெடிகுண்டு தாக்குதலில் தலிபான்கள், பாதுகாப்பு படையினர் மற்றும் பொதுமக்கள் உட்பட சுமார் 36 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 16 பேர் படுகாயம் அடைந்துள்ளதாக முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. (7)

## நடுக்கடலில் தத்தளித்த அகதிகளுக்கு அடைக்கலம் அளிக்க ஸ்பெயின் சம்மதம்

(மாட்ரிட்)

ஐரோப்பிய நாடுகளில் குடியேறும் நோக்கத்தில் படகுகளில் வந்து நடுக்கடலில் 9 நாட்கள் தத்தளித்த 629 அகதிகளுக்கு அடைக்கலம் அளிக்க ஸ்பெயின் அரசு சம்மதம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டுப் போரால் நிலை குலைந்துள்ள ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்தும், வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள ஆபிரிக்க நாடுகளில் இருந்தும் தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர்.

பல்வேறு நாடுகளுக்கு கடல் கடந்து செல்லும் இந்த அகதிகள், இறப்பர் படகுகள் போன்றவற்றில் பாதுகாப்பற்ற முறையில் பயணம் செய்கின்றனர்.

மத்திய தரைக்கடல் வழியாக இவ்வாறு அகதிகளை அளவுக்கு அதிகமாக ஏற்றிச் செல்லும் படகுகள், நடுக்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி பலத்த உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தி வருவது தொடர் கதை ஆகி வருகிறது.

அண்மைக்காலமாக ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ள மக்களின் எண்ணிக்கை மட்டும் சுமார் 25 இலட்சத்தை எட்டியுள்ளது. குறிப்பாக, இத்தாலி நாட்டில் மட்டும் சுமார் 6 இலட்சம் அகதிகள் தஞ்சம் அடைந்துள்ளனர்.

அவர்களை தங்களது நாட்டுக்குள் அனுமதிக்க இத்தாலியும், மால்டாவும் மறுத்து விட்ட நிலையில் நடுக்கடலில் கடந்த 9 நாட்களாக தவிக்க நேரிட்டது. படகுகளில் இருந்தவர்களுக்கு தேவையான உணவு, மருந்துப் பொருட்கள் செஞ்சிலுவை சங்கம் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டன.

இந்நிலையில், இந்த 629 அகதிகளுக்கு அடைக்கலம் அளிக்க ஸ்பெயின் அரசு சம்மதம் தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் நாட்டை சேர்ந்த சிறிய கப்பல் மற்றும் இரு படகுகளில் அவர்கள் ஸ்பெயின் நாட்டை நோக்கி சென்று கொண்டுள்ளனர். (7)

## ...ராட்டம் நடத்தும் ...பொலிஸில் புகார்



பணிக்கு நாங்கள் இடையூறாக இல்லை. ஆளுநர் தனது முக்கியமான பணிகளை செய்ய மறுக்கிறார்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் கர்நாடகா, மேற்கு வங்காளம், கேரளா மற்றும் ஆந்திர முதலமைச்சர்கள் கெஜ்ரிவாலின் போராட்டம்குறித்து அவரது வீட்டில் உள்ள உறவினர்களிடம் நேற்று முன்தினம் விசாரித்து அறிந்து கொண்டனர். (7)

## கிளாஸ்கோ நகர் கலைக்கல்லூரியில் தீ!

### கட்டடம் பெரும் சேதம்

(லண்டன்)

ஸ்கொட்லாந்தில் உள்ள கிளாஸ்கோ நகரத்தில் உலக பிரசித்தி பெற்ற 'ஸ்கூல் ஆப் ஆர்ட்' என்னும் கலைக் கல்லூரியில் நிகழ்ந்த தீ விபத்தில் கட்டடம் பெரும் சேதம் அடைந்தது.

ஸ்கொட்லாந்தில் உள்ள கிளாஸ்கோ நகரத்தில் உலக பிரசித்தி பெற்ற 'ஸ்கூல் ஆப் ஆர்ட்' என்னும் கலைக் கல்லூரி உள்ளது. இந்த கலைக் கல்லூரியில் மாகிந்தோஷ் கட்டடத்தில் நேற்று முன்தினம் உள்ளூர் நேரப்படி இரவு 11.15 மணிக்கு தீப்பிடித்தது. இந்த தீ அந்த கட்டடம் முழுவதும் பரவியதுடன், அதையொட்டி அமைந்துள்ள இரவு விடுதி வளாகம், இசை அரங்கத்துக்கும் பரவியது.

இந்த தீ விபத்து குறித்து தகவல் அறிந்ததும் 120 தீயணைப்பு படை வீரர்கள் விரைந்து வந்து தண்ணீரை அடித்து தீயை அணைத்தனர். தீ வானளாவ கொழுந்து விட்டு எரிந்ததால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவே தீயணைப்பு படையினர் போராட வேண்டியது ஆயிற்று.



இது பற்றி ஸ்கொட்லாந்து தீயணைப்பு மற்றும் மீட்புப் படை துணை தலைவர் பீட்டர் ஹெத் கூறும்போது, "இந்த தீ விபத்தினால் கலைக் கல்லூரியின் கட்டடம் நாசமாகி விட்டது. தீயணைப்பு பணி பெரும் சவாலாக அமைந்தது" என்று கூறினார். ஏற்கனவே 2014ஆம்ஆண்டுநடந்த தீ விபத்தில் மாகிந்தோஷ் கட்டடம் பெரும் சேதம் அடைந்தது. பெரும் செலவில் அந்தக் கட்டடத்தை சீரமைக்கும் பணி நடந்தது வந்தது. அடுத்த ஆண்டு இந்த கட்டடத்தை திறக்க இருந்த நிலையில் மறுபடியும் அந்தக் கட்டடம் தீ விபத்துக்குள்ளானது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

கலைக் கல்லூரி தீ விபத்தையொட்டி உடனடியாக அக்கம்பக்கத்தினர் கட்டடங்களில் இருந்து பாதுகாப்பாக வெளியேறி விட்டனர். இந்த தீ விபத்தில் உயிர்ச் சேதமோ, யாருக்கும் காயமோ ஏற்பட்டதாக தகவல் இல்லை. தீ விபத்துக்கான காரணம் உடனடியாக தெரியவரவில்லை. இந்த தீ விபத்து, கலைக் கல்லூரியில் படித்து வந்த மாணவர்கள் மத்தியில் பெருத்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (7)

# மாகாணசபைத் தேர்தல் இந்த ஆண்டில் நடக்காது

## துறைசார் அமைச்சர் பைஸர் தெரிவிப்பு



(கொழும்பு)

**ஆறு மாகாண சபைகளுக்கு இந்த ஆண்டில் தேர்தல் நடத்தப்படுவதற்கு வாய்ப்பில்லை என்று உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.**

'மாகாணசபைத் தேர்தலை நடத்த முன்னர், எல்லை நிர்ணய அறிக்கை, விவாதிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

பழைய முறையிலேயே மாகாணசபைத் தேர்தலை நடத்த நாம் இணங்கியுள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் தவறு.

நானோ அல்லது, ஜனாதிபதியோ, பழைய முறையில் தேர்தலை நடத்த இணங்கவில்லை.

மக்களுக்கு அளித்த வாக்குறுதிப்படி, புதிய முறையில் தேர்தலை நடத்த நாம் கடமைப்பட்டுள்ளோம்.

துரிதமாக எல்லை நிர்ணய அறிக்கையை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஆனால் அது நடக்கவில்லை.

கட்சித் தலைவர்கள் இதுபற்றி முடிவெடுக்கவில்லை.

பழைய முறையில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதென்றால் கூட அதற்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# 7 இலட்சத்து 50 ஆயிரம் வழக்குகள் இலங்கையில் நிலுவையில்- சம்பிக்க தகவல்



(கொழும்பு)

இலங்கையிலுள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் சுமார் 7 இலட்சத்து 50 ஆயிரம் வழக்குகள் நிலுவையிலுள்ளன என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையிலுள்ள நீதிமன்றங்களில் 7 இலட்சத்து 50 ஆயிரம் வழக்குகள் நிலுவையிலுள்ளன.

இவ்வாறு நிலுவையில் உள்ள வழக்குகளுள் 10 ஆண்டுகள் வரை பழைமையான வழக்குகளும் காணப்படுகின்றன.எனவே கடந்த 10 ஆண்டு காலமாக நிலுவையிலுள்ள வழக்குகளின் மீதான விசாரணைகளை துரிதப்படுத்தவேண்டும்.

அத்துடன் வழக்குகள் தாமதம் ஏற்படாதவாறு இருக்க சிறந்த பொறிமுறையொன்று அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# உயர்கல்வித் துறையில் இணைய இலங்கையும் கேரளாவும் பேச்சு

(டில்லி)

இலங்கைக்கும் கேரளாவுக்கும் இடையில் உயர் கல்வித்துறையில் நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சித்ராங்கனி வாகீஸ்வரா கேரளாவின் ஆளுநர் சதாசிவத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சித்ராங்கனி வாகீஸ்வரா கேரளாவின் ஆளுநரை ராஜ் பவனில்நேற்று சந்தித்துள்ளார்.

இதன்போது உயர்கல்வித் துறையில் இருதரப்புக்கும் இடையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டதாக யு.என்.ஐ என்ற இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

உயர்கல்விக்காக கேரளாவின் பல்கலைக்கழக வாய்ப்புக்கள் குறித்து ஆளுநர் சதாசிவம் சாதகமான நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளதாகவும் அந்தச் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கைக்கும் கேரளாவுக்கும் இடையிலான சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான நிலைமைகள் குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# பெருந்தொகை கடற்குதிரைகளுடன் சீனப் பிரஜைகள் மூன்று பேர் கைது





சட்டவிரோதமாக பெருந்தொகை கடற்குதிரைகளை சீனாவுக்கு கொண்டு செல்ல முற்பட்ட சீனப் பிரஜைகள் மூவர் கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப்பிரிவினரால் கைது நேற்றுக்காலைகைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது , மேலும் சில பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சந்தேக நபர்களிடமிருந்து மூன்று சிறிய பெட்டிகளில் பொதியிடப்பட்டிருந்த 265 உலர் கடற்குதிரைகள் கைப்பற்றப்பட்டோ நிலையில், அவற்றின் பெறுமதி ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் என சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர். (இ-7)

## இன்று ஒரு தகவல்

# சக பயணிகளை விரும்புவது எப்படி?

அனைவரும் நெஞ்சில் கை வைத்துக் கொள்வோம். எங்கே சொல்லுங்கள்! நம்முடன் பஸ்ஸில் ரயிலில் விமானத்தில் பயணிக்கும் சக பயணிகளை எந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கின்றோம்?

கேள்வியை மாற்றுகின்றேன். அது இன்னும் எளிதாக இருக்கும். பக்கத்து இருக்கை காலியாக இருப்பதை விரும்புவீர்களா? அடைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதை விரும்புவீர்களா?

"பக்கத்தில் அழகான பெண் வந்து உட்கார்ந்தால் அந்த அனுபவம் தனி!'' என்று குதிக்கும் இளைஞனை இந்த இடத்தில் புறக்கணித்துவிட்டு மேலே பயணிப்போம்.

பொடியுடன் வெற்றிலைப் பாக்கும் போட்டு, பீடி , சிகரெட் பிடித்துக் கொண்டு, இருமி, தும்மி, அரட்டை அடித்து, பிடிக்காத அரசியல் பேசி, குழந்தையை லோலோ என்று கத்திவிட்டு, தண்ணீரைக் கவிழ்த்து, நம் பசிநேரத்தில் வாசனை மிகுந்த உணவு ஒன்றைப் பிரித்துச் சாப்பிட்டு, மேலேமேலே தூங்கிச் சாய்ந்து விழுந்து (ஆகா! எவ்வளவு நன்றாக இருக்கும் என்று மீண்டும் தலை தூக்கும் இளைஞனே! நீ சும்மா இரு!) தூங்கிற நேரத்தில் விளக்கைப் போட்டுக் கொண்டு கண்டவற்றையும் படித்துக் கொண்டு , கண்ணை சுழற்றுகிற நேரத்தில் கீழ் பார்த்தைக் காலி செய்யாமல் அரட்டை அடித்து, காலை நீட்டி நிமிர்த்த முடியாமல் தங்கள் பெட்டிகளை நமக்கு இடைஞ்சலாக வைத்துக் கொண்டு நம் பயணத்தையே இனிமையற்றதாக்கி விடுகிற சக பயணிகளை எத்தனை பேருக்குப் பிடிக்கும்?

அவசரப்பட்டு ஒன்றை மறந்துவிடாதீர்கள், மேற்கூறிய காரியங்களைச் செய்யுமுன்னரே நமக்கு நம் சக பயணிகள் மீது 25 சதவிகித வெறுப்பும் பொறாமையும் வந்து விடுகின்றன. மேற்கூறிய செயல்கள் வேறு நடந்தால் வெறுப்பு 100 சத விகிதத்தைத் தாண்டிவிடுகிறது.

சக பயணிகளை நேசிக்கிற மனோ பாவம் (தவறான அர்த்தத்தில்எடுத்துக்கொள்ளாத இளைஞனே!) நமக்கு அவசியம்.

பார்த்ததும் மிதமான புன்னகை ஒட்டியிருக்கிற ரயில்வே சார்ட்டைப் பார்த்து "நீங்கள் தான் மிஸ்டர் பி.வி. கேசவனா?" என்று ஓர் அசத்தலான கேள்வி உணவுப் பார்ஸலைப் பிரிக்கும் போது ''நீங்கள் சாப்பிட்டு விட்டீர்களா?'' என்று இதயத்தை வருடும் விசாரணை; தூங்கும் நேரம் வந்ததும் "இன்னும் ஒரு பத்து நிமிடம் படித்துவிட்டு விளக்கை அணைத்து விடவா?'' என்கிற இதமான கேள்வி "சொரி ! என் இருமலால் உங்களுக்குத் தொந்தரவு" என்கிற பரிவான வார்த்தை. "குழந்தை என்னைத் தூங்க விடாதது பற்றிப் பரவாயில்லை; உங்களையும் தூங்கவிடமாட்டேங்குறான்'' என்கிற அக்கறையான வாக்கியம். (பேச்சுக்கொடுத்து குடைவது அல்ல!) சில அக்கறையான கேள்விகள் என்று ஒரு சக பயணியின் மனத்தில் நல்லிடத்தைப் பிடிப்பதன் மூலம் ஒரு பயணத்தை மிக இனிமையானதாக ஆக்கிக்கொண்டு விட முடியும்.

பொது இடம் என்று வந்தால் சிறுசிறு துன்பங்களை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் தேவை. சகிப்பு மனப்பான்மை இல்லாமல் மேற்கொள்ளும் பயணம் இனிமையானதாகவே முடியாது.

நம் சொத்தை அபகரிக்க வந்தவர்களைப் போல் சக பயணிகளிடம் நடந்து கொள்வதும், பொறாமைத் தீயில் வெந்து போவதும் அபத்தமான அணுகுமுறைகள்.

அந்தச் சில மணி நேரப் பயணத்தில் சக பயணிகளிடம் நாம் மனிதத் தன்மைகள் நிறைந்தவர் என்பதை வெளிக்காட்டுவது முக்கியம்.

இப்படிச் செய்தால் சக பயணியைப் பிரியும் போது கண் கலங்கிப் பிரிவது கூடச் சாத்தியமே!

**லேனா தமிழ்வாணன்**



யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் இப்தார் நிகழ்வு அண்மையில் பீடாதிபதி கலாநிதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ் முஸ்லிம் ஒற்றுமைக்கான அமைப்பு பிரதிநிதி மு.மு.நிபாகிர் கலந்து கொண்டார். (படங்கள்: சக்தி)

## தம்புள்ளையிலிருந்து வவுனியாவிற்கு திருமணத்திற்கு பெண்பார்க்க வந்தவர்களின் வான்-மின்மாற்றியில் மோதி பாரிய விபத்து!

## 12 பேர் வைத்தியசாலையில் அனுமதி







(தம்புள்ளை)

தம்புள்ளை - அநுராதபுரம் பிரதான வீதியில் புலாகல பிரதேசத்தில் வான் ஒன்று வீதியை விட்டு விலகி, அருகில் இருந்த மின்மாற்றியில் மோதி நேற்றுக் காலை விபத்துக்கு உள்ளானது.

இவ்விபத்தில் வானில் பயணித்த ஒரே குடும்பத்தை சேர்ந்த 12 பேர் படுகாயமடைந்து, தம்புள்ளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு படுகாயடைந்தவர்கள் வெலிமட, பொரலந்த பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனத் தெரிவிகக்ப்படுகிறது.

திருமணத்திற்கு பெண் பார்ப்பதற்காக இவர்கள் வெலிமடயில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த போதே இந்த விபத்து இடம்பெற்றது.

சாரதியால் வானின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல்போனதால், வான்வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மின்மாற்றியில் மோதி பின்னர் வயல் வெளியில் விழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர்களை பிரதேசவாசிகள் வைத்தியசாலைக்கு கொண்டு சேர்த்துள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த 12 பேரில் 8 பெண்கள் 4 ஆண்கள் உட்பட சிறுவர்கள் இருவரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் சர்ச்சையாம்

### அமைச்சர் சமரசிங்க கூறுகிறார்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் சர்ச்சை நிலைமை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். கோட்டே பகுதியில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


ஜனாதிபதி வேட்பாளராக யாரை நிறுத்துவது என்பது தொடர்பில் முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வதற்கு சுதந்திரக் கட்சி அனுமதிக்காது.

நாட்டின் இறையாண்மையை பாதுகாக்க வேண்டுமாயின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஒருவர் பதவியில் இருக்க் வேண்டும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இலங்கையில் நடந்த வித்தியாசமான திருமணம்! வியப்பில் ஆழ்ந்த மக்கள்







(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்தின் கலவான பிரதேசத்தில் கடந்த வாரம் வித்தியாசமான முறையில் திருமணம் நடைபெற்றுள்ளது.

அரசாங்க பணியில் உள்ள இந்திக்க மற்றும் தில்ருக்ஷி என்ற தம்பதிக்கே இந்த வித் தியாசமான திருமணம் இடம்பெற்றுள்ளது.

முழுமையாக மோட்டார் சைக்கிள்கள் மாத்திரம் பயன் படுத்தப்பட்டு இந்த திரும ணம் இடம்பெற்றது.

மணமகனின் நண்பர்கள் மோட்டார் சைக்கிள்களில் பல்வேறு ஸ்டண்ட்களை மேற்கொண்டு வீதியை அலங்கரித்திருந்தனர்.

அத்துடன் மணமகன் மற்றும் மணமகள் மோட்டார் சைக்கிள்களில் திருமணத்திற்காக அழைத்து வரப்பட்டனர்.

இது தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பிரபல்யமடைந்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் நடத்தப்பட்ட வித்தியாசமான திருமணங்களில் ஒன்றாக இது கருதப்படுகின்றது. (இ-7)

## மகிந்தவைக் காண மக்கள் படையெடுப்பு





(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை காண வந்த மக்கள் கூட்டத்தில் சிக்கி காயமடைந்த சிறுவர்கள் ஐந்து பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அநுராதபுரம் - ஹொரவபொத்தன, முக்கர வெவ பகுதிக்கு மகிந்த ராஜபக்ஷ நேற்று விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இந் நிலையில், அவரை வரவேற்கவும், அவரை காண்பதற்கும் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தனர். இதன் போது சன நெருக்கடிக்குள் சிக்கி ஐந்து சிறுவர்கள் காயமடைந்தனர். (இ-7)

# மக்களின் மனங்களை வெல்லும் வாய்ப்பை தமிழ்த் தலைவர்கள் இழந்துவிட்டார்கள்



## அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களின் மனங்களை வெல்லும் வாய்ப்பை தமிழ்த் தலைமைகள் இழந்து விட்டார்கள் என தேசிய சகவாழ்வு மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு, புனித அன்னம்மாள் மகாவித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகவியலாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

இராணுவ அரசியல் தந்திரோபாயங்கள் இருப்பினும் அண்மையில் விஸ்வமடுவிலிருந்து இராணுவ அதிகாரியொருவர் இடமாற்றம் பெற்றுச் செல்லும்போது மக்கள் கண்ணீர மல்க வழியனுப்பியுள்ளார்கள்.

அதற்குப் பின்னால் பல மர்மங்கள் இருந்தாலும் மக்களின் மனதை அவர் வென்றார் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்த மனோகணேசன், மக்களின் மனதை வெல்லும் வாய்ப்பை தமிழ் அரசியல் தலைவர்கள் இழந்துள்ளார்கள் என்றும் தெரிவித்தார்.

மக்களின் மனதை தமிழ்த் தலைவர்கள் வெல்ல வேண்டும். அதற்கு அவர்கள் முயற்சி செய்ய வேண்டும் அதை விட்டு இராணுவ அதிகாரிக்கு கண்ணீர மல்க வழியனுப்பியதற்கு அவர்களை துரோகிகள் என்று சொல்வதில் அர்த்தமில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மண்சரிவு அபாயத்தில் தமிழ் வித்தியாலயம்

(இரத்தினபுரி)

இரத்தினபுரி கலபட பிரதான வீதியில் இருந்து 300 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ள கலபட தமிழ் வித்தியாலயம் தொடர்ந்து மண்சரிவு அபாயத்தை எதிர் நோக்கி வருவதாக, பாடசாலையின் அதிபர் தினேஷ் தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

இரத்தினபுரி மாவட்டத்தில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக பாடசாலையின் சுவர்கள் வெடிப்புற்று காணப்படுவதோடு, பாடசாலை அருகில் மண் திட்டுகள் தொடர்ந்து இடிந்து வருவதையும் அவதானிக்க முடிகிறது.

மேற்படி பாடசாலையில் 1- 9 வரை வகுப்புகள் உள்ளதுடன், 162 மாணவர்கள் கல்வி கற்பதோடு, அதிபர் உட்பட மொத்தம் ஐந்து ஆசிரியர்கள் சேவையாற்றி வருகிறார்கள்.

மேற்படி பாடசாலையில் மண்சரிவு எப்போது ஏற்படும் என்ற அச்சத்துடன் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மழை காலங்களில் பாடசாலையை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதோடு மழை காலங்களில் பெற்றோர்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதையும் தவிர்த்து வருகின்றார்கள்.

மேற்படி பாடசா்லையை வேறு இடத்தில் அமைப்பதற்கு சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சு நிதி ஒதுக்கீடு செய்துள்ளபோதிலும் பாடசாலை அமைப்பதற்கு பாதுகாப்பான இடத்தில் காணி கிடைக்காத காரணத்தால் அது பின்தள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக, அப்புகஸ்த்தன்ன தோட்ட கம்பனிக்கு சொந்தமான கலபட தோட்டப் பிரிவில் பாடசாலை அமைப்பதற்கு அப்புகஸ்தன்ன தோட்ட கம்பனி காணி வழங்கப்பட்டிருந்தபோதிலும் M.B.R.O பரிசோதனையில் அந்த காணியில் பாடசாலை அமைப்பதற்கு தகுதியற்றது என குறிப்பிட்டுள்ளது.

எனவே மேற்படி பாடசாலை அமைப்பதற்கு தேவையான காணியை பெற்றுத்தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று அதிபர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஒசுசல நிலையங்களின் எண்ணிக்கையை 50 ஆக அதிகரிக்க அரசு நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் புதிய விற்பனை நிலையம் ஒன்று மொனராகல நகரத்தில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திறக்கப்பட்ட இந்த புதிய கிளையுடன் நாட்டில் ஒசுசல கிளைகளின் எண்ணிக்கை 38 ஆக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்காலத்தில் மாத்தளை, பேராதனை, தம்புள்ளை, கேகாலை ஆகிய நகரங்களி லும் இவ்வாறான விற்பனை நிலையங்கள் திறக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வருட இறுதிக்குள் ஒசுசல விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை 50 ஆக அதிகரிக்கப்படும் என்று சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார் (இ-7)

# பதவிகளுக்கு பதிலாக 50 கோடி ரூபா கோரும் ஐ.தே.க உறுப்பினர்கள்

பதவிகளுக்கு பதிலாக 50 கோடி ரூபா பணம் வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் கோரியுள்ளனர்.

அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்காக 50 கோடி ரூபா பணம் வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பிலான கடிதமொன்றை குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கவுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இன்றைய கூட்டத்தில் இந்த யோசனைத் தீர்மானம் ஒப்படைக்கப்படவுள்ளது

இந்த எட்டு பேரும் அமைச்சு கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை நிராகரித்துள்ளனர்.

30 கோடி ரூபா நிதியும், அமைச்சு கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் வழங்குவதற்கு கட்சி மறுசீரமைப்பு கூட்டத்தின் போது பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

இருப்பினும் இந்த பரிந்துரையை பின் வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிராகரித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

**எண் 1 (சூரியன்)**
**(ஆளும் வேந்தர்கள்)**

**பிறப்பு எண் 1 விதி எண் 5**

கடவுளையும் பல நேரங்களில் வெறுப்பார்கள். சுயமுயற்சியிலேயே முன்னேறும் எண்ணமுடையவர்கள். பலருக்கு வாழ்க்கை கொடுக்கும் இவர்கள் சிலருக்கு இடைஞ்சலும் கொடுப்பார்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**
1,10,19,28,5,14,23

**துரதிர்ஷ்ட திகதிகள்**
8,17,26,4,13,22,31

**அதிர்ஷ்ட நிறங்கள்**
மஞ்சள்,வெளிர் நீலம், சந்தனம், பொன்நிறம், பச்சை, வெளிர் பச்சை, சாம்பல்

**துரதிர்ஷ்ட நிறங்கள்**
கறுப்பு, கோப்பிகலர், பாக்கு நிறம், இருண்ட நிறங்கள்.

**அதிர்ஷ்ட இரத்தினங்கள்**
மாணிக்கம், கனக புஷ்பராகம், தங்க புஷ்பராகம், ஒபல், சூரிய காந்தக் கல், வைரம், சிர்க்கான்.

**பிறப்பு எண் 1 விதி எண் 6**

உலக இன்பங்கள் அனைத்தையும் அனுபவிக்கவே பிறந்த இவர்கள், கலைகளில் ஆர்வமிக்கவர்கள். மற்ற எண்காரர்களை விடவும் மிடுக்கான தோற்றமும் பார்வையுமுடையவர்கள். இயற்கையைக் கண்டுகளிப்பதில் ஆர்வமுடையவர்கள். சொல்லும்,செயலும் கலைநயமிக்கதாகவே இருக்கும். நேர்மை, நல்ல பெயர், பல நல்ல நட்புகளையும் பெற்றிருப்பார்கள்.

இலாப நோக்கத்திலேயே எக்காரியத்தையும் செய்வார்கள். நல்ல அழகும் கவர்ச்சியான உடலும் பெற்றவர்கள். எல்லா சுகபோகங்களும் அனுபவிக்கப் பிறந்த இவர்கள் இயல், இசை, நாடகம் என்று அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்குவார்கள். புத்தகத்தின் மீது அளவுகடந்த பிரியமிருக்கும். தூய்மையை விரும்புவார்கள். வாசனைத் திரவியம், மலர்கள் மீது அலாதி பிரியமிருக்கும்.

அரசியல் அறிவு இருக்கும். நல்ல வாழ்க்கைத் துணை அமையும். சுதந்திரப் பிரியர்கள். தன்




மனதில் தோன்றியதை அப்படியே பேசிவிடுவார்கள். குழந்தைகள் மீது பாசமுடையவர்கள். மற்றவர்கள் சொல்வதை நம்பாமல் தீர விசாரித்துத் தனது மனம் கூறும் அறிவுரைப் படியே நடந்து கொள்வார்கள். தூரதேசப் பயணமும் தனிமையில் பேசிக் கொள்வதும் மிகவும் பிடிக்கும்.

எதையும் அலட்டிக் கொள்ள மாட்டார்கள். அதிகம் சிரமப் படாமல் சம்பாதிக்கும் வழி தெரிந்தவர்கள். எந்த மொழியானாலும் அழகாகவும் அழுத்தமாகவும் சுருக்கமாகவும் தெளிவாகவும் பேசும் திறன் படைத்தவர்கள். வாழ்க்கைத் துணையின் பெயரில் தொழில் செய்வார்கள். ஆடம்பரப் பிரியர்கள். எதிரிகளை வீழ்த்துவதில் வல்லவர்கள்.

பிறருடைய ஒத்துழைப்பை விரும்பாமல் தாமகவே முயற்சிகள் செய்து பணம், பதவி, புகழ் அனைத்தையும் அடைவார்கள். பேச்சில் வசீகரமிக்க இவர்கள் கவர்ச்சியான ஆடை அணிவார்கள். காதல் விவகாரங்களில் கவனமாக இருக்க வேண்டும். கவனமாக இல்லாவிட்டால் வீண் அவமானமும் கெட்ட பெயரும் வந்து சேரும். பல்வேறு நிறங்களின் மீதும் ஆர்வமுடையவர்கள்.

புதுப்புது வீடுகள் வாங்கி கவர்சிகரமாகமாற்றி விடுவார்கள். தன்னைப் போலவே பிறரும் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவார்கள். வெற்றி, தோல்விகளை ஒரேமாதிரி எடுத்துக் கொள்வார்கள். தனிமையில் வேதாந்த விடயங்களைப் பற்றி அதிகம் சிந்திப்பார்கள். உலக சக்திகளுக்கு அப்பாற்பட்ட பல சக்திகளைப் பற்றித் தெரிந்து கொள்வார்கள். நம்பிக்கையை மட்டுமே தன்னுடைய ஆயுதமாக்கி வெற்றி பெறுவார்கள். மற்றவர்களின் பேச்சின் நன்மை தீமைகளை அலசி ஆராய்ந்து நன்மைகளை மட்டுமே எடுத்துக் கொள்வார்கள்.

வெளிதேசப் பயணம், உல்லாசப் பயணம், அழகான வீடு, வாகனம் என்று வசதியான வாழ்க்கை வாழ்ந்து சுகபோகத்தை அனுபவிப்பார்கள். வெளிநாட்டு நண்பர்களின் நட்புகிடைக்கும். எங்கு சென்றாலும் இவர்களைச் சுற்றி பலபேர் இருந்து கொண்டேயிருப்பார்கள். தன்னுடைய பேச்சின் மூலம் தீய நண்பர்களை திருத்தி நல்வழியைக் காட்டுவார்கள். செல்வத்தைப் பாதுகாக்கத் தெரிந்தவர்கள். எதையும் முன்னின்று சாதித்துக் காட்டுவார்கள். சுவையான உணவை விரும்பி உண்பார்கள். தனக்கு வருமானம் தராத எந்த தொழிலிலும் காரியத்திலும் ஈடுபட மாட்டார்கள்.

(தொடரும்....)

# மாகாணத் தேர்தலை நடத்த நல்லாட்சி அரசு அஞ்சுகிறது

## மாகாணசபை உறுப்பினர் கனகராஜ் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அரசியல் ரீதியிலான பின்னடைவைச் சந்திக்க நேரிடும் என்ற பயத்தினாலேயே நல்லாட்சி அரசாங்கம் மாகாணசபைத் தேர்தலை நடத்த அஞ்சுகிறது என மத்திய மாகாண சபை உறுப்பினர் கணபதி கன கராஜ் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஹற்றன் சாமிமலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு நாட்டு மக்கள் மிகப்பெரும் எதிர்பார்ப்புகளுடன் தற்போதைய அரசாங்கத்திற்கு வாக்களித்து ஆட்சிபீடம் ஏற்றினர்.

குறிப்பாக நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களின் பங்களிப்பே தீர்மானிக்கும் சக்தியாக இருந்தது.

எனினும் கடந்த மூன்றரை ஆண்டுகளில் இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் மக்கள் திருப்தியடையவில்லை.

அதனைக் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கம் நன்கு உணர்ந்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## தேரர் மீது துப்பாக்கிச்சூடு மூவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கிரிவெஹார ராஜ மகா விகாரையின் விகாராதிபதி கோபாவாக தம்மிந்த தேரர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய பிரதான சந்தேக நபர் உள்ளிட்ட மூவரைக் கைதுசெய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அசேல பண்டார என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்ட பிரதான சந்தேக நபராவார். ஏனைய இருவரும் இவரது இரட்டைச் சகோதரர்கள் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)

## அமெரிக்க நிபுணர்கள் இலங்கைக்கு விஜயம்




(கொழும்பு)

அமெரிக்காவின் நோட்ரிடாம் பல்கலைக்கழகத்தின், தேசிய சமுத்திரவியல் மற்றும் வளிமண்டல நிர்வாகப் பிரிவின், நிபுணர்களை ஏற்றிக் கொண்டு அமெரிக்க விமானப் படையின் சி-130 விமானம் இலங்கை வந்துள்ளது.

இலங்கையின் மேலடுக்கு வளிமண்டலம் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்வதற்காகவே, நோட்ரிடாம் பல்கலைக்கழகத்தின், தேசிய சமுத்திரவியல் மற்றும் வளிமண்டல நிர்வாக பிரிவின், நிபுணர்கள் இலங்கை வந்துள்ளனர்.

சிறப்பு கருவிகள் பொருத்தப்பட்ட அமெரிக்க விமானப் படையின் சி.- 130 விமானத்தில் இந்த நிபுணர்கள் கடந்த 15 ஆம் திகதி இரவு இலங்கை வந்தடைந்தனர்.

இவர்கள், இலங்கையின் மேலடுக்கு வளிமண்டலத்தில் ஏற்படும் குழப்பங்கள் மற்றும் மாற்றங்கள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர். இலங்கை விஞ்ஞானிகளுடன் இணைந்து, அமெரிக்க நிபுணர்கள் 10 நாட்கள் ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர். (இ-7)

## ATM இயந்திரத்தில் 8 மில்லியனை கொள்ளையடித்த இளைஞர்கள்

ATM இயந்திரத்தில் 8 மில்லியன் ரூபாய் பணத்தை கொள்ளையடித்த இரண்டு இளைஞர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த இருவரும் 8 மில்லியன் 78 ஆயிரம் ரூபாய் பணத்தை கொள்ளையடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு மற்றும் ஜாஎல பிரதேசத்தில் இந்த கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. நீர்கொழும்பு பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் பின்னர் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை குரன பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களிடமும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர்களிடம் இருந்து இரண்டு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பணம் மீட்கப்பட்டுள்ளது.

அவ்வாறு மோசடி செய்த பணத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

நீர்கொழும்பு பிரதேசத்தை சேர்ந்த 26 வயதுடைய இரண்டு சந்தேக நபர்களையும் நீர்கொழும்பு நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-7)

## கந்தளாயில் இனம் தெரியாத நபர்களால் அடித்து சேதமாக்கப்பட்ட ஹோட்டல்




(கொழும்பு)

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள ஹோட்டலொன்று இனம் தெரியாத நபர்களால் அடித்து சேதமாக்கப்பட்டுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளதாகவும், குறித்த ஹோட்டல் முஸ்லிம் நபர் ஒருவருக்கு சொந்தமானது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேசைகள், கதிரைகள் உட்பட இதர பொருட்களையும் சேதப்படுத்தியுள்ளதாகவும், இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1443

Search for people, places and things — Nagendram Home

### ஐங்கரன்

உண்மையான பாசத்திற்கு தகுதியானவர்கள் கிடைத்துவிட்டால்



கண்ணில் கண்ணீருக்கும் வேலையிருக்காது, மனதில் மகிழ்ச்சிக்கும் பஞ்சமிருக்காது...!

### ஜெயராஜ்

எதுவும் இல்லாத போது சமாளிக்கின்ற திறமையும்



எல்லாம் இருக்கும் போது நீ நடந்து கொள்ளும் முறையுமே வெற்றியைத் தீர்மானிக்கின்றது...!

### பானுஜன்

பழகும் விதத்தில் பழகிப் பார்த்தால் பகைவன்கூட நண்பனே!



பாசம் காட்டி ஆசை வைத்தால் மிருகம்கூடத் தெய்வமே

### ஐஸ்வர்யா

பெற்றதாயை உண்மையாக நேசிப்பவனால் ஒரு பெண்ணை ஏமாற்ற முடியாது



ஒரு பெண்ணை உண்மையாக நேசிப்பவனால் இன்னொரு பெண்ணிடம் ஏமாற முடியாது...!

### ஜெயசுதா

உள்ளே தள்ளும் உணவு ருசியாக இருக்க வேண்டும் என்று நினைக்கும் நாக்கு



வெளியே தள்ளும் வார்த்தை சரியாக இருக்க வேண்டும் என்று நினைப்பதில்லை...!

### பானுசா

மனிதனின் பொம்மலாட்டத்தில் காட்சிக்கு காட்சி சுவாரசியம்



இறைவனின் பொம்மலாட்டத்தில் ஒவ்வொரு காட்சியும் இரகசியம்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஆனி மாத இராசி பலன்கள்

## 15.06.2018-16.07.2018



விளம்பி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது, மாதத் தொடக்கத்தில் கிரக நிலைகள் சாதகமாகவே உள்ளது. குறிப்பாக உங்கள் இராசிநாதன் சூரியன் இலாப ஸ்தானத்தில் இலாபாதிபதி புதனுடன் கூடியிருப்பதால் தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்போடு இனிய வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்வீர்கள். தொழில் நடத்துபவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வங்கிகளில் கடனுதவிய்ய எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களுக்கு, அது கிடைத்து தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

இராசிக்கு 3 ஆம் இடத்தில் குரு வக்கிரம் பெற்றிருக்கிறார். உங்கள் இராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். அவர் வக்கிர இயக்கத்தில் இருக்கும் போது, சகோதர ஒத்துழைப்பு குறையலாம். அதே நேரத்தில் வழக்குகளில் திடீர் திருப்பங்கள் ஏற்படும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகள் பஞ்சாயத்துகள் மூலம் நல்ல முடிவிற்கு வரும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து சில நல்ல காரியங்களை முடித்துக்கொடுப்பார்கள்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அலுவலகப் பிரச்சினைகள் அகலும். வீடு மற்றும் வாகனங்கள் வாங்க சலுகைகள் கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு அது கிடைக்கும். மேலதிகாரிகள் உங்கள் மீதிருந்த மனஸ்தாபத்தை மாற்றிக் கொள்வர். உடன்பணிபுரிபவர்கள் உங்களுக்கு உதவிசெய்ய முன்வருவர். பஞ்சமஸ்தான சனிவக்கிரம் பெற்றிருப்பதால் பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது.

திருமணம் செய்வதில் இதுவரை எண்ணற்ற தடைகள் உங்களுக்கு வந்திருக்கலாம். தேடித் தேடிச் சென்று தெய்வங்கள் அத்தனையையும் வழிபட்டும் ஏன் தடை உருவாகின்றது என்று நினைத்திருப்பீர்கள். மாதத்தின் மையப் பகுதியில் வக்கிர நிவர்த்தியான குருவின் பார்வை உங்கள் இராசிக்கு சப்தம ஸ்தானத்தில் பதிகின்றது. எனவே மங்கல ஓசை மனையில் கேட்கும் சூழ் நிலை உருவாகும். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி நீங்கள் எடுத்த முயற்சி கைகூடும் நேரம் இது.

இம்மாதம் குரு வக்கிர நிவர்த்தியாகிறார். அதே சமயம் உச்சம் பெற்ற செவ்வாய் வக்கிரமடைகிறார். 4, 9 இற்கு அதிபதியான செவ்வாய் வக்கிரமடைவது அவ்வளவு நல்லதல்ல என்பதால், அதற்குரிய சிறப்புப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது. பொதுவாக சஷ்டி விரதமிருந்து சண்முகநாதரை வழிபட்டு வருவது நல்லது.

கடக புதனின் சஞ்சாரம்!

வாகும். அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். பழுதாகிப் போன மின்சாதனப் பொருட்களை மாற்றும் முயற்சி கைகூடும். மாமன், மைத்துனர் வழியில் பகையாகிப் போன சொந்தங்கள் இப்பொழுது உறவாக மாறலாம்.

குரு வக்கிர நிவர்த்தி

ஜூலை 4 ஆம் திகதி துலாம் இராசியில் சஞ்சரிக்கும் குரு பகவான் வக்கிர நிவர்த்தியாகிறார். பலம்பெற்ற குருவின் பார்வை பதியும் இடங்கள் எல்லாம் பரபரப்பாகச்




செயற்படும். குறிப்பாக 7, 9, 11 ஆகிய இடங்களைக் குரு பார்ப்பதால், வரன்கள் முடிவாகும். வருமானம் திருப்திதரும். கரம் குளிரப் பொருள் கிடைக்கும். கடல்தாண்டும் யோகம் வரும்.

கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு, போதிய மூலதனம் இல்லாமல் இருந்தால், அது உடன் பிறந்தவர்களின் மூலம் கிடைக்கும். மங்கல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். பெண்களால் பெருமை சேரும் நேரமிது.

மகர செவ்வாய் வக்கிரம்

ஜூலை 9 ஆம் திகதி மகரத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் வக்கிரம் பெறுகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. வியாபாரப் போட்டிகள் அதிகரிக்கும். எதையும் துணிந்து முடிவெடுக்க இயலாது. தன்னம்பிக்கை குறையும். அங்காரக தலத்திற்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது.

இம்மாதம் பிரதோஷ நாளில் நந்தீஸ்வரரையும், சிவனையும், உமையவளையும் வழிபட்டு வாருங்கள்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் யோகமான மாதமாகும். தடைக்கற்கள் படிக்கற்களாக மாறும். பண வரவு திருப்தி தரும். கடைதிறப்பு விழா, கட்டடத் திறப்பு விழாக்களில் கவனம் செலுத்துவீர்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். புகுந்த வீட்டில் உங்கள் புகழ் மேலோங்கும். தாயின் உடல்நலம் சீராகும்.

## புதிய ஒப்பந்தங்கள் குவியும்!


ஜூன் 23 ஆம் திகதி கடக இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு தனலாபாதி பதியாக விளங்கும் புதன், விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் விரயங்கள் கூடுதலாக இருக்கும். அத்தியாவசியப் பொருட்கள் மட்டுமின்றி ஆடம்பரப் பொருட்களையும் வாங்கும் நிர்ப்பந்தம் உரு

சிம்ம சுக்கிரன் சஞ்சாரம்

ஜூலை 5 ஆம் திகதி சிம்ம இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். 3, 10 இற்கு அதிபதியான சுக்கிரன் உங்கள் இராசிக்கு வரும் போது, உடன்பிறப்புக ளின் வழியில் உங்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரலாம். புதிய தொழில் தொடங்

தங்கம், வெள்ளி ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. தள்ளிப் போன திருமணப் பேச்சுகள் முடிவடையும். பிள்ளைகளால் பெருமை உண்டு. வீடுமாற்றங்கள் இனிமை தரும். உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்கு சம்பள உயர்வுகள் தானாக வந்து சேரும். அனுமன் வழிபாடும், குலதெய்வ வழிபாடும் ஆனந்தம் வழங்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



விளம்பி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது, அர்த்தாஷ்டமச் சனியோடு செவ்வாய் இணைந்திருந்த நிலை மாறப்போகிறது. செவ்வாய் இப்பொழுது மகரத்தில் சஞ்சரிக்கிறார். எனவே கொஞ்சம் மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். எதிர்மறைச் சிந்தனைகள் தலைதூக்கும்.

உங்கள் இராசிநாதன் புதன் தொழில் ஸ்தானத்தில் பலம்பெற்றுச் சூரியன், சந்திரனோடு சேர்க்கை பெற்றிருக்கிறார். இராசிநாதன் பலம்பெறுவதால் ஆரோக்கியத் தொல்லை அகலும். உள்ளத்தில் உற்சாகம் குடிகொள்ளும். துணிந்து சில காரியங்களுக்கு முடிவெடுத்து மற்றவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துவீர்கள். உத்தியோகத்தில் நல்ல பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கலாம். ஜீவன ஸ்தானத்தை குரு பார்ப்பதால் சுக ஜீவனம் உருவாகும் நேரமிது. வேலைகிடைக்காதவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். விருப்ப ஓய்வில் வெளிவந்தவர்களுக்குக் கூட புதிய வேலை அமையும்.


பொதுவாக புத - ஆதித்ய யோகமும் செயற்படும் இந்த மாதத்தில், அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்குப் புதிய பொறுப்புகளும் பதவிகளும் வரலாம். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். நினைத்ததை நினைத்தபடி செய்து முடிப்பீர்கள்.

செவ்வாய் - சுக்கிரப் பார்வை இருப்பதால், சகோதர வர்க்கத்தினர் வழியில் திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்வுகள் நடைபெற லாம். உங்களை விட்டு விலகிச் சென்ற உடன்பிறப்புகள் இப்பொழுது விரும்பி வந்து இணைவர். சொத்துகளால் இலாபம் உண்டு. என்றைக்கோ வாங்கிப் போட்ட சொத்துகள் இப்பொழுது பல மடங்கு விலை உயர்ந்து உங்கள் பணத்தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

வாக்கு ஸ்தானத்தில் குரு சஞ்சரிப்பதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலும். கூடுதல் பொறுப்புகள் குடும்பத்தில் வந்து சேரும். வெளிநாட்டு வேலைக்காக விண்ணப்பித்தவர்களுக்கு அது கைகூடும் நேரம் இது. இம்மாதம் சனி மற்றும் குரு வக்கிர இயக்கத்தில் இருப்பதாலும் செவ்வாய் வக்கிரம் பெறப் போவதாலும் அதற்குரிய

செய்து முடிப்பீர்கள். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். இளைய சகோதரத்தின் வழியே ஏற்பட்ட இடையூறுகள் அகலும். ஆரோக்கியம் சீராகி உற்சாகத்தோடு பணி புரிவீர்கள். வராத பாக்கிகள் வசூலாகும். மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்ச்சி நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும்.

குரு வக்கிர நிவர்த்தி




ஜூலை 4 ஆம் திகதி துலாம் இராசியில் சஞ்சரிக்கும் குரு பகவான் வக்கிர நிவர்த்தியாகிறார். வாக்கு, தனம், குடும்பம் என

கிறார். இந்த நேரத்தில் வரவைக் காட்டிலும் செலவு கூடும். இருந்தாலும் அதைச் சமாளிக்கும் திறமை உங்களுக்கு உண்டு. குடும்பச் சுமையும் அதிகரிக்கலாம். உறவினர்களின் வருகை, விருந்து, விழாக்கள் நடைபெற்று விரயத்தை அதிகரிக்க வைக்கும்.

மகர செவ்வாய் வக்கிரம்

உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் ஜூலை 9 ஆம் திகதி மகரத்தில் வக்ரம் அடைகின்றார். இது நன்மைதான். பூர்வீகச் சொத்துகளில் முறையான பங்கீடுகள் கிடைக்கும். தொழிலில் புதிய மாற்றங்கள் உருவாகும்.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானையும், அஷ்டமியன்று பைரவரையும் வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் தொடக்கத்தில் சந்தோஷ வாய்ப்புகளை அதிகம் சந்திப்பீர்கள். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய பாதை புலப்படும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். கணவன்-மனைவிக்குள் அன்பும் அரவணைப்பும்

## சுபச் செய்திகள் வீடு தேடி வரும்!

தலங்களுக்குச் சென்று வந்தால் அக்கறை செலுத்தாத காரியங்களில் கூட ஆதாயம் கிடைக்கும். ஆனித் திருமஞ்சன தினத்தன்று சிவபுராணம் பாடி நடராஜரை வழிபடுவதன் மூலம் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வந்து சேரும்.

கடக புதன் சஞ்சாரம்

ஜூன் 23 ஆம் திகதி கடக இராசிக்கு புதன் செல்கிறார். இராசிநாதன் இலாப ஸ்தானத்திற்கு வரும் போது பொருளாதார நிலை உயரும். பற்றாக்குறை நிலை மாறும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில்

வர்ணிக்கப்படும் இடமான இரண்டாம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான், வக்கிர நிவர்த்தியாவதால் வாக்கு மேன்மை, குடும்ப சுகம், தொழில் மேன்மை, உத்தியோக விருத்தி போன்றவற்றைக் கொடுக்கக் காரணமாக இருப்பார்.

சிம்ம சுக்கிரன் சஞ்சாரம்

ஜூலை 5 ஆம் திகதி சிம்ம இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்

குறையாமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகள் உங்கள் சொற்படி நடக்க முன்வருவர். வீடு, இடம் போன்றவற்றை உங்கள் பெயரிலேயே வாங்கும் யோகம் உண்டு. தாய்வழி ஆதரவு ஓரளவு கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு பல நாட்களாக எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். பழைய வாகனங்களைக் கொடுத்துப் புதிய வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். வியாழன் தோறும் தென்முகக் கடவுளை வழிபட்டு வாருங்கள். (தொடரும்)

# திருமலையில் சிறப்புற இடம்பெற்ற அறநெறி மாநாடு



(திருமலை)


திருகோணமலை மாவட்ட இந்து அறநெறி விழிப் புணர்வு மாநாடு கடந்த 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

காலை 7.30 மணிக்கு திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தில் இருந்து ஆரம்பமாகிய பிரமாண்டமான பேரணி காலை 9.30 மணியளவில் உட்துறைமுக வீதியிலுள்ள இந்து கலாசார மண்டபத்தைச் சென்றடைந்தது. திருகோணமலை மாவட்டச் செயலகம், பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகள், இந்து சமய அமைப்புக்கள் என அனைவரும் ஒன்றிணைந்து இப்பேரணியை மேற்கொண்டன.

திருகோணமலை மேலதிக அரச அதிபர் கா.அருந்தவராசா தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டின் பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிகச் செயலாளர் உடுவை. சி.தில்லைநடராசா கலந்து கொண்டார். தொடக்கவுரையை உதவி மாவட்டச் செயலாளர் ந.பிரதீபன் ஆற்றினார். ஆசியுரையை பத்திரகாளி அம்மன் ஆலயப் பிரதம குரு வண.சோ. இரவிச்சந்திரக் குருக்கள் வழங்கினார். இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜின், பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம், கிழக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர்.

மட்டக்களப்பு காயத்திரி பீடத்தைச் சேர்ந்த சிவயோகச் செல்வர் சாம்பசிவ சிவாச்சாரியார் விசேட உரையாற்றினார். கோப்பாய் ஆசிரிய கலா சாலை விரிவுரையாளர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் சிறப்புச் சொற்பொழிவை ஆற்றினார். (இ-7)

# ஞானசார தேரரின் காவியுடை அகற்றப்பட்டமைக்கு எதிர்ப்பு



(கொழும்பு)

ஞானசார தேரரின் காவியுடை அகற்றப்பட்டமைக்கு கோட்டை ஸ்ரீ கல்யாணி சாமக்ரீ சங்க சபை எதிர்ப்பு தெரிவித்துள்ளது.


சங்க சபையின் அனுமதியின்றி தமது சங்கத்தின் உறுப்பினரான கலகொட அத்தே ஞானசார தேரரின் காவியுடை அகற்றப்பட்டுள்ளது எனவும் இதனை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் கோட்டை ஸ்ரீ கல்யாணி சாமக்ரீ சங்க சபை அறிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் நீதியமைச்சருக்கு கடிதம் அனுப்பவுள்ளதாகவும் அந்தச் சபை தெரிவித்துள்ளது. (இ-7)

# தேவையற்ற அரசியல் போட்டிகளால் அபிவிருத்தி முடங்கியுள்ளது-துமிந்த

(கொழும்பு)

தேவையற்ற அரசியல் போட்டிகள் காரணமாக, நாட்டின் அபிவிருத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் அமைச்சருமான துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார். (இ-7)



# மாணவிகளுடன் ஜனாதிபதி சந்திப்பு



(புத்தளம்)

உயர்தர பரீட்சையில் சிறந்த சித்திகளை பெற்ற மாணவிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்துள்ளார்.

புத்தளம் - முந்தலம சிங்கள மகா வித்தியாலயத்தில் சிறப்பான பெறுபேறுகளை பெற்ற இரு பார்வையற்ற மாணவிகளையே ஜனாதிபதி சந்தித்துள்ளார்.

கடந்த வருடம் உயர் தர பரீட்சையில் கலைப்பிரிவில் பரீட்சை எழுதி, 3 ஏ மற்றும் 3 பி சித்திகளை பெற்ற இந்த மாணவிகள் பல்கலைக்கழக வாய்ப்பை பெற்றுள்ளனர்.

புத்தளம், மதுரன்குளிய பிரதேசத்திற்கு சென்ற ஜனாதிபதியை சந்திப்பதற்கு மாணவிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதற்கமைய அந்த கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் ஜனாதிபதி அந்த மாணவிகளை சந்தித்துள்ளார்.

இதன்போது பத்துல்ஓய, பின்கட்டிய பிரதேசத்தை சேர்ந்த பார்வையற்ற மாணவிகள் தொடர்பிலான தகவல்களை உடனடியாக ஜனாதிபதி செயலகத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி, அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார். (இ-7)

# ஆசிரியர் இடமாற்றக் கொள்கை தொடர்பான சுற்றுநிருபத்தைத் திருத்தியமைக்க ஆலோசனை

(ஏறாவூர்)

ஆசிரியர் இடமாற்றக் கொள்கை தொடர்பான 2007 ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க சுற்றுநிருபத்தைத் திருத்தியமைப்பதற்கு கல்வி அமைச்சிடம் ஆலோசனைகளைச் சமர்ப்பித்துள்ளதாக கிழக்கு மாகாணத் தமிழாசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சிவக்கொழுந்து ஜெயராஜா நேற்று ஞாயிற்றுக் கிழமை தெரிவித்தார்.

ஆசிரியர் இடமாற்றக் கொள்கை தொடர்பான மேற்படி சுற்றுநிருபத்தைத் திருத்தியமைப்பதற்கு கிழக்கு மாகாண தமிழாசிரியர் சங்கம் முக்கியமான 7 ஆலோசனைகளைச் சமர்ப்பித்துள்ளது.

கல்விச் சேவைகள் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற கல்வித் துறைக் கண்காணிப்பு உப குழு, ஆசிரியர் இடமாற்றக் கொள்கை தொடர்பான 2007/20ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் குறைபாடுகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பரிந்துரைகளைச் சமர்ப்பிக்குமாறு கல்விச் செயலாளரிடம் பணிப்புரை விடுத்திருந்தது.

அந்தப் பணிப்புரைக்கமைவாக ஆலோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சின் கல்வி மற்றும் குணநல அபிவிருத்திக்கான மேலதிக செயலாளர் ஆர்.எம்.எம். ரத்நாயக்க ஆசிரியர் தொழிற் சங்கங்களைக் கேட்டிருந்தார்.

இதன்படி தேசியப் பாடசாலைகளில் ஓர் குறிப்பிட்ட காலம் சேவையாற்றியதன் பின்னர் கட்டாயமாக மாகாணப் பாடசாலைக்கு இடமாற்றம் வழங்குதல், இதற்கேற்ப மாகாணப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் தேசியப் பாடசாலைகளில் இணைவதற்கு சந்தர்ப்பம் வழங்குதல், பிரபலமான தேசியப் பாடசாலைகளில் சேவைக் காலத்திற்கு ஏற்றவாறு இடமாற்றம் செய்வது தொடர்பில் தீர்மானித்தல் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பிலேயே ஆலோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது.

இதன்படி கிழக்கு மாகாணத் தமிழாசிரியர் சங்கமும் ஆலோசனைகளைச் சமர்ப்பித்துள்ளது.

ஆசிரியரொருவர் தேசியப் பாடசாலையொன்றில் அதிகபட்சமாக 8 வருடங்கள் கடமையாற்றியதன் பின்னர் கட்டாயமாக மாகாணப் பாடசாலைக்கு இடமாற்றப்படல் வேண்டும்,

அதேவேளை மாகாணப் பாடசாலை பாடசாலையொன்றில் கடமையாற்றும் ஆசிரியரொருவர் தேசியப் பாடசாலையில் இணைந்து கொள்ள விரும்புவாராயின் அவர் மாகாண நிர்வாகத்திலுள்ள கஷ்ட அல்லது அதி கஷ்டப் பாடசாலையொன்றில் குறைந்தபட்சம் 3 வருடங்கள் கடமையாற்றியிருப்பது கட்டாயமாக்கப்படல் வேண்டும்,

ஆசிரியரொருவர் எந்த வகை இடமாற்றத்தில் இருந்தும் விலக்குப் பெறுவதற்கான வயதெல்லை 55 ஆக நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

இடமாற்றத்தில் இருந்து விலக்குப் பெறுவதற்கான மருத்துவச் சான்றிதழ் அரசாங்க வைத்தியசாலையொன்றினால் வழங்கப்படல் வேண்டும் என்பன உள்ளிட்ட மொத்தம் 7 ஆலோசனைகள் கிழக்கு மாகாணத் தமிழாசிரியர் சங்கத்தினால் கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (இ-7)




# பசுக்கள் நம் தெய்வம்

பசுவதை கூடாது என்கிறார்கள். பசுவை தெய்வமாகப் போற்ற வேண்டியதன் அவசியத்தை ஏன் என புரிந்து கொள்ளுங்கள்.

பிருகுமுனிவரின் மகன் சியவனர். பெரும் தவசீலர். 12 ஆண்டுகள் ஒரு பெரிய குளத்துக்குள் சமாதி நிலையில் இருந்தார். நீருக்குள் வாசம் செய்யும் ஜீவராசிகள் அனைத்தும் அவரிடம் நட்பு கொண்டு அவரைத் தெய்வமாகப் போற்றின.

ஒரு நாள் சில மீனவர்கள், சியவனர் தியான நிலையில் இருந்த குளத்தில் மீன் பிடிக்க வலை வீசினர். அந்த வலையில் சியவனர் அகப்பட்டுக் கொண்டார். வலையில் ஏதோ பெரிய மீன் சிக்கி விட்டதாக எண்ணிய மீனவர்கள் வலையை பெரும் சிரமத்துடன் மேலே இழுத்தனர். சியவனர் நீருக்குள்ளேயே இருந்ததால், அவர் உடல் முழுவதும் பாசிபடர்ந்து பார்க்கவே அச்சம் தரும் நிலையில் இருந்தார்.

அவரைப் பார்த்ததும், மீனவர்கள் நடுங்கினர். மன்னிப்பு கோரினர். மீன்கள் அனைத்தும் துடிதுடித்து இறந்தன. இதைக் கண்டு சியவனர் மனம் மிக வருந்தினார். தன்னுடன் அன்போடு பழகிய மீன்களைப் பிரிந்த துன்பம் தாளாமல், மனம் வெறுத்து தானும் உயிர் விடப் போவதாகக் கூறினார்.

மீனவர்கள் பதறினர்.

"மகா தபஸ்வியான இவர் இறந்தால், தங்கள் குலத்துக்கு ஆபத்து வரலாம், பெரிய பாவம் வந்து சேரலாம்," எனக் கலங்கி, அவ்வூர் மன்



னனிடம் முறையிட்டு, சியவனரின் மரணத்தைத் தடுக்க ஓடினர்.

மன்னன் தன் அமைச்சர்களுடன் குளக்கரைக்கு வந்தான். சியவனரின் பாதங்களில் பணிந்து வணங்கினான்.

மன்னனிடம் சியவனர், "மன்னா! இந்த குளத்திலிருந்து பிடிக்கப்பட்ட மீன்கள் இந்த மீனவர்களுக்குச் சொந்தமானது என்றால், நானும் அவர்களுக்கே சொந்தம். இருப்பினும், இந்த மீன்களை நீ விலைக்கு வாங்கி விட்டால், நான் உனக்கு சொந்தமாகி விடுவேன். என்னை வாங்கிக் கொள்," என்றார்.

மன்னனும் மறுக்காமல் அப்படியே செய்வதாகச் சொல்லி, அவருக்கு மட்டும் விலையாக ஓராயிரம் பொற்காசுகள் மீனவர்களுக்குக் கொடுத்தான்.

"மன்னா! என் விலை ஓராயிரம் பொற்காசு தானா?" என்றார் முனிவர் வருத்தத்துடன்.

மன்னன் ஒரு இலட்சம் பொற்காசுகளை அவர்களுக்குக் கொடுத்தான்.

இப்போதும் திருப்தியடையாத முனிவர், "உம்...இவ்வளவு தானா என் மதிப்பு?" என்றார்.

"ஒரு கோடி பொற்காசு கொடுக்கட்டுமா?" என மன்னன் முனிவரிடம் கேட்க அதற்கும் அவர் சம்மதம் தரவில்லை.

மன்னனுக்கு கடும் வருத்தம். என்ன செய்வதென அறியாமல் நின்ற வேளையில், மற்றொரு தவமுனிவர் அவ்வழியே வந்தார். நடந்ததைக் கேட்டார்.

"மன்னா! இதற்கு தீர்வு மிக சுலபமானது. பொன், பொருளை மட்டுமல்ல, உன் இராஜ்யத்தையே விட்டுக் கொடுத்தாலும், ஒரு முனிவருக்கு ஈடாகாது. இவர்களுக்கு ஒரு பசுவை விலையாகக்கொடு. மந்திரங்களின் வடிவம் பசு. அது அந்தணருக்கு சமமானது. இந்த முனிவருக்கு விலையாக ஒரு பசுவைக் கொடுத்து விடு." என்றார்.

மன்னனும் அவ்வாறே செய்தான்.

சியவனரும் மகிழ்ந்தார்.

"மன்னா! இப்போது தான் சரியான விலையை நிர்ணயம் செய்தாய்," என்றார்.

பசுவின் பெருமை தனக்குத் தெரிய காரணமாக இருந்த அந்த மீனவர்களுக்கு மன்னன் பொற்காசுகளை வாரி வழங்கினான்.




❖ 618-லீ யுவான் சீனாவில் பேரரசனாக முடிசூடினான். அவனது தாங் வம்சம் அடுத்த மூன்று நூற்றாண்டுகளுக்கு சீனாவை ஆண்டது.

❖ 1429-பிரெஞ்சுப் படையினர் ஜோன் ஆஃப் ஆர்க் தலைமையில் பாட்டேய் சமரில் ஆங்கிலேயப் படையினரைத் தோற்கடித்தனர். நூறாண்டுப் போர் உச்சக்கட்டத்தை அடைந்தது.

❖ 1767-ஆங்கிலேயக் கடற்படைத் தலைவர் சாமுவேல் வால்லிசு தாகித்தியை அடைந்த முதலாவது ஐரோப்பியர் ஆனார்.

❖ 1778-அமெரிக்கப் புரட்சிப் போர்: பிரித்தானியப் படைகள் பிலடெல்பியாவில் இருந்து வெளியேறினர்.

❖ 1812-பிரித்தானிய அமெரிக்கப் போர், 1812: அமெரிக்கக் காங்கிரசு பிரித்தானியா, கனடா, அயர்லாந்து மீது போரை அறிவித்தது.

❖ 1815-நெப்போலியப் போர்கள்: வாட்டர்லூ சமரில் நெப்போலியன் பொனபார்ட் வெல்லிங்டன் பிரபுவினால் தோற்கடிக்கப்பட்டதை அடுத்து நெப்போலியன் பிரான்சின் அரசாட்சியை இரண்டாம் தடவையாகவும், இறுதியாகவும் இழந்தான்.

❖ 1858-சார்லஸ் டார்வின் தனது படிவளர்ச்சிக் கொள்கை பற்றிய முடிவுகளுக்கு ஒப்பான ஆய்வு அறிக்கைகளை ஆல்பிரட் ரசல் வாலேசுவிடம் இருந்து பெற்றார். இதனை அடுத்து டார்வின் தனது ஆய்வு அறிக்கைகளை வெளியிட வேண்டி வந்தது.

❖ 1869-இந்திய ரூபாய் அதன் வெளியில் குறிக்கப்பட்ட துணை அலகுகளுடன் இலங்கையின் சட்டப்படியான நாணயமாக அறிவிக்கப்பட்டது.

❖ 1887-வேற்று நாடு ஒன்று தமது நாடுகளுடன் போரில் ஈடுபட்டால் இரு நாடுகளும் நடுநிலை வகிப்பதென்ற ஒப்பந்தத்தில் செருமனியும் உருசியாவும் கையெழுத்திட்டன.

❖ 1908-ஜப்பானியர்கள் 781 பேர் பிரேசிலின் சான்டோசு துறையை அடைந்ததுடன் ஜப்பானின் குடியேற்றம் அங்கு ஆரம்பித்தது.

❖ 1946-சமூகவுடைமைவாதி ராம் மனோகர் லோகியா போத்துக்கீசருக்கு எதிராக கோவாவில் நேரடி நடவடிக்கை எடுக்கக் கோரினார்.

❖ 1972-பிரித்தானிய பயணிகள் விமானம் ஒன்று இலண்டன் ஈத்ரோ விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட இரண்டு நிமிடங்களில் தரையில் மோதி வெடித்ததில் 118 பேர் கொல்லப்பட்டனர்.

❖ 1981-அமெரிக்காவில் மசாசுசெட்ஸ் மாநில நாடாளுமன்றத்தில் தமிழ் ஈழத்தை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

❖ 1981-களவு தொழில்நுட்பத்தைக் கொண்டு தயாரான முதலாவது வானூர்தி லொக்கீட் எஃப்-117 நைட்ஹோக் தனது முதலாவது பயணத்தை மேற்கொண்டது.

❖ 1985-விடுதலைப் புலிகளுக்கும் இலங்கைப் படையினருக்கும் இடையில் முதலாவது போர் நிறுத்தம் ஒப்பந்தம் ஏற்பட்டது.

**பிறப்புகள்**

❖ 1908-கக்கன், தமிழக அரசியல்வாதி (இ. 1981)

❖ 1918-உபைதுல்லா, மலேசியத் தமிழ் அரசியல்வாதி (இ. 2009)

❖ 1924-கோபுலு, தமிழக ஓவியர் (இ. 2015)

❖ 1941-பஞ்சு அருணாசலம், தமிழகத் திரைப்பட இயக்குநர், பாடலாசிரியர் (இ. 2016)

❖ 1959-செயில் வாசு ஒக்சலேட், கனடிய நிதி எழுத்தாளர், ஊடகவியலாளர்

❖ 1960-தியாகராஜா மகேஸ்வரன், இலங்கை அரசியல்வாதி (இ. 2008)

❖ 1967-அரவிந்த்சாமி, தென்னிந்திய நடிகர், தொழிலதிபர்

**இறப்புகள்**

❖ 2010-ஜோசே சரமாகூ, நோபல் பரிசு பெற்ற போர்த்துக்கீச புதின எழுத்தாளர் (பி. 1922)

❖ 2011-பிரெடெரிக் சிலூயா, சாம்பியாவின் 2 ஆவது அரசுத்தலைவர் (பி. 1943)

**சிறப்பு நாள்**

❖ மனித உரிமைகள் நாள் (அசர்பைஜான்)

❖ தேசிய நாள் (சீசெல்சு)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 160 | 120 | 160 | 140 | 160 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 110 | 100 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 350 | 380 | 270 | 280 | 300 | 160 |
| தக்காளி | 250 | 260 | 280 | 280 | 320 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 40 | 40 | 40 |
| கோவா | 200 | 160 | 65 | 140 | 150 | 120 |
| கரட் | 250 | 400 | 200 | 300 | 460 | 270 |
| பூசணி | 40 | 40 | 20 | 40 | 40 | 60 |
| புடோல் | 120 | 160 | 70 | 120 | 150 | 100 |
| வாழைக்காய் | 80 | 60 | 35 | 50 | 80 | 40 |
| சின்ன வெங்காயம் | 160 | 200 | 120 | 160 | 160 | 130 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 300 | 500 | 290 | 200 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 100 | 80 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 60 |
| பயற்றங்காய் | 200 | 200 | 130 | 180 | 200 | 180 |
| லீக்ஸ் | 300 | 400 | 240 | 300 | 400 | 250 |
| பீற்றூட் | 150 | 160 | 95 | 120 | 160 | 100 |
| குடமிளகாய் | 250 | 180 | 280 | 240 | 400 | 120 |
| முருங்கைக்காய் | 500 | 250 | 260 | 240 | 200 | 250 |
| போஞ்சி | 320 | 300 | – | 320 | 320 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | – | 140 | 120 | 140 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 35 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 120 | 100 | 100 | 120 | 200 | 70 |
| (தேங்காய் (ஒன்று) | 30 | 30-70 | 30-60 | 70 | 50-75 | 70 |
| இராசவள்ளி | 200 | 200 | – | 180 | 160 | 100 |
| வெங்காயப்பூ | 300 | – | – | 280 | 280 | 250 |
| முள்ளங்கி | 120 | – | 35 | 120 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 40 | – | 10 | 40 | 40 | 35 |
| வல்லாரை | 15 | – | 10 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | – | – | 60 | 100 | – |

ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டிய அடிப்படை நற்குணம், தனக்குத்தானே உண்மையாக இருப்பது. ~ சத்குரு

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எமதருமை தமிழ் மக்களே! முத்தநாதர்கள் வருவர் மெய்ப்பொருளாய் இருந்துவிடாதீர்கள்

அறுபத்து மூன்று நாயன்மார்களில் மெய்ப்பொருள் நாயனாரும் ஒருவர். ஒரு நாட்டின் அரசர். மிகச் சிறந்த சிவபக்தர். மெய்அடியார்களைக் கண்டால் அவர்களைத் தொழுது வணங்கும் பக்குவம்மிக்கவர்.

இவ்வாறாக சிவசிந்தையோடு ஆட்சி செய்த மெய்பொருள் நாயனாருக்கும் ஒரு பகைவன் இருந்தான். அவன் முத்தநாதன் எனப் பெயர் கொண்டவன்.

மெய்ப்பொருள் நாயனாரைக் கொல்வதற்கு அவன் சதி செய்கிறான். மெய்ப்பொருள் நாயனார் சிவ அடியார்களைக் கண்டால் அவர்களை வணங்கி ஏற்றுவார் என்பதை அறிந்து கொண்ட முத்தநாதன், தன் உடம்பு முழுவதும் திருநீற்றைப் பூசியபடி தலைமுடியை வாரிக் கட்டி, கையினில் ஒரு புத்தகத்தை எடுத்து அதற்குள் கூரிய ஆயுதமொன்றை வைத்துக் கொண்டு மெய்ப்பொருளின் அரண்மனை நோக்கிச் செல்கிறான்.

தம் அரசனின் மனநிலை அறிந்த காவலர்கள் முத்தநாதனைக் கண்டதும் எழுந்து ஐயனின் வருக.. வருக.. என்று இருகரம் கூப்பி வரவேற்றனர். அரசர் இருக்கும் மனைவாசலில் தத்தன் என்பவன் காவல் செய்கிறான்.

முத்தநாதனின் கோலத்தைக் கண்ட தத்தன் அவன் மீது சந்தேகம் கொண்டு; இப்போது மன்னரைச் சந்திக்க முடியாது. அவர் நித்திரையாக இருக்கிறார் என்கிறான். எனினும் முத்தநாதன் விடுவதாக இல்லை.

உங்கள் மன்னருக்கு வேதம் மந்திரத்தை ஓத வேண்டும். ஆகையால் நான் மன்னரைச் சந்தித்தே ஆக வேண்டும் என்கிறான்.

எதுவும் செய்ய முடியாதநிலையில், மெய்ப்பொருளைச் சந்திக்கின்ற வாய்ப்பு முத்தநாதனுக்குக் கிடைக்கிறது. அவனின் தோற்றப் பொலிவைக் கண்ட மெய்ப்பொருள் எழுந்து வணங்கி நிற்கிறார்.

கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த நினைத்த முத்தநாதன் புத்தகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதத்தை எடுத்து மெய்ப்பொருள் நாயனாரைக் குத்தி விடுகிறான்.

அந்தோ! மன்னன் துடிக்கிறான். நிலைமையைப் புரிந்து கொண்ட தத்தன் ஓடிச் சென்று முத்தநாதனைக் கொல்ல முற்படும் வேளை, தத்தா கொல்லாதே அவரைப் பாதுகாப்பாக ஊரின் எல்லையில் விட்டு வருக என்கிறார்.

மன்னனின் கட்டளையை தத்தன் நிறைவேற்றி விட்டு, முத்தநாதன் பாதுகாப்பாக ஊர் எல்லை கடந்தான் என்று செய்தி சொல்ல, தத்தா இன்று எனக்கு நீ செய்த உதவி யார் செய்வார் என்று கூறியபடியே மன்னன் மெய்ப்பொருள் மரணித்துப் போகிறார்.

மெய்ப்பொருள் நாயனாரின் வரலாற்றைப் படிக்கும்போதெல்லாம் ஏன்தான் அவர் இப்படி நடந்து கொண்டார்.

ஒரு காவலாளிக்கு இருந்த சந்தேகம் கூட, மெய்ப்பொருளுக்கு ஏற்படாதது ஏன்? என்றெல்லாம் நினைப்பதுண்டு. யார் என்னதான் கூறினாலும் மெய்ப்பொருளின் செயலை ஒரு புத்தி சாதுரியமான செயலாக எம்மால் கருதமுடியவில்லை

இது கதை. இந்தக் கதைக்குள் ஒரு நிஜம் இருக்கிறது. ஆம், மிக விரைவில் ஒரு சில அரசியல் கட்சிகள் தங்களைப் புனரமைப்பது என்று கூறிக்கொண்டு முத்தநாத வடிவத்தில் வரத் தயாராகியுள்ளனர்.

இதற்காக முல்லைத்தீவில் ஒன்றுகூடி தவறுகள் நடந்ததுபோல கதை அளந்திருக்கின்றனர். இதுதான் முத்தநாத வடிவத்தின் முதல் அறிகுறி. தமிழ் மக்களே! மெய்ப்பொருள் நாயனார்களாய் இருந்து விடாதீர்கள்.

# மத்திய வங்கி முறிகள் விசாரணை

## அறிக்கையினை பாராளுமன்றத்துக்கு வழங்குமாறு ஜனாதிபதியின் செயலாளரிடம் கோரிக்கை

மத்திய வங்கி முறிகள் கொடுக்கல் வாங்கல் விசாரணை ஜனாதிபதி ஆணைககுழுவின் அறிக்கையின் அனைத்து இணைப்புக்களையும் பாராளுமன்றத்துக்கு வழங்குமாறு ஜனாதிபதி செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கடிதம் ஜனாதிபதி செயலாளர் ஒஸ்டின் பெர்னான்டோவுக்கு கடந்த வாரம், அனுப்பி வைக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இணைப்புக்கள் கிடைத்தவுடன், அது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளை சபாநாயகர் கரு ஜயசூரிய ஊடாக முன்னெடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலாளர் ஒஸ்டின் பெர்னான்டோவிடம் கேட்டபோது,

இதற்கான பதில் கடிதம் இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

மத்திய வங்கி முறிகள் அறிக்கை அல்லது அதன் இணைப்புக்கள் தொடர்பிலான விடயங்கள் குறித்து, சட்டமா அதிபரின் ஆலோசனைக்கேற்ப அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஜனாதிபதி செயலாளர் ஒஸ்டின் பெர்னான்டோ தெரிவித்தார். (ம)

## சரியான மொழிபெயர்ப்பாளர்களே நாட்டின் தேவையாகவுள்ளது

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் வலியுறுத்து

இணையத்தளங்களில் உள்ளவர்கள் உண்மையினை அறிய விரும்பினால் எங்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டு விடயங்களை பெற்றுக்கொள்ளலாம் என்றும் அதற்கு நல்ல மொழி பெயர்ப்பாளர்கள் அவசியம் என்பதனையும் வட மாகாண முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று இணையத்தள ஊடகவியலாளர்களை சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு நடக்கின்ற விடயங்கள் சரியாக தெற்குக்கு தெரியப்படுத்தவில்லை. அதற்கு முக்கிய காரணம் மொழி பெயாப்பு சரியாக அமையாததுதான் காரணம் என முதலமைச்சர் கூறியுள்ளார்.

அரசியல் ரீதியாக இங்கு நடப்பவற்றை தெற்குக்கு தெரியப்படுத்தாது இருக்க வேண்டும் என்ற மனோநிலை இருப்பதன் காரணத்தினாலேயே அது தெரியப் படுத்தப்படாமல் இருக்கின்றது என்று கூறிய முதலமைச்சர், சரியாக புரிந்துணர்வு இல்லாத காரணத்தினால் பிழையான விடயங்களை அவர்கள் எழுதிக் கொண்டு வருகிறார்கள் என அவர் கூறியுள்ளார்.

முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் வாசஸ்தலத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது வடக்கில் ஊடகவியலாளர்கள் எதிர் நோக்கும்சவால்கள்உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடரபில் ஆராயப்பட்டுள்ளன. (ம)

## ஹெரோயின் கடத்திய 4 பேர் பொலிஸாரால் கைது

நீர்கொழும்பு, புளத்சிங்கள, மட்டக்குளி பிரதேசங்கள் சிலவற்றில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்புக்களில் ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்ட 4 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இந்த சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது , 129 கிராம் 750 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெறற தகவலுக்கு அமைய இந்த சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், 30க்கும் 50க்கும் இடைப்பட்ட வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு , புளத்சிங்கள, மட்டக்குளி மற்றும் மோதரை பிரதேசங்களில் குறித்த சுற்றிவளைப்புகள் மேறகொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

## மத்தேகொட உடமாதுவ பிரதேசத்தில் ரி 56 ரக துப்பாக்கியொன்றும் 30 தோட்டாக்களும் மீட்பு

மத்தேகொட - உடமாதுவ பிரதேசத்தில் இடம்பெற்ற சிரமதான பணியின்போது, பொதியொன்றில் சுற்றப்பட்டிருந்த நிலையில் ரி 56 ரக துப்பாக்கியொன்றும் 30 தோட்டாக்களும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வயலொன்றில் அமைந்துள்ள மதகொன்றில் குறித்த துப்பாக்கி மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்தார். (ம)

## இலங்கையில் கண்ணிவெடிகளை அகற்றும் மத்திய நிலையம்

(கொழும்பு)

பிராந்திய நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் மத்திய நிலையம் ஒன்றை இலங்கையில் அமைப்பதற்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்க முன்வந் துள்ளது.

நாட்டிற்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க பசுபிக் அமைப்பைச் சேர்ந்த குழுவினர் இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவுடன பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதன்போது குழுவினர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளனர்.

2020ஆம் ஆண்டளவில இலங்கையை நிலக் கண்ணி வெடியற்ற நாடாக தரமுயர்த்துவதே இதன் நோக்கமாகும். (ம)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### பொருளும் நிகழ்ச்சியும்



நீங்கள் எழுதுவதற்காகப் பேனாவைக் கையில் வைத்திருக்கின்றீர்கள். அதையே நம் சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம். பேனாவைப் பார்த்து இது பொருளா அல்லது நிகழ்ச்சியா என்ற வினா எழுப்புங்கள். கையினால் தொட்டு உணர முடிவதாலும் கண்ணால் பார்த்து உணர முடிவதாலும் பேனா ஒரு பொருள்தான் என்று கருத நேரும்.

மேலே செல்வோம். அந்தப் பேனாவை எரியும் நெருப்பிலிட்டால் என்ன ஆகும் எரிந்து சாம்பலாகிப் போகும். பேனா என்ற வடிவம் இப்போது அதற்கு இல்லை. பேனா எங்கே? அழிந்து விட்டது. இவ்வாறு அழிவது பொருளாகுமா? பேனா என்னவாயிற்று? ஆராய்வோம். நெருப்பினிட்டவுடன் அதில் இணைந்திருந்த பலதரப்பட்ட அணுக்கள் வெப்பத்தால் கிளர்ச்சியூட்டப் பெற்று இயக்க விரைவு பெற்று ஒன்றை விட்டு ஒன்று பிரிந்து போயிற்று. அதனால் அணுக்கள் கூட்டால் அமைந்த பேனா என்ற வடிவம் மறைந்து போயிற்று. எது பேனாவாகக் காட்சியளித்தது? அணுக்கள். பேனா பொருளன்று. அணுக்கள் கூடிய ஒரு நிதழ்ச்சி தான் என்பது விளங்கக் கண்டோம். பேனா மட்டுமென்ன? நாம் காணும் இப்பேரியக்க மண்டல நிகழ்ச்சிகள். தோற்றங்கள் அத்தனையும் அணுக்களின் கூட்டு இயக்கம் தானே? ஒரு கூட்டுத் தோற்றமாக நாம் காணும் எப்பொருளிலும் ஒவ்வொரு அணுவும் தனித்தனியாகத் தான் இயங்கிக்கொண்டிருக்கிறன. அவற்றின் இடையில் உள்ள இடைவெளியைக் காணும் திறமை புலனறிவுக்கு இல்லை.

அதனால் ஒரே கொத்தாக ஒரு தோற்றம் காட்சியாகின்றது. இவ்வாறு இந்த அடிப்படையில் ஆராய்ந்தால் பிரபஞ்சத் தோற்றங்கள் அத்தனையும் நிகழ்ச்சிகளே என்ற முடிவுக்கு வருகிறோம். அடுத்து ஒரு வினா. எல்லாத் தோற்றங்கட்கும் அடிப்படைத் துகளான அப்பரமாணு பொருளா? நிகழ்ச்சியா? இதனையும் ஆராய்வோம். அப்பரமாணுவின் இயக்கத்தைக் கழிந்து யார் அல்லது எது இயங்குகின்றது என்று உணர்ந்து கொள்ளலாமல்லவா? அது தானே பொருளாக இருக்க முடியும்? பரமாணுவின் இயக்கத்தைக் கழித்துப் பார்த்தால் என்ன மிஞ்சும்? ஒன்றுமேயில்லை. வெட்டவெளி தான் மீதி. அகன்று நின்று பூரணமாக இருக்கும் வெட்டவெளி என்ற பொருள் தான் நுண்ணிய இயக்கத்தில். கண்ட நிலையில் பரமாணுவாக இருக்கின்றது. இப்போது பொருள்நிலை விளங்குகிறதல்லவா? வெட்ட வெளி என்ற ஒரு நிலையே பொருள் நிலையாகும். அதன் இயக்க நிகழ்ச்சியே பரமாணுவாகும். மற்ற தோற்றங்கள் யாவும் பரமாணுவாகும். மற்ற தோற்றங்கள் யாவும் பரமாணுக்களின் கூட்டு அல்லது தொடர் நிகழ்ச்சியாகும்.

# தர்மமுழக்கம் வெற்றிக்கிண்ணம் தர்மபுரம் மத்தியகல்லூரி சம்பியன்






டானியலின் சிறப்பான துடுப்பாட்டம் மற்றும் யதுசன், யசிந்தனின் துல்லியமான பந்துவீச்சு என்பன கைகொடுக்க, தர்மபுரம் மத்திய கல்லூரி, 4 ஆவது தர்மமுழக்கத்தை 8 விக்கெட்களால் வென்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாடசாலைகளாக முழங்காவில் மகா வித்தியாலயம் மற்றும் தர்மபுரம் மத்திய கல்லூரி ஆகியவற்றின் 19 வயதுப்பிரிவு துடுப்பாட்ட அணிகளுக்கிடையில் வருடாவருடம் இடம் பெறும் தர்மமுழக்கம் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் நான்காவது பருவகாலப் போட்டி கடந்த 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முழங்காவில் மகா வித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகியது.

மட்டுப்படுத்தாத ஓவர்களையுடைய, இரண்டு நாட்களைக் கொண்டதாக இந்தப் போட்டி நடைபெறுகின்றது. 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தர்மமுழக்கத்தில், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் தர்மபுரம் மத்திய கல்லூரி அணியும், 2017 ஆம் ஆண்டு முழங்காவில் .மகா வித்தியாலய அணியும் வென்ற நிலையில், நான்காவது வருடப் போட்டி 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் முழங்காவில் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.









நாணயச்சுழற்சியில் வென்ற தர்மபுரம் மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. அதற்கிணங்க களமிறங்கிய, முழங்காவில் மகா வித்தியாலய அணி, 38.1 ஓவர்களில் 93 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் கே.கிருஸ்ணராஜ் 27 ஓட்டங்களையும், ரி.ஜெயந்தன் 26 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் தர்மபுரம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த நா.யதுசன் 23 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களையும், கு.யசிந்தன் 14 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸினை ஆரம்பித்த தர்மபுரம் மத்திய கல்லூரி அணி, 28.4 ஓவர்களில் 117 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் சு.டானியல் 51 ஓட்டங்களையும், கு.சர்மிளன் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் முழங்காவில் மகா வித்தியாலய அணி சார்பாக, எஸ்.டினோஜன் 5 விக்கெட்களையும், ரி.ஜெயந்தன் 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

24 ஓட்டங்கள் பின்னிலையில், தமது இரண்டாவது இனிங்ஸினை ஆரம்பித்த முழங்காவில் மகா வித்தியாலய அணி, முதல்நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட்களை இழந்து 32 ஓட்டங்களை எடுத்திருந்தது. தொடர்ந்து இரண்டாவது நாள் ஆட்டம் தொடர்கையில், ஓரளவு சிறப்பாக ஆட்டத்தை வெளிப்படுத்திய முழங்காவில் அணி, 56 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ரி.நிதர்சன் 41 ஓட்டங்களையும், எஸ்.டினோஜன் 27 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் தர்மபுரம் மத்திய கல்லூரி அணி சார்பாக, கு.யசிந்தன் 4 விக்கெட்களையும், நா.யதுசன் 4 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

85 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தர்மபுரம் மத்திய கல்லூரி அணி, 2 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரர் மற்றும் ஆட்டநாயகனாக தர்மபுரம் மத்திய கல்லூரியின், சு.டானியல் தெரிவு செய்யப்பட்டார். மேலும், அதே அணியின் நா.யதுசன் சிறந்த பந்துவீச்சாளராகவும், முழங்காவில் மகா வித்தியாலய அணியின் டினோஜன் சிறந்த களத்தடுப்பாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். (க-26-315)

## மொறட்டுவவை வெற்றிகண்டு காலிறுதியில் யாழ்.பல்கலை



இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி ஒரு விக்கெட்டால் திரில் வெற்றிபெற்றது.

50 ஓவர்களைக் கொண்ட மேற்படி சுற்றுப்போட்டியானது தற்போது நடைபெற்று வருகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், மொறட்டுவப் பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம் என்பன ஒரு குழுவில் இடம்பெற்றிருந்தன. இந்தக் குழுவில் முக்கியமான போட்டியொன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மைதானத்தில் கடந்த 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. இதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியை எதிர்த்து மொறட்டுவ பல்கலைக்கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற மொறட்டுவப் பல்கலைக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. ஆரம்ப விக்கெட் இணைப்பாட்டம் ஒசுற மஹடியுல்வெவ மற்றும் துஸ்மந்த டிசாநாயக்க ஆகியோர் 44 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். அதன் பின்னர் மொறட்டுவையின் துடுப்பாட்டம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பந்து வீச்சின் முன் மண்டியிட்டு 33.4 ஓவர்களில் 99 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்களை இழந்து இக்கட்டான நிலையில் இருந்தது. எனினும், இறுதி விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த திலங்க டில்சான் - இசுரு ஜோடி தம்மிடையே 31 ஓட்டங்களைப்பகிர்ந்து, அணியை திடமான நிலைக்கு இட்டுச் சென்றனர். மொறட்டுவ அணி, 44.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஒசுற மஹடியுல் வெவ 25, துஸ்மந்த டிசாநாயக்க 20 ஓட்டங்களையும், டில்சான், இசுரு தலா 16 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி சார்பாக, ஆர்.லோகதீஸ்வர் 10 ஓவர்கள் பந்துவீசி 30 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும், சோமதிலக்க 2 விக்கெட்களையும், பி.துவாரகசீலன், டி.ஜனோந்தன், எஸ்.சுபேந்திரன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

131 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற வெற்றி இலக்கைத் துரத்திய பல்கலைக்கழக அணி முன்வரிசை துடுப்பாட்டத்தில் தடுமாறியது. எனினும், கபில்ராஜ் - துவாரகசீலன் அணிக்கு நம்பிக்கையளித்தனர். 95 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்கள் என பலமான நிலையில் இருந்தது. அதன் பின்னர் சீரான இடைவெளியில் விக்கெட்களை பறிகொடுத்தது. ஒரு கட்டத்தில் 130 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது, 9 ஆவது விக்கெட்டையும் இழந்து, மேலதிக விக்கெட் இழப்பின்றி வெற்றியையும் பெற்றது. 39.2 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து பல்கலைக்கழக அணி வெற்றிபெற்றது. துடுப்பாட்டத்தில் துவாரகசீலன் 24, எஸ்.கபில்ராஜ் 23, சோமதிலக்க, ஆர்.நிதர்சன் தலா 16 ஓட்டங்களையும்பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் மொறட்டுவப் பல்கலைக்கழக அணி சார் பாக, ஹிருச பலப்பிட்டிய 2.3 ஓவர்கள் பந்துவீசி 9 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும், ஈ.கான்டுல வெலிவிற்ற 10 ஓவர்கள் பந்துவீசி 39 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும், திலின கசுன் 2 விக்கெட்களையும்கைப்பற்றினர். இந்த வெற்றியுடன் சுற்றுப்போட்டியின் காலிறுதிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி உள்நுழைந்தது. (க-26)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

மூளாய் விக்ரோறியா விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் மென்பந்தாட்டக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

அணிக்கு ஆறுபேர் ஐந்து பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இச் சுற்றுப் போட்டியில் பங்கு பற்ற விரும்பும் அணிகள் 077 914 3882, 077 722 5330 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம். (க)



அரியாலை சனசமூக நிலையத்தின் 69 வது ஆண்டு நிறைவு விழாவில் மாவட்ட ரீதியிலான கயிறிழுத்தல் போட்டியில் நாவலடி உதயசூரியன் விளையாட்டுக் கழக வீராங்கனைகள் முதலாம் இடத்தினை பெற்றுச் சம்பியன் பட்டத்தை தட்டிக்கொண்டனர். கடந்த 2017 ஆம் ஆண்டும் நடைபெற்ற கயிறிழுத்தல் போட்டியில் இவர்கள் சம்பியன் பட்டத்தை வென்றது குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

## அரசியல் அமைப்பு...

எம். ஏ.சுமந்திரன்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி பகுதியில் உள்ள இளைஞர்களை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் அங்கு உரையாற்றுகையில், போர் முடிந்த பின்னர் இந்திய அரசு, வேறு அரசு, மற்றும் மகிந்த அரசுடனும் பேசினோம்.

மகிந்த அரசுடன் 18 சுற்று பேச்சு நடத்தினோம்.

மகிந்த அரசை மாற்றி வேறு அரசு ஒன்றை கொண்டுவந்த போது ஒப்பந்தம் எதுவும் செய்யவில்லை.

ஏனெனில் ஒப்பந்தம் செய்தால் மைத்திரி தோற்று மகிந்த வென்று விடுவார் என்பதனால் ஒப்பந்தம் செய்யுமாறு சந்திரிகா கோரிய போதும் சம்பந்தன் ஐயா ஏற்கவில்லை.

இந்த நாட்டின் ஜனாதிபதியாகவே மைத்திரியை நியமித்தோமே தவிர சு.க.தலைவராக அல்ல என்றார்.

அரசியல் அமைப்பு விடயத்தில் சந்திரிகா காலத்தில் கொண்டுவரப்பட்டது நல்லது. ஆனால் இப்போது நாங்கள் கொண்டுவர இருப்பது அதனை அண்மித்தது.

அன்று அதை எதிர்த்தோம் இன்று அதை அண்மித்ததிற்காக ஏங்குகின்றோம்.

கால சூழ்நிலை சுபாவத்திற்கு ஏற்றவாறு நடக்க வேண்டும்.

அரசியல் அமைப்பு விடயத்தில் நாங்கள் வெளியேறாது நம்பிக்கையுடன் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.

இருப்பினும் திரும்பவும் போராட்டம் ஒன்று ஏற்படும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படுமாயின் தமிழர்கள் இந்த நாட்டிலே வாழமுடியாத சூழல் ஏற்படும் என்றார். (ம-60)

## மோதலுக்கு வாள்களுடன்...

நின்றிருந்தவர்களை பிடிக்க முயன்ற போது, மோட்டார் சைக்கிள்களில் இவர்கள் தப்பித்துச் சென்றுள்ளனர்.

இவர்களை சுமார் 6 கி.மீ தூரம் வரை துரத்திச் சென்று இருவரை கைக் கோடாரி மற்றும் வாளுடன் புலனாய்வு அதிகாரிகள் கைது செய்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-4,60,89)

## பொலிஸாரைத் தாக்கிய...

னர். அந்த கும்பல்களைச் சேர்ந்தோர் பொலிஸாரைத் தாக்கினர்.

அதனால் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என மல்லாகம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் பேச்சாளர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

எனினும் சம்பவ இடத்திலிருந்த பொது மக்கள் பொலிஸார் எவருக்கும் காயமில்லை எனத் தெரிவித்தனர்.

சகாய மாதா ஆலய பெருநாளில் பங்கேற்ற இளைஞர் மீதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும் குறித்த பகுதிக்கு வந்த கொலையுண்டவரின் உறவினர்கள், குறித்த நபர் எவ்வித குற்றச் செயலோடும் தொடர்பற்றவர் என தெரிவித்தனர்.

மேலும் சம்பவ இடத்தில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். (ம-4,9)

## பொலிஸாரின் துப்...

ததால் அப்பகுதியில் பெரும் பதற்ற நிலை காணப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருகையில், மல்லாகம் சதாசகாய மாதா ஆலய திருவிழா நேற்று மாலை இடம்பெற்றிருந்த வேளை அவ்வழியாக வந்த குழுவினர் அங்கு நின்ற இளைஞர் சிலரை தாக்கியுள்ளனர்.

அப்போது அந்த பகுதியால் வந்த பொலிஸார் குறித்த மோதலை தடுக்க முற்பட்டுள்ளார்கள். பொலிஸாரை கண்டதும் தாக்குதலை மேற்கொண்ட இளைஞர்கள் தப்பி சென்றுள்ளார்கள்.

அப்போது தாக்குதலுக்கு உள்ளான இளைஞர் ஆலயத்தினுள் ஓடி செல்ல முற்பட்ட போது பொலிஸார் அவரை நோக்கி சுடுவதற்கு முயற்சித்தனர்

அப்போது அந்த இளைஞருடைய சித்தப்பா (உயிரிழந்த நபர்) குறித்த இளைஞரை கட்டிப்பிடித்துள்ளார். அப்போதே குறித்த இளைஞரின் பின் பக்கமாக துப்பாக்கி குண்டு பாய்ந்துள்ளது.

சம்பவ இடத்திலேயே குறித்த நபர் உயிரிழந்துள்ளார். துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்ட பொலிஸார் தாம் சுன்னாகம் பொலிஸ் என தெரிவித்துள்ளனர்.

இளைஞர் உயிரிழந்ததை அறிந்த அப்பகுதி இளைஞர்கள் பொலிஸார் வந்த வாகனத்தை அடித்து நொறுக்கியதுடன், வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனால் அப்பகுதியில் பெரும் பதற்ற நிலை காணப்பட்டதுடன் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டனர்.

அதன் போது மல்லாகம் நீதவான் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை மேற்கொண்டதை தொடர்ந்து அப்பகுதியில் வீதி மறியலில் ஈடுபட்ட மக்கள் போராட்டத்தை கைவிட்டனர்.

இருப்பினும் ஆலயத்துக்கு வந்த இளைஞரே கொல்லப்பட்டவர் என்றும் இதற்கு முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் தெரிவித்திருந்தனர். (ம-4,9)

## ராஜபக்ஷவினர் மீண்டும்...

குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாட்டினை தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ராஜபக்ஷவினருக்கு இந்த நாட்டையும் அதிகாரத்தையும் கொடுத்து விட்டால் இந்த நாடு பொருளாதார ரீதியில் பலமடையும் என மக்கள் நம்ப வேண்டாம். ராஜபக்ஷவினர் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இந்த நாட்டு மக்கள் பசியுடனும் வெறுங்கையுடனுமே வீதியில் செல்ல வேண்டிவரும். இவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே இலங்கைக்கு எதிரான பொருளாதார தடைகளை விதிக்க சர்வதேச நாடுகள் தயாராகிவிடும்.

இந்த அரசாங்கம் வெற்றிகொண்டுள்ள சகல நாடுகளின் ஆதரவும் மீண்டும் இல்லாது போகும். எமக்கு சர்வதேச நாடுகள் வழங்கிய சகல பொருளாதார சலுகைகளும் மீண்டும் தடுக்கப்படும். இதனால் நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடிகள் உருவாகும். இதனை மக்கள் மறந்துவிடக்கூடாது. ஆகவே மகிந்த ராஜபக்ஷ என்ற நபர் ஓய்வு பெறும் வரையிலேயே கூட்டு எதிர்க்கட்சி பலம் இருக்கும். அதன்பின்னர் நடப்பவை வேடிக்கையாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ம)

## பொதுவேட்பாளருக்கு...

மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமாகிய மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட தகுதியான வேட்பாளர், தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தான் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுஜன பெரமுன தலைமையிலான ஸ்ரீ ல.சு. கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், மகிந்தவின் விருப்பின் பேரில் ஒருவரையே எதிர்வரும் ஜனாதிபதி வேட்பாளராக கொண்டுவர வேண்டும் என தெரிவித்து வருகின்றனர்.

அரசாங்கத்திலிருந்து வெளியேறிய ஸ்ரீ ல.சு.க.யின் 16 பேர் கொண்ட குழு, மகிந்த ராஜபக்ஷவை மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருக்கும் போதே பிரதமராக்கி ஸ்ரீ ல.சு.க.யின் அதிகாரத்தை தக்க வைக்க முயற்சித்து வருகின்றது.

பசில் ராஜபக்ஷ உட்பட பொதுஜன பெரமுன கட்சியின் நிலைப்பாடு, எதிர்வரும் எந்தவொரு தேர்தலிலும் தமது மலர் மொட்டு சின்னத்திலேயே போட்டியிட வேண்டும் என்பதாகவுள்ளது.

தற்பொழுது அரசாங்கத்துடன் உள்ள ஸ்ரீ ல.சு.கயின் 43 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தனிவேட்பாளருக்காக போட்டியிடகளமிறங்குமாக இருந்தால், அது ஐக்கிய தேசியக் கட்சிக்கும், மகிந்த குழுவுக்குமே சாதகமாக அமையப் போகின்றது என்பது அரசியல் அவதானிகள் பலரும் தெரிவித்து வரும் கருத்தாகவுள்ளது. (ம)

# ஐ.தே கட்சியினை சரியானவர்களிடம் வழங்க வேண்டும் ரவி கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பில் கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின்போது பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கருத்து வெளியிட்டார்.

வடகொழும்பு துரித நகர அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் புளூமெண்டல் பொலிஸாரும் கொழும்பு மாநகர சபையினரும் இணைந்து சிரமதானமொன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பிய நிலையில் அதற்கு பதிலளிக்கும் போது, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இன்று கட்சிக்குள் பாரிய பிளவு உள்ளது. நம்பிக்கை சீர்குலைக்கப்பட்டுள்ளது. இதனை சரியான தலைவரிடம் வழங்க வேண்டும். அதுவே தேவையாகவுள்ளது. மகிழ்ச்சிதரும் பதில்கள் தேவையில்லை. உண்மையான தலைமைத்துவத்தை வழங்கக்கூடியவாறு நடவடிக்கை எடுப்பதன் ஊடாகவே மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த முடியும் என ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (ம)

## மல்லாகம் நீதிபதி...

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் கொல்லப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த மல்லாகம் மாவட்ட நீதிபதி அந்தோனிப்பிள்ளை ஜூட்சன், நேரில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொது மக்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி, துப்பாக்கிச் சூடு நடத்திய சுன்னாகம் பொலிஸ் உத்தியோகத்தரை கைது செய்ய தெல்லிப்பழை பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அத்துடன், சடலத்தையும் நேரில் விசாரணை செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ம-9)

## பொலிஸாரில் சூட்டில்...

மல்லாகம் குழமன்கால் பகுதியை சேர்ந்த பாக்கியராசா சுதர்சன் (வயது 32) என்பவரே மேற்படி பரிதாபமாக உயிரிழந்தவராவார்.

மேற்படி மோதலின் போது மேலும் இரு இளைஞர்கள் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

மல்லாகம் சதாசகாய மாதா ஆலய திருவிழா நேற்று மாலை நடைபெற்றது. அப்போது குறித்த ஆலயத்துக்கு வருகை தந்த வேறு பகுதியை சேர்ந்த ஒரு குழு ஆலய முன்றலில் நின்றவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

அந்த நேரம் அப்பகுதியில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் மரண விசாரணை ஒன்றை முடித்துவிட்டு திரும்பிய சுன்னாகம் பொலிஸார் குறித்த குழு மோதலை தடுப்பதற்கு முயற்சித்துள்ளார்கள். அப்போது அங்கு நின்ற இளைஞர்கள் வாள் மற்றும் இரும்பு கம்பிகளுடன் இருந்து தாக்குதலை மேற்கொண்டதுடன் பொலிஸார் மீதும் தாக்குவதற்கு முயற்சித்துள்ளனர்.

இதன்போது பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டிருந்தனர். அப்போது குறித்த குழுவில் உள்ள சிலர் அவ்விடத்தை விட்டு தப்பி சென்ற போது அங்கு நின்ற ஒரு இளைஞரை குறிவைத்த பொலிஸார் அந்த இளைஞனை சுடுவதற்கு துப்பாக்கியை நீட்டியுள்ளனர்.

அதை அவதானித்த குறித்த இளைஞரின் சித்தப்பா (உயிரிழந்தவர்) குறித்த இளைஞரை சுடவேண்டாம் என தெரிவித்து இளைஞரை கட்டிப்பிடித்துள்ளார்.

அப்போது துப்பாக்கி குண்டு குறித்த இளைஞரின் சித்தப்பாவின் முதுகில் பட்டு உடனடியாக சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை வாள்வெட்டு குழுவை சேர்ந்தவர்கள் அவ்விடத்தில் இருந்து தப்பி சென்றதுடன் குறித்த மோதலின் போது ஏழாலையை சேர்ந்த தி.ஸ்ரீதரன் (வயது 27), தெல்லிப்பழையை சேர்ந்த ர.பிரதீபன் (வயது 33) ஆகிய இருவரும் வாள்வெட்டில் காயமடைந்ததாகவும் அவர்கள் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அத்துடன் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டு சுன்னாகம் பொலிஸாரும் அவ்விடத்தை விட்டு சென்றிருந்தனர்.

இந்த சம்பவத்தில் தேவாலயத்துக்கு வந்திருந்த இளைஞர் பொலிசாரின் துப்பாக்கி சூட்டுக்கு பரிதாபமாக உயிரிழந்ததை அடுத்து அப்பகுதி மக்கள் பொலிஸாரின் வாகனங்களை தாக்கியதுடன் வீதி மறியலில் ஈடுபட்டனர்.

அத்துடன் துப்பாக்கி குண்டுகள் பல அவ்விடத்தில் சிதறி காணப்பட்டதால் அதை பொலிஸார் அப்புறப்படுத்திய வேளை அங்கு நின்ற இளைஞர்கள் சிலர் அதை கைப்பற்றியிருந்தனர்.

நிலைமை விபரீதமடைந்த போது அந்த வீதியை மறித்ததுடன் தேவாலய கதவையும் மூடிய பொலிஸார் பொதுமக்களை அடக்குவற்கு முற்பட்டனர். இருப்பினும் அப்பகுதியில் பெரும் பதற்றநிலை ஏற்பட்டதால் மேலதிக பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

அதனை தொடர்ந்து சம்பவ இடத்துக்கு மல்லாகம் நீதவான் ஏ.யூட்சன் வருகை தந்து விசாரணை மேற்கொண்ட பின்னர் பொது மக்கள் தமது போராட்டத்தை கைவிட்டனர், மேலதிக விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்த சம்பவம் குறித்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதுடன், சம்பவத்தில் அப்பாவி இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் இதற்கு நீதி வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவித்திருந்தனர்.(ம-4,9,25,78,104)

## குற்றத்தை கட்டுப்படுத்த...

திபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தினார்.

வரகாபொல, தல்லியத்த பகுதியில் அமைந்துள்ள ஆனந்த போதி விவேக செனசுனவின் புதிய 3 மாடி கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் பேசிய அவர்,

நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தவும் தற்போதைய அரசாங்கம் தவறிவிட்டது.

ஆனால் தற்போதைய அரசாங்கம் அரசியல் அமைப்பை மாற்றி, தமது அதிகாரத்தை உறுதிப்படுத்த முயற்சிக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

## துப்பாக்கிச்சூடு...

யோகஸ்தரை கைது செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பொலிஸார் துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் கொல்லப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த மல்லாகம் மாவட்ட நீதிபதி அந்தோனிப்பிள்ளை ஜூட்சன், நேரில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்.

இதன்போது இச் சம்பவம் தொடர்பில் பொது மக்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி, துப்பாக்கிச் சூட்டை நடத்திய சுன்னாகம் பொலிஸ் உத்தியோகத்தரை கைது செய்ய உத்தரவிட்டார்.

அத்துடன், சடலத்தையும் நேரில் விசாரணை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4,9)

## விஷக்கடிக்கு...

தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மிருசுவில் பகுதியைச் சேர்ந்த 11வயதான ஜெ.விதுர்சன் பாம்புக் கடிக்கு இலக்கான நிலையில் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேலும் எழுதுமட்டுவாள் வடக்கைச் சேர்ந்த 19வயதான ஆர்.கஜீபன் மற்றும் கைதடியைச் சேர்ந்த 67வயதான எஸ்.வல்லிபுரம் ஆகிய இருவரும் இனந்தெரியாத விஷக் கடிக்கு இலக்கான நிலையில் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-30)

## கூட்டமைப்பு...

சாட்டியுள்ளார்.

வவுனியா வெளிக்குளம் பிரதேசத்தில் ஜனநாயக மக்கள் காங்கிரஸின் வன்னி மாவட்ட தலைமை காரியாலய திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

வவுனியாவில் எந்தவகையான அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்படவில்லை என சுட்டிக்காட்டிய அவர், இங்கிருந்து நாடாளுமன்றம் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் அபிவிருத்தி முன்னெடுப்புகள் குறித்து தேடிப் பார்க்குமாறு நான் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றேன் என தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் காலத்தில் இங்கு பல அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டன, ஆனால் இன்று அவ்வாறு எதுவும் இடம்பெறுவதில்லை. எனவே கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அது தொடர்பில் கவனம் செலுத்துவதில்லை என அவர் குற்றம் சாட்டினார்.

அதுமட்டுமன்றி குறைந்தது தமிழ் மக்களின் தேசிய பிரச்சினையான அரசியல் கூட அவர்களால் பெற்று கொடுக்க முடியவில்லை. அதற்காக அவர்கள் ஏன் முயற்சி எடுக்கவில்லை.

எனது அரசியல் துரோகியாக நான் கருதும் சந்திரிகா அம்மையார் சுதந்திரக் கட்சியை, ஐக்கிய தேசியக் கட்சியிடம் அடகு வைத்துள்ளார். அதேபோல் சுமந்திரன் ஊடாக கூட்டமைப்பையும் ஐக்கிய தேசியக் கட்சியிடம் அடகு வைத்துள்ளார் எனவும் அவர் கூறினார்.

மேலும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை தக்கவைத்து கொள்வதே சிறுபான்மை மக்களுக்கு உள்ள ஒரே ஆயுதம். ஆனால் சுமந்திரன் நிறைவேற்றதிகார முறைமை வேண்டாம் என கூறுகின்றார்.

ஆகவே கூட்டமைப்பு தமிழ் மக்களை மீண்டும் துன்பத்திற்குள் தள்ளவே முயற்சிக்கின்றது. எனவே கூட்டமைப்பிற்குள் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளும் சுமந்திரனின் நோக்கத்தில் இருந்து உங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

எனவே ரெலோ, புளொட் போன்ற கட்சிகள் கூட்டமைப்பில் இருந்து வெளியேற வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ம)


## வேலைவாய்ப்பு

இலங்கையின் முன்னணி நிறுவனமான GMI நிறுவனத்தின் புதிய கிளைகளான யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய பிரதேசங்களில் பணிபுரிய சிறந்த வாய்ப்பு இதோ! இன்றே அழையுங்கள்.

- *O/L, A/L* பயின்ற மாணவர்களுக்கு.
- முன்னனுபவம் அவசியமில்லை.
- 18 - 30 வயதுக்கு உட்பட்ட ஆண்/பெண் இருபாலாருக்கும்.
- தங்குமிட வசதி மற்றும் மருத்துவ வசதிகள் உண்டு.
- பயிற்சிக் காலத்தில் 15,500/= - 22,500/= வரையிலும் பயிற்சியினை பூர்த்தி செய்யும் பட்சத்தில் 45,000/= மேல் பெற்றுக்கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு:

**0779994807, 0778021371**

(4562)



**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**

(C-2862)



UK - 550 */=Kg
கனடா - 900 */=Kg
ஜேர்மனி - 700 */=Kg
நெதர்லாந்து - 700 */=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS


## கொழும்பில்...

பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அதனுடன் தொடர்புபட்ட பௌத்த அமைப்புகளின் போராட்டங்கள் நாட்டில் ஆங்காங்கே இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் சகல பௌத்த சிங்கள அமைப்புகளையும் ஒன்றிணைத்து சத்தியாக்கிரக போராட்டத்தை நடத்த பொது பல சேனா அமைப்பினர் தீர்மானம் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தீக்காயங்களு...

நபர் 3 நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி உயரிழந்துள்ளார்.

நாவாந்துறை கடற்கரை வீதியை சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான குணபாலன் கிருபாகரன் (வயது 45) என்பவரே மேற்படி உயரிழந்தவராவார்.

குறித்த நபர் கடந்த 13 ஆம் திகதி இரவு நிதானமற்ற நிலையில் வீட்டுக்கு சென்றுள்ளார். பின்னர் நுளம்பு வலையை விரித்து விட்டு நித்திரைக்கு சென்றுள்ளார். பின்னர் பீடி புகைப்பதற்கு தீக்குச்சியை மூட்டிவிட்டு அணைக்காமல் வெளியே வீசியுள்ளார். தீக்குச்சி நுளம்பு வலையில் பட்டு தீப்பற்றியுள்ளது. உடனடியாக அதை அணைக்க குறித்த நபர் முயற்சித்துள்ளார்.

ஆனால் அருகில் இருந்த மண்ணெண்ணெய் விளக்கு தவறுதலாக கீழே விழுந்து மண்ணெண்ணெய் நிலத்தில் சிந்தியதில் தீ பெரிதாக பற்றிக்கொண்டதுடன் குறித்த நபர் மேலும் தீ பற்றிக்கொண்டது. உடனடியாக குடும்பத்தினர் தீயை அணைத்ததுடன் உடனடியாக அவரை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர். சிகிச்சை பெற்று வந்த நபர் 3 நாட்களின் பின்னர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-9)


## 16-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

கடந்த 04.06.2018 திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

**திருமதி இரதி திருப்பரங்கிரிநாதன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (18.06.2018) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



**முதலியார் வளவு, இமையாணன், உடுப்பிட்டி.**

- குடும்பத்தினர்



**துரித தபால்கள் பொதிகள் சேவை**

எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில் 11Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு

3-5 வேலை நாட்களில்

| | |
|---|---|
| UK | -550/= |
| Germany | -650/= |
| France | -700/= |
| Australia | -800/= |

திருமுருகன் கொம் நெற்

கொழும்பு, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா.

Hotline -0777554528



## வேலைவாய்ப்பு

**Cleaning உடன் Garden வேலை**

நிறுவனம்: (வயது:18-35)

பிரெஞ்சுமொழி கற்பிக்கும் தனியார் நிறுவனம்

ALLIANCE FRANCAISE DE JAFFNA

61, Kachcheri-Nallur Road, Jaffna

Phone :- 021 222 8093

(4569)



## உடனடி வேலைவாய்ப்பு

சர்வதேச கம்பனியுடன் இணைந்து பணிபுரியும் வாய்ப்புக்களை வழங்கிவரும் கம்பனியானது மேலும் தனது புதிய கிளைகளை ஆரம்பிக்கிறது. குறைந்த தகைமை O/L, School leavers விண்ணப்பிக்கலாம்.

- பயிற்சிகள் இன்னோருவருக்கு பயிற்சிகள் வழங்கப்படும்.
- பயிற்சியின் போது 15000-18000 பின்னர் குறைந்தது 45000 வரை.

076 676 7620, 021 567 9001



**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532



**Door to Door Services**

GTV Express | Parcel.lk

- யாழ்ப்பாணம் — 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
- நெல்லியடி — 81A, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
- கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்பாக, 49 வீதி, கிளிநொச்சி
- வவுனியா — 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
- கொழும்பு 81/3, பகம் ஈ.ஐ.குரே மாவத்தை, கொழும்பு - 06.

## மகாராஜா பொதிகள் சேவை

நீங்கள் ஓர் நம்பகரமான பொதிகள் சேவையினை தேடுகிறீர்களா?



1Kgக்கு மேல் 1Kg க்கான கட்டணம்

| ஜேர்மனி | லண்டன் | பிரான்ஸ் | அவுஸ்ரேலியா |
|---|---|---|---|
| Rs.600 | Rs.600 | Rs.800 | Rs.800 |

30 வருடத்திற்கும் மேலான நம்பிக்கை

DHL | parcel.lk | UPS | Aramex

- யாழ்ப்பாணம் 0212224338/ 0214925024
- நெல்லியடி 0214930099
- கிளிநொச்சி 0214930330
- வவுனியா 0214930200
- கொழும்பு 0114654444/ 0112360926



## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

## அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576 | சாவகச்சேரியில் - இல.02, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576 | கிளிநொச்சியில் - இல.10, கண்டி வீதி, கரடிப்போக்கு கிளிநொச்சி (தபாலோ கட்சி அருகில்) 076 443 1576 | 021 222 3536


இப்பத்திரிகை வலம்புரி அச்சக ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.